பிரபஞ்ச ஜோதி பிரசுரம் சுடர் 4

As/10

# ஸ்பெயின் குழப்பம்

4961.
XXI B.49.
14250



கபல்லெரோ



பிராங்கோ

எழுதியது

வெ. சாமிநாத

முதற்பதிப்பு மார்ச்சு 1937

நவீனகதா பிரஸ், ரங்கூன்.

# நான்காவது

ஸ்பெயின் குழப்பம் எப்படியோ ஆரம்பித்தது. ஆனால் இன்னும் முடிவு தெரியவில்லை. அதைப்போலவே, இந்த நூலையும் நான் எப்படியோ ஆரம்பித்தேன். எப்படி முடித்திருக்கிறேன் என்று எனக்கே தெரிய வில்லை. ஸ்பெயின் குழப்பத்தைப் பற்றி வெளியாகும் செய்திகள் ஒரே குழப்பமாக இருக்கின்றன. இந்த நூலினால் இன்னும் அதிகமான குழப்பம், வாசகர்க ளின் மனத்தில் உண்டாகாமலிருந்தால் அதுவே என க்குத் திருப்தி.

சுமார் எழுபது வருஷங்களுக்கு முன், விக்டர் ஹ்யூகோ என்னும் பிரெஞ்சுப் புலவன் கூறினான்:— "ஸ்பெயின், மீண்டும் ஒரு முடியரசாகப் பிறக்கு மானால், அதனை எவரும் பொருட்படுத்த மாட்டார். ஆனால் அது, குடியரசாக மறுபடியும் ஜனனம் எடு க்குமானால் பெருமையுடைத்தாயிருக்கும்."

இவனுடைய வாக்கு, நமது தற்போதைய மனோ நிலையை எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகிறது?

'பிரபஞ்ச ஜோதி'யின் நான்காவது சுடராக, துரு க்கி சர்வாதிகாரியின் ஜீவிய சரித்திரத்தை வெளியிட ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஆனால், ஸ்பெயின் குழப்பம் அவனுக்கு முந்திக் கொண்டு விட்டது. உலகத் தில் எதிர் பாராத முக்கிய சம்பவங்கள் பல நடை பெறு கின்றன. அவற்றைக் கூடிய விரைவில் புத்தக வடிவ மாகத் தமிழர் முன்னிலைப்படுத்த வேண்டு மென்ற ஆவலினாலேயே, ஏற்கெனவே போட்டிருந்த திட்டங் களையும் சிறிது மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது.


தாது, மாசி உ௰. வெ. சாமிநாதன்

# அடக்கம்


I வாழ்வும் தாழ்வும் .... 1—8
II ஏற்றமும் இறக்கமும் .... 9--17
III முடியரசின் ஆட்டம் .... 18-31
IV குடியரசுத் தோற்றம் .... 32-36
V எதிர்ப்பில் ஒடுக்கம் .... 37-42
VI அடக்கினால் அடங்குமா ? .... 43-50
VII ஒற்றுமையின் உதயம் .... 51-59
VIII ஜூலை குழப்பம் .... 60-74
IX வல்லரசுகளின் கவலை .... 75-83
X சர்வாதிகாரமா ? ஜன ஆதிக்கமா? 84-89

## அநுபந்தம்

1. ஸ்பெயின் புரட்சியில் சம்பந்தப் பட்டவர்கள் வரலாறு ... 90-95
2. முக்கிய சம்பவங்கள் .... 96
3 பொதுக் குறிப்புகள் . ... 97-100


ஸ்பெயின் மேடை
CAIN

ஸ்பெயின்


ஓவிடோ
அஸ்ட்ரியாஸ்
கலீஷியா
லியோன்
லியோன்
பர்கோஸ்
ஓல்ட் காஸ்டிலே
வல்லடோலியா
நவர்ரா
ஆரகான்
காடலோனியா
பார்ஸிலோனா
பெலாரிக் தீவுகள்
ஸாரகோஸா
ஸாலமாங்கா
மாட்ரிட்
டோலேடோ
நியூ காஸ்டிலே
ஏஸ்ர மதுரா
வலன்ஷியா
வலன்ஷியா
லிஸ்பன்
போர்த்துகல்
படஜோஸ்
மூர்ஷியா
மூர்ஷியா
அலிகண்டி
கார்டகேனா
கோர்டோவா
செவில்லே
அண்டலூஸ்யா
கிரானடா
காடிஸ்
ஜிப்ரால்டர்
மலாகா
க்யூடா

# ஸ்பெயின் குழப்பம்

## I

## வாழ்வும் தாழ்வும்

1492-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் மூன்றாந்தேதி வெள்ளிக்கிழமை. அன்று காலை நேரத்தில் பாலாஸ் ‡ துறை முகத்தில் மூன்று கப்பல்கள் வரிசையாக நிற்கின்றன. அவற்றின் மீது ஸ்பெயின் தேசத்துக் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. கப்பலிலுள்ளவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள். நடுவேயுள்ள கப்பலில் ஒருவன் கம்பீரமாக நிற்கிறான். அவன் முகத்தில் ஒரே பிடிவாதம். அவன் கண்கள் எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவனைப்பார்த்துக் கரையிலே யுள்ளவர்கள் கண்மூடிப் பிரார்த்தனை செய்கிறார்கள். அவனும், தொப்பியைக் கழற்றி வைத்துக்கொண்டு, தலைகுனிந்து வணக்கஞ் செலுத்துகிறான். கப்பல்களும் நகரத் தொடங்கி விட்டன.

அந்தக் கம்பீர புருஷன் யார்? அவன்தான் கொலம்பஸ். †எங்கே போகிறான்? புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க. அப்பொழுது ஸ்பெயின் தேசத்து அரசு கட்டிலில் அமர்ந்திருந்த இஸபெல்லா—பெர்டிணாந்து தம்பதிகள் கொலம்பஸுக்கு எல்லாவிதமான ஆதரவுகளையும் கொடுத்து அனுப்பினார்கள். அவன், ஸ்பெயி

---

‡ Palos—ஸ்பெயின் தேசத்தின் தென்கிழக்கிலுள்ள ஒரு துறைமுகம்.

† Christopher Columbus. 1451—1506.

னுக்குப் பலபிரதேசங்களைச் சேர்த்துக் கொடுத்ததோடு கூட, தானும் அழியாத புகழைச் சம்பாதித்துக்கொண்டான்.

கொலம்பஸ் புறப்பட்ட வெள்ளிக்கிழமை, ஸ்பெயின் தேச சரித்திரத்திலே குறிப்பிடத்தக்க நாள். அன்று முதல், ஸ்பெயினின் நல்வாழ்வு உச்சநிலைக்கு ஏறத்தொடங்கியது. சுமார் இருநூறு வருஷகாலம் வரையில் ராஜ்ய விஸ்தீரணம், குடிவளம், இலக்கிய வளர்ச்சி முதலிய அனைத்திலும் ஸ்பெயின் முன்னணியில் நின்றது.

1936ம் வருஷம் ஜுலை மாதம் பதினேழாந்தேதி. அதே வெள்ளிக்கிழமைதான்! ஆனால் அன்று ஸ்பெயின் தேசம் எவ்வளவு கோரமான காட்சியளித்தது! ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி ஒவ்வொருவரும் கையில் ஆயுதந்தாங்கிப் போர்க்கோலத்துடன் நின்றார்கள். வீதிகளில் தலைகள் உருண்டன! பிணங்கள் குவிந்தன! ரத்தம் பெருக்கெடுத்தோடியது! ஆ! என்ன வீழ்ச்சி! 450 வருஷங்களுக்கு முன்னர், இந்த நாடு இருந்த சீரென்ன? இருபதாம் நூற்றாண்டின் முற்பாகத்தில் இதற்கு இத்தகைய கதி ஏற்படுமென்று இஸபெல்லா-பெர்டினந்து தம்பதிகள் கனவிலேனும் கருதியிருப்பார்களா?

வாழ்வு ஒரு காலம்! தாழ்வு ஒரு காலம்!

ஸ்பெயின் எங்கே யிருக்கிறது? ஐரோப்பாவின் தென் மேற்கு மூலையில். இதன் மூன்று பக்கங்களிலும் சமுத்திரம். வடக்கே பிரான்ஸ் தேசம். இந்தத் தீபகற்பத்தின் மேற்குப் பக்கந்தான் போர்த்துகல்

என்ற தனி நாடு. போர்த்துகலும் ஸ்பெயினும் சேர்ந்த இந்தத் தீபகற்பத்திற்கு 'இபேரியன் தீபகற்பம்'‡ என்று பெயர். ஸ்பெயினுக்குச் சொந்தமாக, மத்திய தரைக் கடலில் சில சிறிய தீவுகள் உண்டு. இவற்றிற்கு 'பெலாரிக் தீவுகள்'§ என்று பெயர். அப்படியே, ஆப்ரிக்காவுக்கு வடமேற்கே அத்லாந்திக் மகாசமுத்திரத்தில் சில தீவுகள் இதற்குச் சொந்தம். இவற்றிற்கு 'கானரி தீவுகள்' $ என்று பெயர். இவையனைத்தையும் சேர்த்து ஸ்பெயின் ராஜ்யத்தின் மொத்த விஸ்தீரணம் 196,607 சதுரமைல். மொத்த ஜனத்தொகை 24,583,096. அதாவது விஸ்தீரணத்தில் சென்னை மாகாணத்தைவிடப் பெரியது. ஆனால் ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதிதான்.

இந்த ஸ்பெயின் தேசத்தை மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னர் பொனீஷியர்கள் என்பவர்கள் கைப்பற்றி, இதன் இயற்கை வளங்களைச் சுரண்டிக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்குப் பிறகு, ரோமர்கள் இந்த நாட்டைப்பிடித்து 'தெய்விகத் தன்மை பொருந்திய ரோம ஏகாதிபத்திய'த்தோடு சேர்த்துக் கொண்டார்கள். இவர்களுக்குப் பின்னர் விஸிகோதியர்களின் ¶ விஜயம். இவர்களும் சுமார் 300 வருஷம் வரை தான் இந்த நாட்டைத் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருந்தார்கள். ஏனென்றால் கி. பி. எட்டாவது

‡ Iberian Peninsula.
§ Balearic Islands.
$ Canary Islands.

¶ Visigoths. பழைய ஜர்மானிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நாளடைவில் மேற்கு கோதியர்கள் (Visigoths) என்றும், கிழக்கு கோதியர்கள் (Ostrogoths) என்றும் பிரிந்தார்கள்.

நூற்றாண்டுத் தொடக்கத்திலே, மூர்கள் என்று அழைக்கப்பெறுகிற அராபியர்கள் இந்த நாட்டின் மீது படையெடுத்து இதனைத் தங்கள் கைவசப்படுத்திக் கொண்டு விட்டார்கள். இதனால் விஸிகோதியர்கள், ஸ்பெயினின் வடபாகத்திலுள்ள மலைப்பிரதேசங்களில் போய்த்தஞ்சம் புகுந்தார்கள். இவர்கள் கிறிஸ்தவர்கள். மூர்களோ இஸ்லாம் மதத்தைப் பரப்ப முயன்றவர்கள்.

மூர்கள், ஸ்பெயினின் தெற்குப் பிரதேசங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குட்படுத்தி, சுமார் 700 வருஷ காலம் திறமையாக ஆண்டுவந்தார்கள். ஜனங்களுடைய நன்மையை நாடிப் பல காரியங்களைச் செய்தார்கள். இப்பொழுது கூட, ஸ்பெயின் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும் ஒருவன், அங்குள்ள கட்டிடங்கள், ஜனங்களின் பழக்கவழக்கங்கள் முதலியவற்றில் மூர்களின் ராஜ்யபார அடையாளம் கலந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

மூர்கள், ஸ்பெயினில் சுமார் 700 வருஷம் ஆட்சி புரிந்து வந்த போதிலும் நிம்மதியான வாழ்க்கையை நடத்தவேயில்லை. வடபாகத்திலிருந்த விஸிகோதியர்களுக்கும் இவர்களுக்கும் எப்பொழுதும் போராட்டந்தான். கடைசியில், கி. பி. பதினைந்தாவது நூற்றாண்டில், இவர்கள், ஸ்பெயினிலிருந்து அடியோடு விரட்டியடிக்கப்பட்டு விட்டார்கள். இதற்குக்காரணமாயிருந்தவர்கள் இஸபெல்லா—பெர்டினாந்து தம்பதிகள். இவர்கள் தான், கொலம்பஸுக்கு ஆதரவு அளித்து, புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க அனுப்பியவர்கள். இவர்கள் தான், தனித்தனியாகப் பிரிந்திருந்த நாட்டரசர்கள் எல்லாரையும் ஒன்று கூட்டுவித்து, மூர்களை எதிர்த்து நின்று போராடி வெற்றி கொண்டவர்கள். ஐரோப்பிய அரசியல் அந்தஸ்திலே ஸ்பெயினுக்கு ஒரு கௌரவ

ஸ்தானத்தைச் சம்பாதித்துக் கொடுத்த பெருமையும் இவர்களுடையதுதான். ஆனால் இந்தப் பெருமையிலே, புகழிலே ரத்தக்கறைகள் நிறைந்திருந்தன. வேறு பல மாசுகளும் படிந்திருந்தன.

இஸபெல்லா—பெர்டினந்து தம்பதிகள் காலத்திலிருந்து, அதாவது பதினைந்தாவது நூற்றாண்டின் கடைசி பாகத்திலிருந்து பல புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, ஸ்பெயினுடன் சேர்க்கப்பட்டனவென்பது உண்மைதான். ஸ்பெயினின் ஏகாதிபத்தியக் கட்டிடம் வளர்ந்தது என்பது நிஜந்தான். ஆனால் எத்தனை நாகரிகங்களினுடைய அழிவின்மீது? இதற்காக எத்தனை உயிர்கள் யமதர்மராஜனுக்குக் காணிக்கை செலுத்தப்பட்டன தெரியுமா? மெக்ஸிகோ என்ற நாட்டைக் கண்டுபிடித்து அதனை ஸ்பெயினுடன் சேர்த்த கோர்டெஸ்* என்பான் கூறுகிறான்:—

> "தங்கத்தையும் உயர்ந்த உலோகப்பொருள்களையுமே நான் தேடிக்கொண்டிருந்தேன். இதன் காரணமாக ஏற்பட்ட சுதேசிகளின் அழிவைப்பற்றியோ, அந்த நாட்டு நாகரிகத்தின் சீர்குலைவைப் பற்றியோ நான் கவலை கொள்ளவில்லை."

இவன் மெக்ஸிகோவைக் கைப்பற்றுவதற்காக, சுமார் ஒரு லட்சம் மெக்ஸிகர்களை அழித்துவிட்டான். இப்படித்தான் வேறு பல ஸ்பானியரும் கப்பல்களில் ஏறிக் கடல் கடந்து சென்று, 'புதிய உலக'த்தின் புதிய தேசங்கள் பலவற்றைக் கண்டு பிடித்து ஸ்பெயினுக்குச் சேர்த்துக் கொடுத்தார்கள்.

அது மட்டுமா? இஸபெல்லா—பெர்டினந்து தம்பதிகள், ஸ்பெயினின் கட்டுப்பாடு உடையாமலிருக்கவும்

---

* Cortez. 1485–1547

அதன் அரசியல் அந்தஸ்தை உயர்த்தவும் மதத்தின் துணையை நாடினார்கள். இவர்கள் காலத்திலும் இவர்களுக்குப்பின்னரும் மதத்தின் பெயரால், அந்தோ! எவ்வளவு அக்கிரமங்கள்? எத்தனை உயிர்களின் பலி? கி. பி. பதினைந்து, பதினாறு, பதினேழாவது நூற்றாண்டுகளில் ஐரோப்பா முழுவதிலும் மத அட்டூழியங்கள் பல நடைபெற்றபோதிலும், ஸ்பெயின் தேசத்தில்தான் இவை தலை விரித்தாடின. கத்தோலிக்க கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளை அங்கீகரியாதவர்கள் எல்லாரும் 'வேதப் புரட்டர்கள்' என்று சொல்லிப் பலவித ஹிம்சைகளுக்குட்படுத்தப் பெற்றார்கள். ஆங்காங்கு விசாரணை சபைகள் ஏற்படுத்தப் பெற்றன. இந்த மத விசாரணை சபைகள் சுமார் 300 வருஷகாலம்—பதினெட்டாவது நூற்றாண்டு வரை—ஸ்பெயினின் பலபாகங்களிலும் நிலைபெற்று கிறிஸ்தவ மதத்தைக் காப்பாற்றின! இந்த 300 வருஷகாலத்தில் சுமார் மூன்றரை லட்சம் பேர் சொல்ல முடியாத கஷ்டங்களை அநுபவித்தார்கள். சுமார் முப்பத்திரண்டாயிரம் பேர் உயிரோடேயே கொளுத்தப்பட்டிருக்கிறார்கள! எல்லாம் மதத்தின் பெயரால்!!

இஸபெல்லா—பெர்டினந்து தம்பதிகளின் தலைமுறையார் சுமார் 200 வருஷகாலம் ஆண்டு கொண்டிருந்தனர். கி. பி. 1700 ம் வருஷம் ஆண்டுவந்த அரசன் சந்ததியில்லாமல் இறந்து விட்டான். இவனுக்குப் பின்னால் பட்டத்துக்கு யார் வருவதென்பதைப் பற்றி ஒரு போராட்டம் நடைபெற்றது. கடைசியில் போர்பன்¶ வம்சத்தினர் சிங்காதனத்தில் அமர்ந்தார்கள். இந்தப் பரம்பரைதான் 1931 ம் வருஷம் வரை ஸ்பெயினில் ஆண்டுவந்தது.

---

¶ Bourbons.

கி. பி. 1800ம் வருஷம் நெபோலியன் ஸ்பெயின் மீது கண்ணோட்டர் செலுத்தினான். தன் சகோதரனை ஸ்பெயின் சிங்காதனத்தில் அமர்த்த ஆசை கொண்டான். உடனே ஸ்பெயின் மீது யுத்தந்தான். இந்த யுத்த காலத்தில் ஸ்பானியர் காட்டிய வீரம், ஸ்பெயின் தேச சரித்திரத்திலே மிகச் சிறப்பான ஸ்தானத்தைப்பெற்றிருக்கிறது.

நெபோலியன் படையெடுப்புக்குப் பிறகு ஸ்பெயினின் கட்டுப்பாடு குலைந்து விட்டது. ஜனங்கள் தங்கள் உண்மை நிலையை அறியத் தொடங்கினார்கள். அரசனுக்காக போர் புரிந்தார்களானாலும் முடியரசில் நம்பிக்கை இழந்து விட்டார்கள். அக்காலத்திலிருந்தே ஜனங்கள் மனத்தில் குடியரசு எண்ணம் தோன்ற ஆரம்பித்தது. எனவே பத்தொன்பதாவது நூற்றாண்டு முழுவதிலும், ஸ்பெயினில் அரசனுக்கும் குடிகளுக்கும் போராட்டம், முதலாளி தொழிலாளி சச்சரவு முதலியன பல சந்தர்ப்பங்களில் நடைபெற்றிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட வேண்டியதில்லையல்லவா? தவிர, இந்த நூற்றாண்டின் மத்தியிலே பொதுவுடைமைக் கொள்கைகள் ஸ்பெயினில் பரவ ஆரம்பித்தன. அரச பரம்பரையினர் அமர்ந்திருந்த ஆசனமோ அடிக்கடி ஆட்டங்கொடுத்து வந்தது. அதில் அமர்ந்திருந்தவர்களோ பலஹீனர்களாயிருந்தார்கள். தங்கள் உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதே இவர்களில் பலருக்குக் கஷ்டமாயிருந்தது.

இத்தகைய சிங்காதனத்திற்குரியவனாகவே 13வது அல்பான்ஸோ மன்னன் கி. பி. 1886ம் வருஷம் பிறந்தான். இவன் பிறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னேயே இவன் தகப்பன் இறந்து விட்டபடியால் அரசரி

மையுடனேயே இவன் பிறந்து விட்டான். அதனால்தான் தனது வாழ்க்கையின் இடைக்காலத்திலேயே இவன் அந்த உரிமையை இழந்து விட்டான் போலும்! இவன் காலத்திலே ஸ்பெயினில் ஏற்பட்ட குழப்பங்கள் பல. இவன் கையாண்ட அடக்கு முறைகளும் பல. இவன் விக்டோரியா மகாராணியின் பெண் வயிற்றுப் பேத்தியாகிய ஈனு* என்பவளை 1906ம் வருஷம் விவாகஞ் செய்து கொண்டான். விவாக தினத்தன்றே இவன் உயிருக்கு உலை வைக்கப்பெற்றது. தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டான். இதற்குப் பிறகு, இவனைக் கொலைசெய்ய நடைபெற்ற முயற்சிகள் பல. ஆனால் எல்லாவற்றினின்றுமே இவன் தப்பித்துக் கொண்டான். கடைசியில் இவன் 1931ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14ந் தேதி ஸ்பெயினைவிட்டு வெளியேறி விட்டான். இதனுடன் ஸ்பெயினில் முடியரசு மறைந்து விட்டது. குடியரசு உதயமாயிற்று. ஆனால் இதனை அவ்வப்பொழுது மறைத்து வரும் மேகங்கள் தானெத்தனை?

---

* Princess Ena of Battenberg.

# II

## ஏற்றமும் இறக்கமும்

ஸ்பெயினிலே ஏற்றத்தாழ்வுகள் நிரம்ப உண்டு. இயற்கையிலே யாகட்டும், செயற்கையிலே யாகட்டும் இந்த வித்தியாசங்கள் பல படக் காணப்படுகின்றன. இதனாலேயோ என்னவோ, ஐரோப்பிய வல்லரசு களின் ஆலோசனை மேடையில் இதற்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்கப்படவில்லை. 'ஸ்பெயின் தேசம் ஐரோப்பாவிலே இருந்தாலும் ஐரோப்பாவினுடையதாக இல்லை' என்று ஓர் ஆசிரியன், ஸ்பெயினின் நிலைமையை மிக அழகாகச் சுருக்கிக்கூறுகிறான்.

உயர்ந்த மலைத் தொடர்களுக்குப் பக்கத்திலே ஆழ்ந்த பள்ளத்தாக்குகள். செழுமையும் பசுமையும் நிறைந்த பூப்பிரதேசங்களின் அருகாமையில் வரண்டு போன கட்டாந்தரைகள். ஜனநெருக்கம் ஒரு மாகாணத்தில்; அதற்குப் பக்கத்து மாகாணத்தில் ஜன நடமாட்டமே இராது.

ஜனங்களிடத்திலேயும் இந்த ஏற்றத்தாழ்வுகளைப் பல துறைகளிலும் காண்கிறோம். ஏராளமான பூஸ்திதி படைத்த நிலச்சுவான்தார்களுக்குப் பக்கத்தில், நிலமே என்று ஏங்கி நிற்கும் லட்சக்கணக்கான ஜனங்கள் வாழ்கிறார்கள். ராஜபோகத்திலே வாழும் பெரிய மடாதிபதிகளின் முன்னே, கிராமப் பாதிரிமார்கள் பிச்சைக்காரக் கோலத்துடன் காட்சி தருகிறார்கள். கொழுத்த சம்பளம் வாங்கும் ராணுவத்தலைவர்களுக்குக் கீழே, வயிற்று ஜீவனத்திற்குக் கூட பற்றாத சம்பளம் வாங்கும் போர்வீரர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள்

அறிவுத்துறையிலே கூட ! இந்த ஏற்றத்தாழ்வுதான். உலகம் புகழும் கவிஞர்கள், நாடகாசிரியர்கள், விஞ்ஞான சாஸ்திரிகள் முதலியோர் ஸ்பெயினிலே இருக்கிறார்கள். ஆனால் நூற்றுக்குச் சுமார் 45 பேர் எழுதவோ, படிக்கவோ தெரியாதவர்கள்.

நிருவாக சௌகரியத்திற்காக, ஸ்பெயினை ஐம்பது மாகாணங்களாக (ஜில்லாக்கள் போல) ப்பிரித்திருக்கிறார்கள். ஆனால் இயற்கையிலேயே, இந்த நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியினரும், தனித்தனி நாட்டினர் போலவே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் பேசும் பாஷையும் வெவ்வேறு. பழக்கவழக்கங்களில் கூட மாறுபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக வடக்கேயுள்ள காடலான் மாகாணத்தவன் பேசும் பாஷையை, ஸ்பெயினின் தலைநகரான மாட்ரிட்டிலுள்ளவர்கள் தெரிந்து கொள்ள முடியாது. அப்படியே கலீஷியா மாகாணத்தான், பாஸ்க் மாகாணத்தானை ஒரே மனப் பான்மையுடன் சந்தித்துப் பேசமாட்டான். எப்படி இந்தியாவில் வசிப்பவர் அனைவரும் இந்தியர்கள் என்ற பரந்த எண்ண மில்லாமல், சென்னை மாகாணத்தான் என்றும், பஞ்சாப் மாகாணத்தான் என்றும், தமிழன் என்றும், தெலுங்கன் என்றும் மாகாணவாரியாகவும், பாஷைவாரியாகவும் பிரித்துச் சிலர் பேசுகிறார்களோ அப்படியேதான், ஸ்பானியர்களுடைய பழக்கமும். இதனாலேயே ஸ்பெயினை, 'நாடுகள் பல அடங்கிய நாடு' என்று சரித்திரக்காரர்கள் அழைக்கிறார்கள்.

வடக்கேயுள்ள காடலான் மாகாணம், பாஸ்க் மாகாணம், கலீஷியா மாகாணம் ஆகியவை, தங்களுடைய சுயேச்சைக்காக எப்பொழுதும் போராடி வந்

திருக்கின்றன. இவற்றில் காடலான் மாகாணந்தான் செழிப்புள்ளது; கைத்தொழில்களில் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இந்த மாகாணத் தலைவர்கள், தங்களை ஸ்பானியர்கள் என்று சொல்லிக் கொள்வதைவிட காடலோனியர்கள் என்று சொல்லிக் கொள்வதிலேயே பெருமை கொள்கிறார்கள். இந்த மாகாணத்தின் தலைநகராகிய பார்ஸிலோனா, மாட்ரிட்டைப் போலவே முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. காடலான் மாகாணத்தவர்கள், தங்களுடைய சுதந்திரத்திற்காகப் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். கடைசியில் இவர்களுடைய மாகாண சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. இந்தமாகாணத்திற்கென்று தனி பார்லிமெண்டு உண்டு. சட்டங்களை நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வரும் அதிகாரங்கள் முதலியனவும் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இனி, இந்த ஏற்றத்தாழ்வுகளைப்பற்றி நாம் சிறிது விவரமாகத் தெரிந்துகொண்டால்தான், 1936ம் வருஷம் ஜூலை மாதம் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பத்தின் அடிப்படையை அறிந்துகொள்ள முடியும்.

ஸ்பெயின், இந்தியாவைப் போலவே ஒரு விவசாயநாடு. ஜனங்களிற் பெரும் பகுதியினர், விவசாயத்தின் மூலமாகவே தங்களுடைய ஜீவனத்தை நடத்துகிறார்கள். ஜனத்தொகையில், நூற்றில் 56 பேருக்கு விவசாயமே ஜீவனம்.‡

ஸ்பெயினில், நிலச்சுவான்தார்களுடைய ஆதிக்கம் பல தலைமுறைகளாக இருந்து வந்திருக்கின்றமையால், ஒரு சிலரிடத்தில் பெரும் பகுதி நிலங்க

‡ இந்தியாவில் நூற்றுக்கு 66 பேர் விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ளும், பெரும்பாலோரிடத்தில் சிறுபகுதி நிலங்களும் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, ஸ்பெயினில் மொத்தம் 50 மாகாணங்களல்லவா? இவற்றில் 27 மாகாணங்களில், ஜனத்தொகையில் நூற்றுக்கு இரண்டு பேர்தான் நிலச்சுவான்தார்கள். ஆனால் இவர்களிடத்தில் நூற்றுக்கு 67 விகிதம் நிலங்கள் இருக்கின்றன. இதற்கு நேர்மாறாக, நூற்றுக்கு 76 பேரிடத்தில் நூற்றுக்கு 4¾ விகிதமே நிலங்கள் இருக்கின்றன. அநேக மாகாணங்களில், அந்தந்த மாகாணத்தின் பாதி பாகம், ஒரு சில நிலச்சுவான்தார்களுடைய சுவாதீனத்தில் இருக்கின்றது. இன்னொரு புள்ளி விவரத்தைக்கவனிப்போம். ஸ்பெயினில் மொத்தம் 8 லட்சம் விவசாய குடும்பங்கள் இருக்கின்றன. இவற்றில், ஒரு லட்சம் குடும்பங்கள்தான், அவைகளுக்குரிய நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தினால் ஜீவனம் செய்கின்றன. மற்ற 7 லட்சம் குடும்பங்களில் பாதி குடும்பங்கள், தங்களுக்கு விவசாயத்தின் மூலமாகக் கிடைக்கும் வருமானம் போதாமல் வேறுவேலைகளைச் செய்யவேண்டியிருக்கின்றது. மற்றப்பாதி குடும்பங்களோ, நிலமேயில்லாமல், மற்ற விவசாயிகளிடத்தில் கூலி வேலை செய்து பிழைக்கின்றன.

நிலச்சுவான்தார்கள், தங்களிடமுள்ள பூஸ்திதியில் ஒரு பாகத்தை, விவசாயத்திற்கே விடாமல், தாங்கள் வேட்டையாடுவதற்கென்றும், வேறு பல களியாட்டங்களுக்குரிய இடங்களாகவும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இதனால், ஏராளமான பூப்பிரதேசங்கள் இருந்தபோதிலும், அவை பயன்படுத்தப் படாமலே கிடக்கின்றன. விவசாயத்திற்கு லாயக்கான மொத்த நில விஸ்தீரணத்தில் நூற்றுக்கு 40 பாகத்தில் தான், விவசாய உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் என்ன தெரிகிறதென்றால், ஸ்பெயினில் அதிகமான நிலங்கள்

இருக்கின்றன. அவைகளில் பொருள்களை உற்பத்தி செய்ய ஏராளமான ஜனங்களும் இருக்கிறார்கள். ஆனால் ஜனங்களுக்குத் தகுந்தபடி நிலங்களோ, நிலங்களுக்குத்தகுந்தபடி ஜனங்களோ ஈவு செய்யப்படவில்லை. இதனால் உழைத்துப் பிழைக்கத் தயாராயிருப்பவர்கள், நிலத்தை வைத்துக்கொண்டு அவற்றைப் பலருக்கும் பயன்படுத்தாத நிலச்சுவான்தார்களிடத்தில் அதிருப்தி கொள்ளலானார்கள். இந்த அதிருப்தியை அடக்க நிலச்சுவான்தார்கள் அரசாங்கத்தின் துணையை நாடியதில் என்ன ஆச்சரியம்?

ஸ்பெயினைப்பற்றி ஒரு பத்திரிகாசிரியன் வருணிக்கும்போது, 'நாடில்லாத ஜனங்களைக்கொண்டது; ஜனங்களில்லாத நாடு இது' என்று கூறினான். இஃது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது?

ஸ்பெயினில் கைத்தொழில்கள் அதிகம் இல்லை. காடலோனியா மாகாணத்தில்தான் நெசவுத்தொழில் முதலியன சிறிது நடைபெறுகின்றன. மற்ற மாகாணங்களில் நடைபெறும் கைத்தொழில்களில் பெரும்பாலன, அந்நியநாட்டாருடைய வசத்தில் இருக்கின்றன. எனவே முதலாளிகள் தங்கள் லாபத்தைக் கருதுவதும், தொழிலாளர்கள் தேசிய நன்மையை நாடுவதும் இயற்கைதானே. விளைவு என்ன? வேலைநிறுத்தம்! துப்பாக்கிப் பிரயோகம்! தொழிலாளர் அதிருப்தி!

எந்தத் தனி மனிதனையும் விட பல முள்ளது; எல்லாப் பணக்காரர்களையும் விட ஆடம்பர முள்ளது; அரசாங்கத்தைவிட அதிக அதிகாரமுடையது; ராணுவத்தைக்காட்டிலும் அதிகமாக வியாபித்துள்ளது. ஸ்பெயினில் இத்தகைய அதிசயம் ஒன்றைக்காணலாம்.

அஃது எது? அதுதான் பாதிரிமார்களின் ஆதிக்கம். ஸ்பெயினில் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதிகம். மொத்த ஜனத்தொகையில் 35 ஆயிரம் பேர்தான் கத்தோலிக்கரல்லாதார். கிறிஸ்தவ மதத்தைப் பலாத்காரமாக வேரூன்றச் செய்த பெருமை ஸ்பெயினைச் சேர்ந்ததல்லவா!

கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தின் தலைவரான போப் ஆண்டவர் இத்தலியில் இருக்கிறார். அந்த நாட்டிலே கூட, இருபதினாயிரம் பேருக்கு ஒரு பாதிரி விகிதந்தான் இருக்கிறார். ஆனால் ஸ்பெயினில், தொள்ளாயிரம் பேருக்கு ஒரு பாதிரி. மொத்தம் ஸ்பெயினில் 106,734 பாதிரிகள் இருக்கிறார்கள். இத்தனை பேர் அதிகமாயிருப்பது கூட ஆச்சரியமில்லை. இவர்கள் ஒரு கட்டுப்பாடாக இருந்து, தேசத்தின் தலைவிதியை எழுதும் எழுத்தாளர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் ஜனங்களுடைய ஆன்மாவுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய உடலுக்குக்கூட காப்பாளர்களாக அமைந்துவிட்டார்கள். இவர்கள் மதபோதகர்களாக மட்டுமில்லை. பள்ளிக்கூட ஆசிரியர்களாகவும், கைத்தொழில் முதலாளிகளாகவும், வட்டித்தொழில் செய்வோராகவும் இருக்கிறார்கள். தேசத்தின் மொத்த செல்வத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்தப் பாதிரிமடங்களை சேர்ந்தனவாயிருக்கின்றன. இந்தச் சொத்துக்களைப் பராமரிப்பதற்காக இவர்கள் எப்பொழுதும் முடியாசின் முக்கியத் தூண்களாக இருக்கவேண்டியிருந்தது.

ஸ்பானியர்கள், பொதுவாகவே மதபக்தியுடையவர்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தப் பக்தி, குருட்டு நம்பிக்கைகளாகவே பரவியிருந்தது. ஸ்பெயின் தேசத்தில் ஒரு வழக்கம். அதாவது ஒருவன் இறந்து

விட்ட பிறகு, அவனுடைய ஆன்மா சாந்தி அடைவதற்கு, பாதிரிமார்களைக் கொண்டு பிரார்த்தனை செய்யச் சொல்வதுண்டு, ஒவ்வொரு பிரார்த்தனைக்கும், இவ்வளவு கட்டணம், என்று ஏற்பாடு செய்து இறந்து போகிறவர்களே, தங்களுடைய சொத்தில் ஒரு பாகத்தை உயில் எழுதிவைத்து விடுவார்கள். இதனால் இறந்து போனவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக ஆக, பாதிரி மடங்களின் சொத்துக்களும் பெருகிக் கொண்டு வந்தன. மனிதர்கள் இறக்கிறார்கள். ஆனால் மடங்கள் இறப்பதில்லையல்லவா?

மற்றும், குடும்பங்களில் ஏதேனும் மதச்சடங்குகள் நடைபெற்றால், அப்பொழுது பாதிரிமார்கள் வந்து கூடுவார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்குரிய கட்டணத்தை வசூலிக்க முனைந்து நிற்பார்கள். ஆனால் மாதாகோவில்களில் நடைபெறும் தெய்வப் பிரார்த்தனைகளின்போது, பெயருக்காக ஓரிரண்டு பாதிரிமார்கள் இருப்பார்களே தவிர, அதிகமான பேர் காணப்படமாட்டார்கள்.

ஸ்பெயினில் 1931-ம் வருஷம் வரை, அரசாங்கமும் மதமும் ஒன்றுபடப் பிணைக்கப் பட்டிருந்தபடியால், பாதிரி மார்களுக்குச் சட்ட பூர்வமாகவே சில சலுகைகள் காட்டப்பட்டிருந்தன.

இத்தகைய காரணங்களினால், மத பக்தி நிறைந்த ஸ்பானியர்கள், பாதிரிமார்களின் மீது துவேஷங் கொள்ள ஆரம்பித்தார்கள். பாதிரிமார்களோ, தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள எல்லா முறைகளையும் கையாண்டார்கள். இதற்காக அரசியலில் தலையிட்டார்கள். புதிய அரசியல் கட்சிகளை வகுத்துக் கொண்டார்கள்.

பாதிரி மடங்களுக்கு அடுத்தபடியாக, ஸ்பெயினில் அதிகமான ஆதிக்கம் கொண்டிருப்பது ராணுவம். மற்ற ஐரோப்பிய நாடுகளிலுள்ள ராணுவங்களைவிட, ஸ்பெயின் தேசத்து ராணுவம் பலவிதங்களிலும் தனித்வம் வாய்ந்தது. எப்படியென்றால், ஸ்பானிஷ் ராணுவம் எந்த அந்நிய நாட்டு யுத்தத்திலும் வெற்றிபெற்றதே கிடையாது. திறமையற்ற இந்த ராணுவத்திற்கு, அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து செலவழிக்கப்பெறும் பணமோ ஏராளம். பொதுஜனங்களுடைய அபிலாஷைகளுக்கு இது எப்பொழுதுமே விரோதியாயிருந்து வந்திருக்கிறது

இருபதாவது நூற்றுண்டுத் தொடக்கத்திலிருந்தே ஸ்பெயின் ராணுவத்திற்கு அதிகமான வேலை இல்லை. ஏனென்றால், அதற்குமுன்னரே, அமெரிக்காவுடன் யுத்தம் செய்து தனது குடியேற்ற நாடுகளை ஸ்பெயின் இழந்துவிட்டது. எஞ்சி நின்றது மொராக்கோ பிரதேசம் ஒன்று தான். ஆனாலும், ராணுவத்தின் பலம் குறைக்கப்படவேயில்லை. எனவே, இது (ராணுவம்) தனது கவனத்தை உள்நாட்டில் செலுத்தத் தொடங்கியது.

1898ம் வருஷத்திலிருந்து ஸ்பெயினில் தொழிலாளர் இயக்கம், குடியரசு எண்ணம் முதலியன வலுத்துவந்தன. இவற்றினால் பாதிக்கப்பட்ட முடியரசினர், கைத்தொழில் முதலாளிகள், நிலச்சுவான்தார்கள், பாதிரிகள் முதலியோர் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு ராணுவத்தின் துணையை நாடினார்கள். ராணுவ வர்க்கமும், தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு, மேற்கூறிய வர்களுக்கு உதவிசெய்ய வேண்டியதாயிருந்தது.

இவர்கள் அனைவரும் எப்பொழுதும் ஒரு கட்டுப்பாடாகவே இருந்தார்கள். ஒருவருடைய ஆபத்திலே மற்றவர்கள் கைகொடுத்தார்கள். இந்தப் பரஸ்பர உதவியிலும் சுயநலந்தான். ஆம்; முதலாளித்துவமும் சுயநலமும் நெருங்கிய தொடர்புடையன வல்லவா? இந்தக் கூட்டத்தினர் அனைவரையும் ஒன்று சேர்த்தே, 'பாசிஸ்டுகள்' என்று பொதுவாக அழைத்தார்கள் அரசியல் வாதிகள்.

இத்தகைய ஏற்றத்தாழ்வுகள், ஸ்பெயினுடைய தேசீய வாழ்வின் எல்லாத் துறைகளிலும், பல வருஷங்களாகப் படர்ந்திருக்கின்றன. இவற்றைச் சமன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுந்த கிளர்ச்சிகள் பல. இவற்றை அடக்க முற்பட்ட முயற்சிகளும் பல. இக்கக் கிளர்ச்சிக்கும் முயற்சிக்கும் பல நூற்றாண்டுகளாக நடந்து வந்திருக்கிற போராட்டத்தின் ஒரு பகுதி வெளித் தோற்றந்தான் 1936-ம் வருஷ ஜூலை மாதத்துக் குழப்பம்.

# III

# முடியரசின் ஆட்டம்

13-வது அல்பான்ஸோ மன்னன், தனது தகப்பனுடைய மரணத்தின் நிழலிலே பிறந்தான். ஏற்கனவே ஆட்டங் கொடுத்துக்கொண்டிருந்த ஒரு சிங்காதனத்தில் இவன் 1902ம் வருஷம் அமர்ந்தான். அதற்கு முன்னரே, ஸ்பெயினுக்குச் சொந்தமாயிருந்த குடியேற்ற நாடுகள் பலவும் சுதந்திரக் கொடியை நாட்டி விட்டனவல்லவா?

இருபதாவது நூற்றாண்டு பிறந்தது. ஐரோப்பிய வல்லரசுகளுக்கு, நாடு பெருக்க வேண்டுமென்ற ஆசையும் அதிகமாயிற்று. இந்த வல்லரசுகளின் கூட்டத்தில், அமெரிக்கா ஐக்கிய மாகாணமும் சேர்ந்து கொண்டு, ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்த பிலிப்பைன் தீவுகள் முதலியவற்றைக் கைப்பற்றிக்கொண்டது ஸ்பெயினின் ஏகாதிபத்தியக் கட்டிடம் இங்ஙனம் சரிந்து விழுந்து விட்டதற்கு முடியரசும், அதனைத் தாங்கி நின்ற முதலாளி வர்க்கமுமே காரணம் என்று பொது ஜனங்கள் நினைத்து விட்டார்கள். அமெரிக்காவுடன் போராடித் தோல்வி யடைந்து தாய் நாட்டுக்குத் திரும்பி வந்த ஸ்பானியத் துருப்புகள், மனக் கொதிப்புடனிருந்தார்கள். இந்தக் கொதிப்பிலே, இந்த அதிருப்தியிலே ஒரு புதிய உணர்ச்சி உண்டாயிற்று. இந்த உணர்ச்சி, முடியரசுக்கு எதிர்ப்பாக வளர்ந்தது. இளைஞர் இயக்கங்கள் பல தோன்றின. சுதந்திர வேகம் நிரம்பிய பல இலக்கியங்கள் உண்டாயின.

குடியேற்ற நாடுகள் பல தனித்துச் சென்று விட்டமையால், கைத்தொழில் முதலாளிகள், பெரிய

வியாபாரிகள் முதலியோர், பண வருவாய்க்கு உள்நாட்டிலேயே புதிய வழிகளைக் கண்டு பிடிக்கத் தொடங்கினர். புதிய கைத்தொழிற்சாலைகள் பல ஸ்தாபிக்கப்பட்டன. குடியேற்ற நாடுகளிலே போட்டிருந்த பணத்தை யெல்லாம் திருப்பிக் கொணர்ந்து, இந்த ஸ்தாபனங்களிலே போட்டார்கள் முதலாளிகள். இந்தக் கைத்தொழிற் ஸ்தாபனங்களின் சுறு சுறுப்பைக் கண்டு, அந்நிய நாட்டு முதலாளிகளிற் சிலரும், ஸ்பெயினில் வந்து தொழில் நடத்த ஆரம்பித்தார்கள். இங்ஙனம் தொழிற் ஸ்தாபனங்கள் வளர்ந்து கொண்டு வந்தமையால், இந்த வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த தொழிலாளர்களுடைய செல்வாக்கும் அதிகமாயிற்று. இவர்கள் முடியரசுக்கு விரோதமாகத் தோன்றிய இயக்கங்களில் கலந்து கொண்டார்கள். முதலாளிகள், பாதிரிமார், ராணுவ வீரர் முதலியோர், முடியரசைத் தாங்கி நிற்போராயினர். மத்திய வகுப்பார், நகரத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர், கிராம விவசாயிகள் முதலியோர் குடியரசுக்கு அடிகோலுவோராயினர். முடியரசு விளக்கு அணையாமலிருக்கும் வண்ணம் அதற்கு வெளிச்சங் கொடுத்துக் கொண்டிருந்தது முதலாளி வர்க்கம். இந்த இரவல் வெளிச்சத்தைக் கொண்டு முடியரசு எத்தனை நாள் வாழ்ந்து கொண்டிருக்க முடியும் ?

1909ம் வருஷம் தொழிலாளர் இயக்கம் வலுத்து நின்றது. முடியரசுக்கு விரோதமாகத் தோன்றிய கிளர்ச்சிகளில் தொழிலாளர்கள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்கள். இந்த வருஷம் பார்ஸிலோனாவில், ¶ மிகப் பெரிய தொழிலாளர் வேலை நிறுத்தம் ஒன்று

¶ ஸ்பெயினில் முதன் முதலாகத் தொழிலாளர் இயக்கம் தொடங்கப்பெற்றது 1840ம் வருஷத்தில். அது முதற் கொண்டு, இதற்கும், இதன் பரிணாமமாகிய அபேதவாத

நடைபெற்றது. இது மேலுக்குத் தொழிலாளர் வேலை நிறுத்தமாகச் சொல்லப்பட்ட போதிலும், உண்மையில் முடியரசுக்கு விரோதமான புரட்சிக்காரர்களுடைய கிளர்ச்சியாகவே இருந்தது. பார்ஸிலோனாவில் ஆரம்பித்த இந்த வேலை நிறுத்தம், ஸ்பெயின் முழுவதும் பரவியது.

உண்மையில் தொழிலாளர்களுக்கும நிரம்ப அதிருப்தி இருந்தது. தேசத்தின் பொருளாதார நிலை அவ்வளவு சீர் கேடாயிருந்தது. இதனோடு, முடியரசுக்கு விரோதமான உணர்ச்சியும் கலந்து கொண்டது. கேட்க வேண்டுமா? மூன்று நாட்கள், அரசாங்கத் துருப்புகளுக்கும் தொழிலாளர்களுக்கும் வீதிகளில் கை கலந்த சண்டை. அரசாங்கத்தார் தேசமெங்கும் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். வேலை நிறுத்தம் முடிவடைந்தது. அடக்கு முறையும் தற்காலிகமாகப் பலித்தது.

ஆனாலும் பிரதி வருஷமும் வேலை நிறுத்தங்கள் அதிகமாகிக்கொண்டு வந்தன. பாமர ஜனங்களின் பொருளாதார நிலை சீர் கெட்டிருக்கிறபோது, அஃது எவ்விதமாக வேனும் வெளித்தோன்றத்தானே வேண்டும்.

1914ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் தொடங்கியது. ஸ்பெயின் இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை. இதனால் எல்லாக்கட்சியினருக்கும் யுத்தச் சாமான்களைத் தயார்ப்படுத்தி விற்பனைசெய்ய இதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. எனவே தொழிற்சாலைகளின்

---

இயக்கம், பொதுவுடமை இயக்கம் முதலியவற்றிற்கும் பார்ஸிலோனாவே அடைக்கல ஸ்தானமா யிருந்திருக்கிறது.

யந்திரங்கள் சுறு சுறுப்பாக ஓடின. முதலாளிகள் அதிக லாபங் கண்டார்கள் அதிக லாபத்திற்குத் தகுந்த மாதிரி தங்களுடைய கூலி விகிதமும் உயர்த்தப் படவேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்டார்கள். முதலாளிகள் எளிதில் சம்மதிக்கிறார்களா? பிணக்கு தான். போராட்டந்தான்.

ஆனல் இந்த யுத்தச் செழிப்பின் வேகம் நீடித்து நிற்கவில்லை. 1916ம் வருஷம், ஸ்பெயினில் உணவுப் பொருள்களின் விலை ஏறிவிட்டது. இதனல் ஏழை மக்களின் பாடு மிகவும் கஷ்டமாகி விட்டது. உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டு மென்று தொழிலாளர்கள் கேட்டார்கள். 'செவிடன் காதிலே ஊதின சங்கு'தான். 1916ம் வருஷம் டிசம்பர் மாதம் 18ந் தேதி, ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடை பெற்றது. அரசாங்கத்தார் சிறிது பணிந்து கொடுத்தனர். ஆனல், இந்தப் பணிவு, தொழிலாளர்களுக்கு நிரந்தரமான நன்மையைத் தரவில்லை.

தொழிலாளர்களின் வாழ்க்கை அந்தஸ்து குறைந்த பட்சம் இத்தன்மைய தாகத்தான் இருக்க வேண்டுமென்று சட்ட பூர்வமாக நிர்ணயித்து விடுமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவதற்காக, 1917ம் வருஷம் மார்ச்சு மாதம் 27ந் தேதியிலிருந்து பெரியதொரு வேலை நிறுத்தம் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது. முடியரசுக்கு விரோதமான எண்ணங்கள் பகிரங்கமாக வெளியிடப் பெற்றன. ஏகாதிபத்தியத்தைக் காலத்திற்கேற்ற முறையில் திருத்தியமைத்தால்தான். அஃது இன்னும் சிறிது காலம் உயிரோடு இருக்க முடியும் என்று கருதிய ஏகாதிபத்தியவாதிகள் கூட, அரசாங்கத்தைக் குறைகூற ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒரு புறம் தொழிலாளர் கிளர்ச்சி! மற்றொரு பக்கம் குடியரசு உணர்ச்சி! வேறொரு சார்பில் உலக வல்லரசுகள் வளர்ந்து வரும் காட்சி இவைகளினிடையே, ஸ்பெயின் தேசத்து முடியரசின் பிற்போக்கான தன்மை நன்ருகப் பிரகாசித்தது.

இந்தக் காலத்தில், 1917ம் வருஷத்தில், ஸ்பெயின் தேசம் இருந்த நிலைமையை வருணித்து, அல்பான்ஸோ மன்னனுக்கு, அவனுடைய நண்பனும் பிரபல பத்திரிகாசிரியனுமான லியாபோல்டோ ரோமியோ§ என்பான் எழுதிய பகிரங்கக் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிருன்:—

"தற்கால ராணுவத்திற்குத் தேவையான அம்சங்கள் எதுவும் ஸ்பெயின் ராணுவத்தினிடம் இல்லை. கப்பற்படையோ, துறை முகங்களிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கலகக்கட்சியாக இருக்கிறது. நீதி யென்பது, நீதிபதிகளின் விருப்பத்திற்கிணங்க, நீதி மண்டபங்களில் கூடும் சில அன்பர்களின் கூட்டமாகவே இருக்கிறது. பாதிரிமார்களிலிருந்து பீரங்கிகளையும், பீரங்கிகளிலிருந்து பாதிரிமார்களையும் உற்பத்தி செய்யக் கூடிய திறன்வாய்ந்த பெரிய மனிதர்களுடைய தயவினால் அபிஷேகம் செய்யப்பட்டிருக்கும் ஒரு சிலர் நிருவகிக்கிற ஸ்தாபனமாகவே கிறிஸ்தவமடங்கள் இருக்கின்றன. அதிகாரவர்க்கமோ, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதின் உற்பத்தி ஸ்தானமாயிருக்கிறது. பார்லிமெண்டோ, காலத்தை வீணுக்குவதற்குத் தகுந்த இடமாயிருக்கிறது."

1918ம் வருஷம் பிறந்தது முடியரசு அதிகமாக ஆடத் தொடங்கியது. இந்த வருஷத்திலிருந்து 1923ம் வருஷத்திற்குள், ஐந்து வருஷ காலத்தில்,

---

§ Don Leopoldo Romeo, Editor of *Correspondencia de Espana*. Open letter dated 28—10—1917.

மொத்தம் பன்னிரண்டு மந்திரிச் சபைகள் மாறியிருக்கின்றன வென்பதொன்றைக் கொண்டே, அரச முடியின் நிலையற்ற தன்மை நன்கு புலனாகும். இப்படி மாறி மாறி அமைந்த ஒரு மந்திரிச் சபையாவது, வளர்ந்து கொண்டுவந்த தொழிலாளர்களின் மனக்கசப்பையோ, யோ, குடியரசுக்குச் சாதகமாக நடந்துவந்த கிளர்ச்சியையோ சிறிது கூட அடக்க முடியவில்லை.

இந்தக் காலத்திலேதான் இத்தலியிலிருந்து 'பாசிஸம்' என்ற கூக்குரல் கேட்க ஆரம்பித்தது. இந்த வார்த்தை ஸ்பானியர்களுக்குப் புதிதாக இருந்த போதிலும், இஃது அடிக்கடி கேட்க ஆரம்பித்தது. இத்தலியில், பெயருக்கு அரசன் இருந்த போதிலும், எல்லாக் காரியங்களையும் முஸோலினியே சர்வாதிகாரியாக இருந்து நடத்துகிற விவரங்கள் ஸ்பெயினுக்கு எட்டின. பார்த்தான் அல்பான்ஸோ மன்னன். தானும் ஒரு சர்வாதிகாரியை நியமித்து அவனிடத்திலே எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைத்து விட்டுத் தனது மணி முடியைக் காப்பாற்றிக் கொள்ளத் தீர்மானித்தான்.

அல்பான்ஸோ மன்னனின் பொறுப்பு, ஜனங்களின் ஆக்கிரம், இவைகளுக்கிடையே பிரிமோ—டி—ரிவேரா† 1923ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13ந்தேதி சர்வாதிகாரியானான். 'தாய்நாடு, முடியரசு, கிறிஸ்தவ மதம்' இவை மூன்றுமே இவன் கொண்ட கொள்கைகள். இவன் பதவி ஏற்றுக்கொண்ட காலத்தில் சட்டத்திற்கு மதிப்பே கிடையாது. பலாத்காரச் செயல்கள் பல நிகழ்ந்தன. அரசாங்கப் பொக்கிஷம் காலியாயிருந்தது அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறதாவென்ற கேள்வியை ஜனங்கள் கேட்கத் தொடங்கி

---

† Primo Di Rivera.

விட்டார்கள். ஆனால் பணக்காரர்கள், நிலச்சுவான்தார்கள், பாதிரிமார்கள், முடியாசைத் தாங்கிய உத்தியோகஸ்தர்கள், ராணுவத் தலைவர்கள் முதலியோர், ரிவேரா சர்வாதிகாரியானதைக் கேட்டு, 'நிம்மதி' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்கள்.

ரிவேரா, தனது முதல் மந்திரிச் சபையை, ராணுவத் தலைவர்களைக் கொண்டே நிரப்பினான். ராணுவத் தலைவர்கள், அரசியலில் தலையிட்டு, எங்குக் குழப்பத்தை உண்டு பண்ணி விடுவார்களோ வென்று கருதியே, ரிவேரா, அவர்களைக் கொண்டே மந்திரிச் சபையை அமைத்து, அவர்கள் மீது பொறுப்பைச் சுமத்திவிட்டான். பிறகு, 1925ம் வருஷத்தில்தான், போர்த்தலைவர்களையும் அரசியல் வாதிகளையும் சேர்த்து மந்திரிச் சபை அமைத்தான். இதன் பிறகு, அபேதவாதிகளையும் மந்திரிச் சபையில் சேர்த்துக் கொண்டான். இவர்கள் அனைவருடைய துணை கொண்டு, பொதுவுடமைக் கட்சியை நசுக்கினான்.

ரிவேரா, சர்வாதிகாரியாக வந்த பிறகு, இத்தலியுடன் சிநேக உடன்படிக்கை செய்து கொண்டான். அப்பொழுதிருந்தே, முஸோலினி, பல அறிஞர்களை ஸ்பெயினுக்கு அனுப்பி, பாசிஸத்தின் மேன்மைகளை வலியுறுத்திப் பிரசாரஞ் செய்வித்தான். இதற்கு, ரிவேராவின் பூரண ஆதரவும் இருந்தது. அந்தக் காலத்திலேயே முஸோலினிக்கு எதியோப்பியாவின் மீது கண்ணிருந்ததா, மத்திய தரைக்கடலில் செல்வாக்குத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அப்பொழுதே உண்டாயிற்று என்பவைகளை இப்பொழுது நிர்ணயித்துக் கூற முடியாது.

ரிவேராவின் சர்வாதிகார ஆட்சி ஆறு வருஷங்களுக்கு மேல் நீடித்து நிலைக்கமுடியவில்லை. இதற்கு



ப்ரிமோ டி ரிவேரா. 13-9-1923 முதல் 28-1-1930 வரை ஸ்பெயின் தேசத்தின் சர்வாதிகாரியாக இருந்தான். அப்பொழுது அல்பான்ஸோ மன்னனும் அரசனுயிருந்தான். இவனுடைய சர்வாதிகார காலத்தில், ஸ்பெயினில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன வென்பதுண்மை. ஆனல் இவன் முயற்சிகள், கோரிய பலனை உண்டாக்க வில்லை. இவன் சர்வாதிகாரப் பதவியினின்று விலகிய சில மாதங்களுக்குள்ளேயே இறந்து விட்டான்.



13வது அல்பான்ஸோ மன்னன்.
பிறந்தது 17—5—1886.
அரசு துறந்தது 14-4-1931.



அல்பான்ஸோவின் மனைவி.
விக்டோரிய மகாராணியின்
பேத்தி.1906 வருஷம் விவாகம் நடைபெற்றது.

க்காரணங்களென்ன? இத்தலியிலும் ஜெர்மனியிலும் இந்தச் சர்வாதிகார ஆட்சி நிலை பெற்றிருக்க, ஸ்பெயினில் மட்டும் ஏன் முடியாமற் போகவேண்டும்?

முதலாவது, முஸோலினிக்குக் கறுப்புச்சட்டைப் படையினரும், ஹிட்லருக்குப் பழுப்புச்சட்டைப் படையினரும் பக்கபலமாக இருந்தனர். ரிவேரா, இத்தகைய ஸ்தாபனம் ஒன்றையும் அமைத்துக் கொள்ளவில்லை. ஆனால் தனக்குத் துணையாயிருக்க 'தேசீயக் கட்சி' யென்ற பெயருடன் ஒரு கட்சியை அமைத்துக் கொள்ளப்பார்த்தான். பயனடையவில்லை.

தவிர, தனி உரிமை வேண்டி நின்ற காடலோனியர்களை இவன் விரோதித்துக் கொண்டான். காடலோனிய பாஷையை எங்கும் உபயோகிக்கக் கூடாதென்று தடுத்து விட்டான்.

அபேதவாதிகளும், பொதுவுடமைக் கட்சியினரும் சேர்ந்து, ரிவேராவின் சர்வாதிகாரத்திற்கு விரோதமாகப் பல கிளர்ச்சிகள் செய்தார்கள். அவற்றை இவன் நிர்த்தாட்சண்யமாக அடக்கிப்போடவில்லை. தாட்சண்யம் பார்க்கிற ஒருவன், வெற்றியுள்ள சர்வாதிகாரியாக இருக்க முடியுமா? மற்றும் இவன் ராணுவத்திற்குச் சில சலுகைகள் காட்டி அதன் தயவைச்சம்பாதித்துக் கொள்ளப் பார்த்தான். அது நேர்மாறான பலனை அளித்தது. ராணுவத்தின் பீரங்கிப் படையினர் இவனுக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டனர்.

1928ம் வருஷத்திய உலகப் பொருளாதார மந்தம் ஸ்பெயினையும் தாக்கியது. நாணயத்தின் மதிப்பு குறைந்து விட்டது. ஜனங்களுடைய அதிருப்தி அதிகமாயது. ரிவேராவின் பலஹீனத்தையும் ஜனங்

கள் தெரிந்துகொண்டு விட்டார்கள். யாராருக்கு இவன் சலுகைகள் காட்டி வந்தானே அவர்கள் எல்லாரும், அதாவது ராணுவத் தலைவர்களும் பாதிரிமார்களும் இவனுக்கு விரோதமானார்கள். இவர்களை அடக்கியாளப் போதிய திறமை ரிவேராவுக்கு இல்லை. இதனால், ஜனங்கள் இவனிடத்தில் முதலில் வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டார்கள்.

பொதுவாகவே, ஸ்பானியர்கள் அடிக்கடி மாற்றங்களை விரும்பும் சுபாவமுடையவர்கள். அவர்களுக்கு ஏதேனும் புதுமைகள் காட்டிக்கொண்டிருக்க வேண்டும். ரிவேரா, இந்தச்சுபாவத்தை அறிந்து நடந்தானில்லை.

1928ம் வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதி ஒரு புதிய அரசியல் திட்டம் வகுத்து அதனை ஜனங்கள் முன்னிலைப்படுத்தித் தேர்தல் நடத்த வேண்டுமென்றும், இதன் மூலமாக ஜனங்களுடைய அதிருப்தியைச் சிறிதளவேனும் குறைக்கலாமென்றும் ரிவேரா, அல்பான்ஸோ மன்னனுக்கு ஆலோசனை கூறினான். ஆனால் அரசன் இதற்கு இணங்கவில்லை.

இந்த நிலையில் ரிவேரா என்ன செய்திருக்கவேண்டும்? 'தங்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கிறேனா?' வென்று அரசனையல்லவோ கேட்கவேண்டும்? அதனை விடுத்து, தரைப்படை, கப்பற் படை முதலிய ராணுவ உத்தியோகஸ்தர்களுடைய நம்பிக்கையை நாடினான். அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பினான். இதனை அரசனுக்குத் தெரிவிக்கவுமில்லை. ராணுவத் தலைவர்களோ, இவனுடைய வேண்டுகோளுக்கு மௌனஞ் சாதித்து விட்டனர். இதை இவன் எதிர் பார்க்கவேயில்லை. இது காரணமாக அரசனுக்

கும் ரிவேராவுக்கும் பெரிய மனஸ்தாபம் ஏற்பட்டது. கடைசியில் 1930ம் வருஷம் ஜனவரி மாதம் 28ந் தேதி ரிவேரா, தனது சர்வாதிகாரப் பதவியினின்று விலகிக் கொண்டான்.†

இவனுக்குப் பிறகு, பெரெங்குயர்$ என்பவனையும் அஸ்நர்‡ என்பவனையும், முறையே சர்வாதிகாரிகளாக நியமித்து, தனது அரச பதவியைக் காப்பாற்றிக் கொள்ள அல்பான்ஸோ முயன்றான். இதற்காக, ஒன்று பட முடியாத அரசியல் கட்சிகளைக் கூட ஒன்று படுத்தித் தனக்குப் பக்கபலமாக இருக்கச் செய்தான். ஆனால், தேசத்திலே முடியரசுக்கு எதிர்ப்பு அதிகமாகிக் கொண்டு வந்தது. சட்ட ரீதியான அரசாங்கத்தை ஏற்படுத்தாமல் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான் அரசன். விசேஷ உத்திரவுகள் மட்டும் பிறந்து கொண்டிருந்தன. அரசனுடைய விசேஷ உத்திரவுகளைக் கொண்டு எவ்வளவு காலம் அரசாங்க யந்திரத்தை நகர்த்திக் கொண்டிருக்க முடியும்? தேசத்தின் பல பாகங்களிலும் வேலை நிறுத்தங்கள்! குழப்பங்கள்! ஜனங்கள், பசிப் பிணியாலும், வரிச் சுமையாலும் முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள். ஏன்? கூக்குரலிடக்கூடத் தொடங்கி விட்டார்கள். 'வீழ்க அரசன்' என்ற ஆரவாரம் தேசமெங்கும் எதிரொலி செய்தது.

முடியரசின் கௌரவம் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. எந்த நிமிஷத்திலேனும் அது, மீட்க

---

† ரிவேரா 1930ம் வருஷம் மார்ச் மாதம் 16ந் தேதி திடீரென்று இறந்தும் விட்டான்.

$ General Damaso Berenguer.--30-1-30 முதல் 18-2-31 வரையில் பிரதம மந்திரியாயிருந்தான்.

‡ Admiral Juan Aznar.--18-2-31 முதல் 13-4-31 வரையில் பிரதம மந்திரியாயிருந்தவன்.

முடியாத பாதாளத்தில் விழுந்துவிடக்கூடும் என்பதை அல்பான்ஸோ அரசன் உணர்ந்து விட்டான். ஆனால் பதவி மோகம் யாரை விட்டது?

குடியரசுக் கட்சித் தலைவர்கள், இதுதான் சமயமென்று எண்ணித் தங்களுக்குள்ளிருந்த அபிப்பிராய பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒற்றுமையுடன் முடியாசைக் காக்கத் தீர்மானித்தார்கள். ஸான் ஸெபாஸ்டியன் என்ற ஊரில் 1930ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 17ந் தேதி, இவர்கள் ஒரு சிறு கூட்டம் கூடினார்கள். இதற்கு, ஜமொரா,$ லெர்ரூ,† மவ்ரா§ முதலியோர் வந்திருந்தார்கள். குடியரசுத் திட்டத்தை வகுத்தார்கள். இதற்கு முதற்படியாக, நாடெங்கும் வேலை நிறுத்தங்களை ஏற்பாடு செய்வதென்றும், இதற்காகவும், தங்கள் கொள்கைகளை நிலை நிறுத்திக்கொள்வதற்கும் ராணுவத்தின் துணையை நாடுவதென்றும் தீர்மானித்தார்கள். ஆனால் இவர்களுக்குள்ளேயே பரஸ்பர அவநம்பிக்கை இருந்தது. ஒரே சமயத்தில் தேசத்தில் புரட்சியை உண்டு பண்ணுவதென்று இவர்கள் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால் பரஸ்பர அவநம்பிக்கை காரணமாக 1930ம் வருஷம் டிசம்பர் மாதம் 12ந் தேதி, ஜாகா என்ற ஊரில், தளபதி கலான்¶ என்பவன் புரட்சிக்குக் கிளம்பிவிட்டான். மற்றவர்கள் தயாராகவில்லை. எனவே, கலான் புரட்சி விபரீதமான தோல்வியில் முடிந்தது. இவன், மரணதண்டனை விதிக்கப்பட்டான். இன்னும் பலர் பீரங்கி வாயில் வைத்துச் சுடப்பட்டார்கள்.

---

$ Niceto Alcala-Zamora.

† Alejandro Lerroux.

§ Miguel Maura.

¶ Captain Galan.

இச்சமயத்தில், அரசாங்கத்தின் பிரதம மந்திரியாயிருந்த அஸ்நர் என்பவனிடத்தில் அவ நம்பிக்கை கொண்டு 1931ம் வருஷம் பிப்ரவரி மாதம் 16ந் தேதி அல்பான்ஸோ மன்னன், குவெர்ரா‡ என்பவனை அழைப்பித்து, அரசாங்கத்தை நடத்துமாறு கூறினான். ஆனால் இவன் மறுத்துவிட்டான். இந்த குவெர்ரா 1929ம் வருஷம் ரிவேராவுக்கு விரோதமாகக் கலகஞ் செய்தவன். இதற்காகப் பத்து மாதம் சிறைவாசத்தையும் அநுபவித்தவன். ஆனால் ஆபத்திலே இன்னொருடைய துணையைத்தான் நாடுவதென்கிற நியதிகூடப் போய்விடுகிறதல்லவா?

1931ம் வருஷம் ஏப்ரல் மாதம் 12ந் தேதி ஸ்பெயின் முழுவதும் ஸ்தல ஸ்தாபன தேர்தல்கள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தத் தேர்தலின் மூலமாகவே, தங்கள் அரசியல் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று ஜனங்கள் தீர்மானித்தார்கள். குடியரசா முடியரசா வென்பது தான் இப்பொழுது நிர்ணயிக்கப்பட வேண்டிய விஷயம். குடியரசுக்கட்சியினர் பலத்த பிரசாரஞ் செய்தனர். 'நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு ஓட்டும் முடியரசின் இதயத்திலே பாயும் ஓர் அம்பு' என்றெல்லாம் கூறினர். தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 5,446,000 வாக்காளர்கள். இவர்களில் பெரும் பான்மையோர் குடியரசுக்குச் சாதகமாக ஓட் கொடுத்தார்கள். குடியரசுக் கட்சியினர், 972 ஸ்தானங்களைப் பெற்றார்கள். முடியரசுக் கட்சியினருக்கோ 595 ஸ்தானங்கள் தான் கிடைத்தன. ஒரே நாளிலே, ஜனங்களின் மனப்பான்மை எப்படி மாறிவிட்டது! அரசன் வேறு, தேசம் வேறு என்று கருதி விட்டார்கள்!

‡ Jose Sanchez Guerra.

இனி என்ன செய்வது? பலாத்காரத்தின் துணை கொண்டுதான், சிங்காதனத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று, அல்பான்ஸோவுக்குச் சிலர் ஆலோசனை கூறினர். அது லேசான காரியமா? தேசமுழுவதையு மன்றோ விரோதப் படுத்திக் கொள்ளவேண்டும்?

இரண்டு நாட்கள் தியங்கி நின்றான் அரசன்!

1931ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14-ந்தேதி மாலை 6-30 மணி. அல்பான்ஸோ மன்னன், தனது மந்திரிமார்களுடன், இனிச் செய்யவேண்டுவ தென்ன வென்பதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறான். அவன் முகத்திலே அரச களையே இல்லை. அவன் அகன்ற நெற்றயிலே கவலைக் குறிகள் அன்று காலையில்தான் குடியரசுக்கட்சித் தலைவர்களிற் சிலர், அவனிடம் வந்து, 'மாலைக்குள் நாட்டை விட்டு வெளியே போய் விடுங்கள்' என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஜனங்களுடைய ஆத்திரம் அவ்வளவு அதிகமாயிருந்தது! என்ன செய்வான் அல்பான்ஸோ?

அரசன், மந்திரிகளுடன் ஆலோசனையிலிருக்கின்றான் என்பதைக் குடியரசுக்கட்சித் தலைவர்கள் தெரிந்து கொண்டு விட்டார்கள். அரசன், முடி துறக்கப் போகிறானென்றும் ஊகித்தார்கள். உடனே அன்று மாலை ஏழரை மணிக்கு (14-4-31) குடியரசு அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டு விட்டதாகப் பகிரங்கப் படுத்திவிட்டார்கள்.

அன்று இரவு ஒன்பது மணி. வரிசையாகச் சில மோட்டார் வண்டிகள் மாட்ரிட் நகர எல்லையைத் தாண்டி வேகமாகச் சென்றன. இவையொன்றில், போர்பன் வம்சத்துக் கடைசி நட்சத்திரம், ஒளி மழுங்கி முகம் வாடி உட்கார்ந்து கொண்டிருந்தது.

அல்பான்ஸோ அரசன் நாட்டைவிட்டுச் சென்று விட்டான்!

மறுநாள் அரச குடும்பத்தினர், மாட்ரிட் நகரம் விட்டுச் சென்றனர். அரண்மனை காலியாகிவிட்டது.

அல்பான்ஸோ நாட்டை விட்டுச் சென்றானே தவிர, தனது அரசுரிமையை மட்டும் துறக்கவேயில்லை. ஏப்ரல் 17-ந் தேதி, இவன் வெளியிட்ட அறிக்கையில் பின் வரும் வாக்கியங்கள் குறிப்பிடத்தக்கன:—

"நான் எல்லா ஸ்பானியர்களுக்கும் அரசன். நானும் ஒரு ஸ்பானியன். எனது உரிமைகளில் ஒன்றைக்கூட நான் துறக்கவில்லை. அந்த உரிமைகள் என்னுடையன வல்ல என்றால் ஒரு நாள், கணக்குத் தீர்க்கப்படவேண்டிய சேம நிதி."

அரசன் ஊரை விட்டு வெளியேறி விட்டான் என்று கேட்ட மாட்ரிட் நகரவாசிகளுக்குள் எவ்வளவு குதூகலம்! குடியரசு பிறந்து விட்டதென்று என்ன சந்தோஷம்! அன்றிரவு முழுவதும் ஜனங்கள் ஆடினார்கள்! பாடினார்கள்! குடியரசுக்கு அடையாளமாயமைந்த ஊதா நிறக்கொடிகள் எங்கும் பறந்தன! போலீஸ் அதிகாரிகள் முதலிய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கூட, ஊதா நிற நாடாவைத் தங்கள் மேற்சட்டையிலே சேர்த்துக்கட்டிக் கொண்டார்கள். ஊதா நிற'டை'. ஊதா நிற 'காலர்' எல்லாம் ஊதா நிறந்தான். ஐம்பத்தாறு வருஷ முடியாட்சிக்குப்பிறகு இப்பொழுது தான் ஜனங்கள் சுதந்திர மூச்சு விட்டார்கள். ஆனால் இந்த மூச்சு வேகத்திலே ஒரு பூச்சிகூட சாகவில்லை.

IV

## குடியரசுத் தோற்றம்

அல்பான்ஸோ மன்னன், நாட்டை விட்டு வெளியேறிய தினத்தன்றே, குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. இந்தக் குடியரசு மந்திரிச்சபையில் அபேதவாதக் கட்சியினர், குடியரசுக்கட்சியினர் முதலிய பலரும் சேர்ந்தார்கள். இவர்கள், அரசாங்க நிருவாகத்தை உடனே ஏற்றுக் கொண்டு விட்டார்கள். ஜமோரா, குடியரசின் தற்காலிக பிரசிடெண்ட் ஆனன். லெர்ரு வெளி நாட்டு மந்திரி; மவுரா உள்நாட்டு மந்திரி; அஜனு யுத்த மந்திரி; கபல்லெரோ தொழில் மந்திரி. இப்படியாகப் பலரும் சேர்ந்த மந்திரிச் சபை அமைந்து விட்டது.

ஆனல் ஒரு சிலர், இந்த அரசாங்கத்திற்குள்ளே இருந்துகொண்டு இதனை அரிக்கத் தீர்மானித்து விட்டனர். இவர்கள், குடியரசு ஸ்தாபிக்கப்படுவதை மனப்பூர்வமாக விரும்பவில்லை. ஆனல் தங்கள் வெறுப்பை வெளியில் காட்டிக் கொள்ளவும் முற்படவில்லை. எனவே, இவர்கள், குடியரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்து அதில் பொறுப்புள்ள பதவிகளையும் ஏற்றுக் கொண்டனர். இவர்கள் அனைவரும் 'பாசிஸ்டுகள்.' இத்தகையவர்களில் எமிலியோ மோலா† என்பவனும் ஒருவன். இவன் ரகசிய போலீஸ் இலாகா தலைவனயிருந்தான்.

குடியரசு ஸ்தாபிதமாகி விட்டது. எனவே, இதனை எதிர்த்து நிற்பதில் பயனில்லை என்று தெரிந்த பணக்காரர்கள், நிலச்சுவான்தாரர்கள், ராணுவத்தலைவர்கள், பாதிரிமார்கள் முதலியோர் குடியரசை அங்கீகாரம் செய்ய முற்பட்டனர்.

---

† Emilio Mola.

இந்தக்குடியரசு தற்காலிக மாகத்தானே ஏற்பட்டது. இதனைச் சட்ட பூர்வமாக ஸ்திரப்படுத்திவிட வேண்டாமா? எனவே புதிய அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி 1931ம் வருஷம் ஜுன் மாதம் புதிய தேர்தல்களும் நடைபெற்றன. இந்தத் தேர்தல்களில் அபேதவாதக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் பெரும்பான்மை யோராக வெற்றி பெற்றனர். கோர்டெஸ் என்று அழைக்கப்பெறும் ஸ்பெயின் பார்லிமெண்டும் கூடியது. புதிய குடியரசுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இது 1931ம் வருஷம் டிசம்பர் மாதம் பத்தாந்தேதி அமுலுக்கு வந்தது.

இந்தக் குடியரசு, 'எல்லாப் பிரிவுத்தொழிலாளர்களினுடைய ஜனநாயகக் குடியரசு' என்றே கூறப்பட்டது. இதன் கீழ், மதமும் அரசாங்கமும் வேறு வேறாயின. தேசீய முன்னேற்றத்திற்கு, யுத்தத்தை ஒரு சாதனமாக உபயோகிக்கக் கூடாதென்று சொல்லப்பட்டது. சட்டத்தின் கீழ், எல்லோரும் சமமாகவே கருதப்பட்டனர். குடியரசுக்கு விரோதமாயுள்ள எல் மத ஸ்தாபனங்களும் கலைக்கப்பட்டன. அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து மத ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப் பெற்று வந்த தொகைகள் நிறுத்தப்பட்டன. மத அநுஷ்டானங்களிலே இருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது. பிரஜா உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டன. பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டங்கள் கூட்டுவிக்க உரிமை முதலியன பலவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

'தேசத்தின் செல்வமனைத்தும், அந்தச் செல்வத்திற்கு யார் சொந்தக்காரரா யிருந்தபோதிலும் சரி, தேசீயப் பொருளாதார நன்மைகளுக் குட்பட்டதுதான்' என்று குடியரசுச் சட்டம் கூறியது.

இங்ஙனமே, தொழிலாளர்களுக்கு நலம் பல பயக்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. விவாக சம்

பந்தமானது, அரசாங்கத்தின் விசேஷப் பாதுகாப்புக் குட்படுத்தப்பெற்றது. குழந்தைகளைப் பாதுகாப்பதும், அவர்களுக்குக் கல்வி போதிப்பதும், பெற்றோர்களின் கடமையென்று சட்ட ரீதியாக வற்புறுத்தப்பட்டது.

ஏற்கனவே யிருந்த 'கோர்டேஸ்' என்கிற ஸ்பெயின் பார்லிமெண்டு திருத்தி யமைக்கப்பட்டது. இதன் ஆயுட்காலம் நான்கு வருஷம். 23 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் இந்தப் பார்லிமெண்டுக்கு அபேட்சகர்களைத் தெரிந்தெடுத்தனுப்பும் உரிமையுண்டு. குடியரசுக்குத் தலைவன் 'பிரசிடெண்ட்.' இவனுடைய உத்தியோக காலம் ஆறு வருஷம். பார்லிமெண்டு அங்கத்தினர்களும், வேறு சில ஜனப் பிரதிநிதிகளும் சேர்ந்து இந்த 'பிரசிடெண்டை'த் தெரிந்தெடுப்பார்கள். அரசாங்க நிருவாகத்தை, பிரதம மந்திரியும், அவனால் தெரிந்தெடுக்கப்பெற்ற மந்திரிச் சபையும் சேர்ந்து நடத்தும்.

ஏற்கெனவெ, தற்காலிக 'பிரசிடெண்டா'கத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜமோரா என்பவனே, சட்ட ரீதியாக அமைந்த குடியரசின் 'பிரசிடெண்டாக'த் தெரிந்தெடுக்கப்பட்டான். இது நடந்தது 10—12—31ல்.

இந்த ஜமோரா என்பவன், 1923ம் வருஷம் வரை முடியரசை ஆதரித்துக்கொண்டு வந்தவன். ரிவேரா சர்வாதிகாரியாக வந்த பிறகு, இவனுக்குக் குடியரசு மோகம் உண்டாயிற்று. இவன் பெரிய சொத்துக்காரன். ஆடம்பரப் பிரியன். குடியரசுத் தலைவன் என்ற ஹோதாவில் இவனுடைய வருஷ சம்பளம் இருபது லட்சம் பெஸேடா § இவன், குடியரசுச் சட்டத்தில் கண்ட திட்டங்களை நடை முறையில் கொணரவில்லை யென்ப

§ Peseta. ஸ்பெயின் தேசத்து நாணயம். இதன் மதிப்பு ஏறக்குறைய எட்டு அணு என்று சொல்லலாம்.

தில் என்ன ஆச்சரியம்? "ஜமொரா 'பிரஸிடெண்டா'க இருக்கிறவரையில், ஸ்பெயினில் நடக்கிற சம்பவங்களைக் கண்டு நாம் பயப்படவேண்டியதில்லை" யென்று ரோமாபுரி போப்பும், ஸ்பெயின் தேசத்துப் பாதிரிமார்களுக்குத் தைரியம் கூறும்படியான நிலைமை ஏற்பட்டதென்றால், நாம் அதிகம் கூறவேண்டியதில்லையல்லவா?

இந்தக் குடியரசு, பொதுவுடைமைக் கட்சியினருக்குப் பிடிக்கவில்லை. பொதுவுடைமைக் கட்சியானது, தனித்தவொரு கட்சியாக ஸ்பெயினில் அமைந்தது 1921ம் வருஷத்தில். அது முதல் 1931ம் வருஷம் வரை, இது பலவிதமான கஷ்டங்களை அநுபவித்தது. ரிவேரா, சர்வாதிகாரியாக இருந்தபோது, இதனைச் சட்ட விரோதமான ஸ்தாபனமென்று சொல்லி அடக்கி விட்டானல்லவா? அது தவிர, இந்தக் கட்சிக்குள்ளேயும் பலவிதமான பிணக்குகள் இருந்தன. 1931ம் வருஷம் குடியரசு ஏற்பட்ட பிறகு, அதனோடு கலந்தே போராட வேண்டுமென்று தீர்மானித்தனர் இந்தக் கட்சியினர். அவ் வருஷம் நடைபெற்ற பார்லிமெண்டு தேர்தலில், தங்களுடைய கட்சி அபேட்சகர்களை நிறுத்தினார்கள். அது முதல் இந்தக் கட்சி வலுத்து வரத் தொடங்கியது. குடியரசு ஏற்படுவதற்கு முன்னர், இந்தக் கட்சியில் ஆயிரம் அங்கத்தினர்களே இருந்தார்கள். குடியரசு ஏற்பட்ட சிறிது காலத்திற்குள் இந்த அங்கத்தினர் தொகை முப்பதினாயிரமாக உயர்ந்தது. இந்தப் பொதுவுடைமைக் கட்சியினர், பார்லிமெண்டுக்குள்ளிருந்து கொண்டே குடியரசை எதிர்த்துக் கொண்டு வந்தனர்.

குடியரசு ஏற்பட்டு விட்டபடியால், தங்களுக்குப் பூரண விடுதலை கிடைத்துவிட்டதாகத் தொழிலாளர்

கள் நினைத்துவிட்டார்கள்.¶ புடியாரின் கீழ் இவர்கள் பலவீனமாக அடக்கப்பட்டிருந்தபடியால், குடியரசு ஏற்பட்டவுடனே இவர்கள் சட்டம், ஒழுங்கு என்பவைகளை மறக்கலானார்கள். இதனால் பல இடங்களில் வேலை நிறுத்தங்கள் உண்டாயின. இவற்றைக் குடியரசு அரசாங்கத்தினர், உறுதியாக அடக்கவில்லை. 1931ம் வருஷத்தில் 710; 1932ல் 830; 1933ல் 1499. இப்படி வருஷந்தோறும் வேலை நிறுத்தங்கள் அதிகப்பட்டுக் கொண்டே போயின.

குடியரசு அரசாங்கத்தினர், எதிர்க் கட்சியினரை நிர்த்தாட்சண்யமாக அடக்கிப் போடாமல் அதற்குப் பதிலாக அவர்களுக்கு எல்லாவித சலுகைகளையும் காட்டினர். சலுகைகள் காட்டி, அவற்றின் மூலமாக முதலாளிகளையும், தொழிலாளிகளையும் திருப்தி செய்விக்கலாம் என்று நினைத்தார்கள். இது நடக்கிற காரியமா? புதிய சட்டங்களை நிறைவேற்றிச் சட்ட புத்தகத்தில் ஏற்றி வைத்தார்களே தவிர, அவற்றை விரைவில் நடைமுறையில் கொணரத் துணிந்தார்களில்லை.

அரசாங்க அமைப்பின் மேல்தளத்திலே மட்டுந்தான் சில மாறுதல்கள் நிகழ்ந்தனவேயன்றி, அடிப்படையில் எவ்வித சீர்திருத்தமும் செய்யப்படவில்லை. விவசாயிகளின் நிலைமை பழைய மாதிரியேதான் இருந்தது. ராணுவத்தைக் குறைத்ததாகச் சொன்னார்கள். ஆனால் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு, முழுச் சம்பளமும் பென்ஷனும் கொடுத்து விலக்கினார்கள். இப்படி விலகியவர்கள், குடியரசைத் தகர்ப்பதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

---

¶ 1936ம் வருஷம் மே மாதம் பிரான்ஸில், ப்ளும் (Blum) (அபேதவாத) அரசாங்கம் ஏற்பட்டபோது இதே நிலைமைதான்.

## V

# எதிர்ப்பில் ஒடுக்கம்

முடியரசு விழுந்துவிட்டது வாஸ்தவந்தான். ஆனால் அதற்குப் பின்னர் வந்த குடியரசோ மிகப் பலஹீனமுள்ளதாக இருந்தது. இதனால் பொதுவுடைமைக்காரர்கள் இந்த அரசாங்கத்தில் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். முதலாளிகள், பாதிரிமார், விலக்கப்பட்ட ராணுவத் தலைவர்கள் முதலியோர், இதனை வீழ்த்திவிட ஒன்று சேர்ந்தார்கள். இப்படி இரண்டுக்குமிடையே அகப்பட்டுத் தத்தளித்தது குடியரசு அரசாங்கம்.

பாசிஸ்ட் கொள்கைகளை ஆதரித்து ஆங்காங்குப் பல சங்கங்கள் தோன்றின. இவற்றில் சில, ஜெர்மனியில் தோன்றிய நாஜி கட்சி ஸ்தாபனங்களை முன் மாதிரிகளாகக் கொண்டு தோன்றின. இன்னும் சில, இத்தாலிய ஸ்தாபனங்களைப் பின்பற்றி எழுந்தன. இவைகளுக்கு ஜெர்மனியிலிருந்தும், இத்தலியிலிருந்தும் பொருளுதவி கிடைத்ததாகச் சொல்லப்பட்டது. ஸ்பெயினிலிருந்த பணக்காரர் சிலரும் இவைகளுக்கு உதவி செய்தார்கள். ஸ்பெயினின் தேசீய வாழ்வுடன் பல வருஷ காலமாகப் பின்னிக் கிடக்கும் ஏற்றத் தாழ்வுகள், இந்த பாசிஸ்ட் கொள்கை வலுப்படுவதற்கு உறுதுணையாயிருந்தன வென்று பொதுவாகக் கூறலாம்.

இந்த ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர்கள் கில் ரோப்லெஸும்‡, சர்வாதிகாரி ரிவேரா மகனான ஜோஸே ரிவேரா†வுமாவார்கள். இவர்கள் நிலச்சுவான்தார்கள், பாதிரிமார்

---

‡ Gil Robles.

† Jose Rivera.

கள் முதலியவர்களை, தனித்தனிக் கட்சியினராகச் சேர்த்தார்கள். குடியரசுச் சட்டங்களினால், பரம்பரையாக அநுபவித்துக்கொண்டு வந்த உரிமைகள் யாவும் பறிக்கப்படுகின்றனவென்று பயமுறுத்திப் பிரசாரம் செய்தார்கள். இக்காலத்தில் ஆயுத பலத்தையும் இவர்கள் சேகரித்துக் கொண்டார்கள். இவர்களில் ஜோஸே ரிவேரா, 'ஜெர்மன் குழுவளிப்படை' மாதிரி ஒரு ஸ்தாபனம் அமைத்தான். இது, பின்னர் அதிகமான செல்வாக்குப் பெறவில்லை. கில் ரோப்ளெஸ் தான், பாசிஸ்ட் கட்சியில் அதிகமான செல்வாக்குப் பெற்றுக்கொண்டு வந்தான். இவன் மதம் வேறு, அரசாங்கம் வேருகப் பிரிக்கக் கூடாதென்று பாதிரிமார்களைத் தூண்டிவிட்டான். நிலச் சீர்திருத்தங்களைச் செய்யவொட்டாதபடி நிலச்சுவான்தார்களைக் கிளப்பிவிட்டான். இவன் திரை மறைவிலிருந்து வேலை செய்வதில் மகா நிபுணன்.

இப்படி சுமார் இரண்டரை வருஷகாலம், குடியரசு பல பேருடைய எதிர்ப்புகளுக்கிடையே நடைபெற்றது. இந்த இரண்டரை வருஷ காலமும் இது பலஹீனமான ஓர் அரசாங்கமாகவே இருந்து வந்தது.

இதனால் தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியோர் குடியரசினரால் அதிகமான நன்மையைச் செய்ய முடியவில்லையே யென்று அதிருப்தி கொண்டார்கள். நிலச்சுவான்தார்கள், பாதிரிமார்கள் முதலியோர், குடியரசினர் முற்போக்கான சட்டங்களை நிறைவேற்றித் தங்கள் உரிமைகளைப் பாழ்படுத்துகின்றனரே யென்று கோபங் கொண்டனர். பொது ஜனங்கள், குடியரசின் வேலையைத் துரிதப்படுத்த முயன்றனர். பாசிஸ்டுகள் என்ற முதலாளி வர்க்கத்தினர் ஸ்பெயினைப் பின்னுக்கிழுக்கப் பார்த்தனர்.

பாசிஸ்டுகள் 1932ம் வருஷத்திலேயே கலகஞ் செய்யத் தொடங்கிவிட்டனர். 1932ம் வருஷம் ஆக

ஸ்ட் மாதம் பத்தாந்தேதி, தளபதி ஸான்ஜுர்ஜோ‡ என்பவன், செவில்லே என்ற ஊரைப் பிடித்துக்கொண்டு, அண்டலூஸ்யா மாகாணத்திற்கு, தான் கவர்னர் என்று விளம்பரப் படுத்திக்கொண்டான். ஆனால் செவில்லேயி லிருந்த தொழிலாளர்கள், இவனுடைய நோக்கம் நிறை வேற இடங் கொடுக்கவில்லை. கடைசியில் இவன் பிடிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டான் ஆனால் பிரசிடெண்ட் ஜமொரா இவனுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்தான்.

பாசிஸ்ட் மனப்பான்மை கொண்ட ராணுவத் தலைவர்களைப் பொறுப்புள்ள பதவிகளில் நியமித்துத் தங்களைப் பலப்படுத்திக்கொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தது, குடியரசு அரசாங்கத்தினர் செய்த பெரிய தவறாகும் என்று அப்பொழுதே பலர் கூற முற்பட்டனர். உதாரணமாக, ஸான்ஜுர்ஜோ, குடியரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தான். மொராக்கோவின் கமிஷனராக நியமிக்கப்பட்டான். பிறகு அண்டலூஸ்யா மாகாணத்தின் கமிஷனாக நியமனம் பெற்றான். இங்கிருந்தே இவன் கலகத்துக்குக் கிளம்பினான். இவன் கமிஷனராயிருந்த காலத்தில், தனது அதிகார பலத்தினால் பொதுவுடமைக் கட்சியினரையும், அபேதவாதிகளையும் பல வழியாகத் துன்புறுத்தினான்.

தற்காலிகக் குடியரசு அரசாங்கம் ஏற்பட்ட போது, லெர்ரு என்பவன் அந்நிய நாட்டு மந்திரியாக நியமனம் பெற்றானல்லவா? இவன், குடியரசினர் விப

‡ General Sanjurjo இவன் 1936ம் வருஷம் ஜூலை மாதம் 18ந் தேதி ஓர் ஆகாய விமானத்திலிருந்து விழுந்து இறந்து விட்டான்.

ரீதமான சீர்திருத்தங்கள் ஒன்றையும் செய்து விடாத படி தடுக்கவே மந்திரிச் சபையில் புகுந்துகொண்டான். நிரந்தரக் குடியரசு ஏற்பட்ட பிறகு அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டான். பின்னர் இவன், கில் ரோப்ளெஸோடு சேர்ந்துகொண்டு, அரசாங்கத் திட்டங்கள் நடைமுறை யில் கொணர முடியாதபடி தலைகர்ந்து வந்தான். பார்லி மெண்டில் அரசாங்கத்தார் ஒரு மசோதா கொண்டு வந் தால், அதனைத் தள்ளிப் போடுமாறு செய்வது முதலிய பல அரசியல் சூழ்ச்சிகளினால், ரோப்ளெஸூம் லெர்ருவும் சேர்ந்து, குடியரசு அரசாங்கத்தின் நன் னோக்கங்களைச் சிதைத்து வந்தனர்.

இவர்களுடைய இத்தகைய சூழ்ச்சிகளினாலே, குடியரசு அரசாங்கத்தின் முதல் மந்திரிச் சபையா னது, 1933ம் வருஷம் செப்டம்பர் மாதம் 13ந் தேதி ராஜீநாமா செய்துவிட்டது.

பார்லிமெண்ட் தேர்தல்கள் நடைபெற்றன. குடி யரசு அரசாங்கத்தை நடத்திக்கொண்டு வந்த குடியர சுக் கட்சியினரும், அபேகவாதக் கட்சியினரும் பெருந் தோல்வியடைந்தனர். ரோப்ளெஸ் கட்சியினரும் லெர்ரு கட்சியினரும் வெற்றியடைந்தனர். பாசிஸத்திற்கு வெற்றி!

லெர்ரு, மந்திரிச் சபையை யமைத்தான். ரோப் ளெஸ், மந்திரிச் சபையில் ஸ்தானம் ஏற்றுக் கொள்ள வில்லை. லெர்ரு அரசாங்கமானது, ரோப்ளெஸின் தூண்டுதலின் பேரில், 1931ம் வருஷம் முதல் 1933ம் வருஷம் வரை குடியரசுக் கட்சியினர் அமுலுக்குக் கொண்டுவந்திருந்த திட்டங்களை யெல்லாம் பயனற்றன வாகச் செய்துவிட்டது. பழைய மாதிரியே, அரசாங் கப் பொக்கிஷத்திலிருந்து பாதிரிமார்களுக்குப் பணம்

அளிக்கப்பட்டது. பாதிரிமார்களின் ஆதிக்கத்தில் நடைபெற்று வந்த பள்ளிக்கூடங்கள் முன்போல் திறக்கப்பட்டு நடைபெறலாம் என்று அறிவிக்கப்பட்டது. நாடு கடத்தப்பட்டவர்கள் மீது விதிக்கப்பட்ட தடையுத்திரவுகள் ரத்து செய்யப்பட்டன. காடலோனியா மாகாணத்திற்குப் பொறுப்பாட்சி கொடுக்கப்பட்டிருந்ததல்லவா? அதனை லெர்ரு குறைக்கப் பார்த்தான். ஆனால் காடலோனியர்கள், 1934ம் வருஷம் ஜனவரி மாதம் ஒரு தேர்தல் நடத்தி, தங்களுடைய உரிமையை நிலைநாட்டிக் கொண்டனர்.

இதனிடையே லெர்ருவுக்கும் ரோப்ளெஸுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. குடியரசின் பிரசிடெண்டும், லெர்ருவின் திட்டங்கள் சிலவற்றிற்கு அங்கீகாரம் கொடுக்கவில்லை. கடைசியில், லெர்ரு மந்திரிச்சபை, 1934ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25ந் தேதி ராஜீநாமா செய்துவிட்டது.

ஏப்ரல் மாதம் 28ந் தேதி ரிகார்டோ சாம்பர்† என்பவன், மந்திரிச் சபையை அமைத்தான். ரோப்ளெஸ், இந்த மந்திரிச் சபைக்கு ஆதரவு கொடுத்ததோடு, பாசிஸ்ட் இயக்கத்தையும் பலத்த பிரசாரத்தின் மூலம் ஸ்திரப்படுத்திக்கொள்ள முயன்றான். இதனால் தொழிலாளர்களும், மற்றப் பொதுவுடமைக் கட்சியினர் முதலாயினோரும் எதிர்ப்புக் காட்டத் தொடங்கினர். நாட்டிலேயோ பொருளாதார நிலை மிகவும் மோசமாயிருந்தது. கிராம விவசாயிகளும் நகரத்தொழிலாளர்களும், பலவிதமான அதிருப்திகளுக்குள்ளாயினர்.

---

† Ricardo Samper.

கடைசியில் 1934ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதி சாம்பர் மந்திரிச்சபை வீழ்ந்து விட்டது. ரோப்ளெஸே இதற்குக் காரணமாயிருந்தவன்!

ரோப்ளெஸ் மறுபடியும் லெர்ருவைக்கொண்டு மந்திரிச் சபையை அமைக்கச் செய்தான். இருவரும் சேர்ந்து, இத்தலியிலும் ஜர்மனியிலும் இருக்கிற சர்வாதிகார முறையை ஸ்பெயினிலும் ஏற்படுத்தத் தீர்மானித்தனர். இது, குடியரசுக் கட்சியினர், தொழிலாளர் கட்சியினர் முதலியோருக்குத் தெரிந்தது. எனவே, பாசிஸ்ட் ஆட்சி முறையை எவ்வகையிலும் எதிர்த்து நிற்பதென்று உறுதி கொண்டார்கள்.

# VI

## அடக்கினால் அடங்குமா?

1934ம் வருஷம் அக்டோபர் மாதம், ஸ்பானியருடைய நினைவிலே எக்காலத்திலும் இருக்கும். அக்டோபர் மாதம் 4ந் தேதி, ஸ்பெயின் தேசத்துத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் எல்லாத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்து, லெர்ரு—ரோப்ளெஸ் மந்திரிச் சபையின் மீது தங்களுக்குள்ள அதிருப்தியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று தொழிலாளர் கட்சியினர் அறிக்கை வெளியிட்டனர். அப்படியே, பல இடங்களிலும் வேலை நிறுத்தங்கள் செய்யப்பட்டன. ஆனால் வேலை நிறுத்தம் செய்தவர்கள் நிர்ணயமான திட்டமொன்றையும் வகுத்துக்கொள்ளவில்லை. ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக வேலை நிறுத்தஞ் செய்தவர்கள் நடந்துகொண்டார்கள். சில இடங்களில், பாசிஸ்ட் கட்சியினர் இவர்களை அடக்கிவிட்டார்கள். இன்னும் சில இடங்களில், அதிகார ஸ்தாபனங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள் தொழிலாளர்கள்.

பாசிஸ்ட் கட்சியினருக்கும் தொழிலாளர்களுக்கும் பல இடங்களில் கைகலந்த சண்டை நடந்தது. தொழிலாளர்கள், எந்தெந்த பிரதேசங்களில் அதிகார ஸ்தாபனங்களைக் கைப்பற்றிக் கொண்டார்களோ அந்தந்த இடங்களில் மிக ஒழுங்காகவே நடந்துகொண்டார்கள். இந்தச் சமயங்களில் இவர்கள் காட்டிய ஒழுங்கு, தீரம், பொறுமை முதலியவற்றைப் பலரும் பாராட்டினர். பொதுஜன அமைதிக்கு எவ்வித பங்கமும் இவர்களால் விளையவில்லை. அதற்கு மாறாக இவர்கள் கைப்பற்றிக்கொண்ட பொதுஜன ஸ்தாபனங்களை

மிகத் திறமையாக நடத்திக் காட்டினார்கள். பிற்காலத்தில் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்டால் எப்படி நடத்துவதென்பதற்கு, இந்த எழுச்சியே ஒரு பாடமாயமைந்தது.

அது மட்டுமல்ல. தொழிலாளர்கள், இதற்கு முன்னர் எவ்வித ராணுவப் பயிற்சியும் பெருதவர்களாயிருந்தும், ஸ்பெயினின் நல்வாழ்வின் மீது கொண்ட ஆவலினால் செய்த எண்ணரிய தியாகங்களும் இந்த எழுச்சியின்போதுதான் வெளிப்பட்டன. சிறப்பாக அஸ்டூரியா மாகாணத்தில், இவர்கள் தங்கள் உயிரைத் துரும்பாக மதித்து நடந்து கொண்டிருக்கிருர்கள். ஒரு சமயம், அஸ்டூரியா மகாணத்தின் தலை நகரமாகிய ஓவீடோவில், பாசிஸ்ட் படையினருக்கும் தொழிலாளர்களுக்கும் நடைபெற்ற போராட்டத்தின் பயனாக, பல தொழிலாளர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார்கள். இவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து சிகிச்சை செய்து கொண்டு, உடனே சண்டைக்குப் புறப்பட்டு விடுவார்கள். டாக்டர்கள் சிறிது தாமதப் படுத்தினலும் இவர்களுக்குக் கோபம் வரும். இங்கு ஒரு சிறிய உதாரணம். காயமடைந்த ஒரு தொழிலாளிக்கு, டாக்டர் சிகிச்சை செய்து கொண்டிருக்கிருன்.

'தயை செய்து சீக்கிரமாக எனக்குச் சிகிச்சை செய்யுங்கள். நான் திரும்பிச் செல்ல வேண்டும். நாங்கள் 'சாண்டா கிளாரா பாரக்ஸைக்' கைப்பற்றிகொள்ள வேண்டும். அங்கு பாசிஸ்டுகள் நிறைந்திருக்கிருர்கள்' என்றுன் காயமடைந்த தொழிலாளி வீரன்.

'இல்லை; இன்னும் சில நாட்கள் நீ படுக்கையிலிருக்க வேண்டும்' என்றுன் டாக்டர்.

ஆனால் அந்த வீரன் படுத்திருக்க மறுத்து விட்டான். சிகிச்சை செய்து கொள்ளாமலே, சண்டைக்குப் புறப்பட்டான். மறு நாள், அந்தோ! அவன் பாதையிலே இறந்து கிடந்தான்!

தேசத்திற்காக என்ன தியாகம்! வறுமைக்கும் தியாகத்திற்கும் நெருங்கிய உறவு உண்டு என்பதை, ஸ்பெயின் தேசத்து ஏழைத் தொழிலாளர்கள், இந்த எழுச்சியினால் நன்கு காட்டி விட்டார்கள்.

ஆனால் லெர்ரு—ரோப்ளெஸ் அரசாங்கத்தார் இந்த அக்டோபர் மாத எழுச்சியைப் பலாத்காரத்தினால் அடக்கி விட்டனர். பலாத்காரம் என்றால் லேசான பலாத்காரமா? ஓவீடோ என்ற ஊரை, ஆகாய விமானங்களைக் கொண்டும், யந்திர பீரங்கிகளைக் கொண்டும் தாக்கினார்கள். மற்றும், மொராக்கோ துருப்புகளைக் கொண்டும் தொழிலாளரை அடக்கினார்கள். இங்ஙனம் பல இடங்களிலும் தோன்றிய தொழிலாளர் எழுச்சியை அரசாங்கத்தினர் அடக்கினரோ யாயினும் ஓவீடோவில் இவர்கள் நடத்திய திருவிளையாடல்கள் சகிக்க முடியாதனவாயிருந்தன. ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் யந்திர பீரங்கிகள் முன்னர் துண்டு துண்டானார்கள். இங்ஙனம் இறந்து போனவர்களை வரிசையாக அடுக்கி, ஒரே சமயத்தில் தீக்கிரையாக்கினார்கள்.

சுதந்திரம் பெற வேண்டுமானால் எவ்வளவு தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது!

தொழிலாளர் எழுச்சியைப் பலாத்காரத்தினால் அடக்கி விட்ட பிறகு, லெர்ரு—ரோப்ளெஸ் அரசாங்கத்தார் அடக்கு முறைக்கு ஆரம்பித்தனர். சொல்ல

வேண்டுமா? வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டு மென்ற எண்ணம், அதிகார பலத்தோடு சேர்ந்து விட்ட தேயானால் அடக்குமுறைக்கு ஒரு வரம்பு முண்டோ? சுமார் அறுபதினாயிரம் பேருக்கு அதிகமானவர் கைதி யாயினர். இவர்களில் முப்பதினாயிரம் பேருக்கு மேல் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டனர். ஸ்பெயின் சிறைச்சாலைகள் நிரம்பி விட்டன.

ராணுவச் சட்டம் அமுலுக்குக்கொண்டு வரப் பட்டது. இந்தச் சட்டம், சுமார் ஐந்து மாதகாலம் ஆர்ப்பாட்டம் செய்தது. இந்த ஐந்து மாத காலத்தில், ஐயோ, ஜனங்கள் என்னென்ன விதமான துன்பங்களை அநுபவித்தார்கள்! எவ்வளவு ஹிம்சைகளைத் தேசத்துக் காகச் சகித்துக் கொண்டார்கள்! ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்த இரண்டு நாட்களுக்குள், அரசாங்கத் திற்கு விரோதமானவர்களென்று சுமார் ஏழாயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள்! புரட்சிக்குக் கிளம் பின தொழிலாளர்கள், குடியரசுக் கட்சியினர் முதலா யினோருடைய உணர்ச்சிகளை அடக்கி அவர்களுடைய மனத்திலே ஒரு பயத்தை உண்டு பண்ணிவிட வேண்டு மென்ற நோக்கத்துடன், கைதியானவர்கள் நீண்ட காலச் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். தொழிலாளர் சங்கங்கள் முதலியன சட்ட விரோத மென்று சொல்லி நசுக்கப்பட்டன. அக்டோபர் புரட்சி யிலே கலந்து கொண்டவர்கள் என்று எவர்கள் மீதே னும் சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் உடனே சுட்டு வீழ்த்தப் பட்டார்கள்.

இந்த அடக்கு முறை, சிறப்பாக அஸ்டூரியா மாகா ணத்தில்தான் அதிக மும்முரமாக இருந்தது. ஏனென் றால் இந்த மாகாணத்தவர்கள்தான், வேலை நிறுத் தத்தில் அதிகமான பங்கெடுத்துக் கொண்டதோடு அர

சாங்கத்தையும் எதிர்த்து நின்றனர். இந்த மாகாணத்தில் கைதி செய்யப்பட்டவர்கள், சிறைச்சாலையிலே எவ்வளவு கஷ்டங்களை அநுபவித்தார்கள்? ஓவீடோ சிறையிலிருந்தவர்களில் 564 பேர் சேர்ந்து ஒரு மகஜர் தயாரித்து அரசாங்க வக்கீலுக்கு அனுப்பினார்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டிருந்ததாவது:—

> "நவீன மத விசாரணை சபைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. பீஜங்களைப் பிசைதல்; ஜனனேந்திரியங்களையும் மற்ற அவயவங்களையும் சுட்டு எரித்தல்; சாவணத்தைக் கொண்டு கைகளையும் கால் கட்டை விரல்களையும் நசுக்குதல்; சுத்தியைக் கொண்டு கைக்கணுக்களிலும் கால் கணுக்களிலும் அடித்தல்; பல் குத்திகளை நகங்களினிடை செலுத்துதல்; கொதிக்கக் கொதிக்க வெந்நீரை மேலே ஊற்றுதல்; 'இதுதான் உங்களுடைய சவக்குழி' என்று சொல்லி கைதிகளையே குழி தோண்டச் செய்தல்; தாய் அல்லது சகோதரி அல்லது மனைவி இவர்களை வரவழைத்து அவர்கள் முன்னிலையில் கைதிகளை அடித்தல். இத்தகைய துன்பங்களையெல்லாம் நாங்கள் அநுபவித்துக் கொண்டிருக்கிறோம்."

காடலான் மாகாண சுதந்திரத்திற்காகப் போராடின லூயிஸ் கொம்பனிஸ்¶ முதலிய பலர், முப்பது வருஷச் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். இன்னும் சிலர் வெளிநாடுகளுக்கு ஓடிப் போய் விட்டார்கள்.

லெர்ரு—ரோப்ளெஸ் அரசாங்கம், ஒரு பக்கம் அடக்கு முறையை அநுஷ்டித்தது. மற்றொரு பக்கம் குடியரசு அரசாங்கத்தினரின் சீர்திருத்த முறைகளை நடை முறையில் வராதபடி தகைந்து விட்டது. மற்றும் முதலாளித்துவத்தை ஆதரிக்கிற எல்லாக்

¶ Luis Companys.

கட்சியினரையும் ஒன்று படுத்தி, இந்தச் செல்வாக்கை, அரசாங்க ஸ்தாபனங்கள் அனைத்திலும் பிரயோகிக்கத் தொடங்கியது.

இந்த அக்டோபர் புரட்சி காரணமாக, சிறைவா சத்திற்குள்ளானவர்கள் சுமார் எண்பதினாயிரம் பேர்; இறந்து போனவர் சுமார் ஐயாயிரம் பேர்; காயமடைந் தவர் சுமார் பதினாயிரம் பேர்.

இந்த அடக்கு முறைகளினால் சில நன்மைகளும் உண்டாகாமலில்லை. சிறையிலே துன்பம் அநுபவித்துக் கொண்டிருந்த அபேதவாதிகள், பொதுவுடமைக் கட்சி யினர், புரட்சியிலே நம்பிக்கை கொண்டவர்கள் முதலிய பலதிறப்பட்டவரும் ஒன்று சேர்ந்தார்கள். தங்களுக் குள்ளிருந்த சில்லரை வேற்றுமைகளை யெல்லாம் மறந் தனர். புரட்சியில் ஏன் தோல்வி யுற்றோம் என்பதைப் பற்றிச் சிந்திக்கவும், அதனின்று பாடங்களைக் கற்றுக்கொள்ளவும், சிறைச் சாலை கள் பள்ளிக்கூடங்கள் போல் அமைந்தன. சிறைச் சாலைகளில் 'ஒற்றுமைக் கமிட்டிகள்' தோன்றின. இந் தக் கமிட்டிகள் மூலமாகவே, கைதிகள், சிறைச் சாலை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

குறைந்த காலத் தண்டனையை அநுபவித்து விட்டு சிறைகளிலிருந்து வெளி வந்தவர்கள் சும்மாயிருக்க வில்லை. சோர்ந்து விடவுமில்லை. அரசாங்கத்தினால் நசுக் கப்பட்ட தொழிலாளர் ஸ்தாபனங்களைப் புதுப்பிக்கத் தொடங்கினார்கள். எனவே 1935ம் வருஷம் மே மாதத் திலிருந்து, தொழிலாளர் ஸ்தாபனங்கள் முக்கிய நகரங் களில் மறுபடியும் தலை காட்ட ஆரம்பித்தன.

லெர்ரு—ரோப்லெஸ் அரசாங்கம் அநுஷ்டித்து வந்த அடக்கு முறைகள் அரசாங்க அங்கத்தினர்

களுக்கே பிடிக்கவில்லை. தவிர, மந்திரிச் சபைக்குள்ளேயே பலவித அபிப்பிராயபேதங்கள் அடிக்கடி தோன்றலாயின. இதனால் மந்திரிச் சபைகள் மாறி மாறியமைந்தன. 1934ம் வருஷம் அக்டோபர் மாதத்திலிருந்து, 1935ம் வருஷம் கடைசி வரை, ஐந்து முறை, மந்திரிச் சபைகள் மாறின. ஆனால் சோப்ளெஸ் மட்டும், யுத்த மந்திரி என்ற பெயரை வைத்துக் கொண்டு யுத்த சன்னத்தங்கள் பல செய்து கொண்டு வந்தான்.

இப்படி மந்திரிச் சபைகள் மாறி மாறித் தோன்றினமையால், ஜனங்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது தேசத்தின் பொருளாதாரம், எவ்வளவு கெடவேண்டுமோ அவ்வளவு தூரம் கெட்டுவிட்டது. மாறி மாறியமைந்த மந்திரிச் சபைகளும், முதலாளித்துவத்தின் சார்பு பற்றி நின்றமையால், தேச ஜனங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலியவற்றிற்காக, அரசாங்க பொக்கிஷத்திலிருந்து அதிகமான பணம் செலவழிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, பாதிரிமார்களுக்கும், முதலாளிகளின் வியாபார திட்டங்களுக்கும் அதிக பணம் செலவழிக்கப்பட்டது. தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியோருடைய வருமானம் குறைந்தது. தேசத்தின் ஏற்றுமதி வியாபாரம் சுருங்கியது. வேலையில்லாதோர் தொகை பெருகியது. 1933ம் வருஷத்தில் சுமார் ஐந்தரை லட்சம் பேர் வேலையில்லாமலிருந்தார்கள். ஆனால் 1935ம் வருஷத்தில், இவர்களுடைய தொகை சுமார் பதினைந்து லட்சமாகப் பெருகியது.

சிறைச்சாலைகளிலே தோன்றின 'ஒற்றுமைக் கமிட்டி'கள் தேசத்தின் பல பாகங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றில் மத்திய வகுப்பினரும் சேர்ந்தனர். எனவே, முதலாளித்துவத்தை ஆதரிக்கிறவர்கள் ஒரு

கட்சியினராகவும், மற்ற அனைவரும் வேறொரு கட்சியினராகவும் பிரிந்தார்கள்.

இந்த நிலையிலே 1935ம் வருஷம் கழிந்தது.

ரோப்ளெஸ், அரசாங்க நிருவாகப் பொறுப்பு அனைத்தையும் தானே ஏற்றுக்கொண்டு, சர்வாதிகாரியாக வந்துவிட வேண்டுமென்று முயன்றான். இதற்கு, குடியரசின் 'பிரசிடெண்ட்' ஜமோரா இடங்கொடுக்கவில்லை. இதனால் அபிப்பிராய பேதங்கள் பல ஏற்பட்டன. 1936ம் வருஷம் ஜனவரி மாதம் 7ந் தேதி பார்லிமெண்டு கலைக்கப்பட்டது. பிப்ரவரி மாதம் 16ந் தேதியன்றும், மார்ச்சு மாதம் முதல் தேதியன்றும் பார்லிமெண்டு தேர்தல்கள் நடைபெற நிச்சயிக்கப்பட்டன.

இந்தத் தேர்தலில் ஒரே ஒரு பிரச்னைதான் முன்னணியில் நின்றது. குடியரசா? பாசிஸமா?

# VII

## ஒற்றுமையின் உதயம்

1934ம் வருஷம் அக்டோபர் மாதம் எழுந்த புரட்சியினால் பொதுவாக ஸ்பானியர்களும், சிறப்பாகத் தொழிலாளர்களும் அதிகமான துன்பத்தை அநுபவித்தார்களே யாயினும், அதன்மூலமாக, அடுத்த போராட்டத்திற்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டார்கள். அதற்காக ஓர் ஆயுதத்தையும் தேடிக்கொண்டார்கள். அதுதான் ஒற்றுமை.

முதலாளித்துவத்திற்கு விரோதமாயுள்ள எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட வேண்டுமென்று 1930ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்திலிருந்தே முயற்சி செய்யப்பட்டது. இது, 1934ம் வருஷம் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு வலுவடைந்தது. 1936ம் வருஷம் பிப்ரவரி தேர்தலுக்கு முன்னர், இந்த ஒற்றுமை உருவாகியது. இதற்கே 'பொதுஜன முன்னணி'¶ என்று பெயர்.

பாசிஸம் என்ற முதலாளித்துவத்திற்கு விரோதமாயுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், மத்திய வகுபார் முதலிய அனைவரும் இந்தப் 'பொதுஜன முன்னணி'யில் சேர்ந்தனர். இதில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள், தங்களுடைய தனித்துவத்தை விட்டுக் கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் அனைத்தும், பாசிஸத்திற்கு விரோதி என்ற முறையில் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். பொதுவாக ஜனங்களுடைய, சிறப்பாக ஏழை ஜனங்களுடைய வாழ்க்கை அந்தஸ்து

¶ People's Front.

உயரவேண்டும் என்பதே இந்த ஒற்றுமை ஸ்தாபனத்தின் நோக்கம்.§

பிப்ரவரி தேர்தலுக்கு முன்னர், இந்தப் 'பொது ஜன முன்னணி' உருவாகியது என்று சொன்னேமல்லவா? 1936ம் வருஷம் ஜனவரி மாதம் 16ந் தேதி, ஸ்பெயினிலுள்ள பொதுவுடமைக் கட்சி, அபேதவாதக் கட்சி, குடியரசுக் கட்சி, தொழிலாளர் கட்சி முதலிய பல கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. இதற்கு 'பொதுஜன முன்னணி ஒப்பந்தம்' என்று பெயர். இந்த ஒப்பந்தத்தில் எட்டு பிரிவுகள் அடங்கியிருந்தன. இவற்றைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

1. அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப் பெறுவார்கள். வேலை நிறுத்தங்களில் கலந்து கொண்டதற்காக அரசாங்க உத்தியோகங்களினின்று விலக்கப்பட்டவர்கள், மீண்டும் அந்த ஸ்தானங்களில் அமர்த்தப்படுவார்கள்.

2. குடியரசுச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற பிரஜா உரிமைகள் பாதுகாக்கப்படுகிற முறையில், நியாய ஸ்தலங்கள், பார்லிமெண்டு, மற்ற ஸ்தல ஸ்தா

§ இந்தப் 'பொதுஜன முன்னணி' என்ற ஒற்றுமை, பிரான்சில், 1934ம் வருஷம் ஜுலை மாதம் 27ந் தேதி ஏற்பட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதுதான், ஸ்பெயினிலும் இந்த 'முன்னணி ஒற்றுமை' ஏற்படுவதற்கு முக்கிய தூண்டுகோலாயிருந்தது. இந்த முன்னணி எண்ணத்தை உண்டு பண்ணியவன், பிரெஞ்சு பொதுவுடமைக் கட்சியின் காரியதரிசியாகிய மாரிஸ் தோரெஸ் என்பவன்.

பனங்கள் ஆகியவை திருத்தி யமைக்கப்படும். காரணங் காட்டாமல் கைது செய்யப்பெறுகிற வழக்கம் இனி இராது. சிறைச்சாலை நிருவாகம் ஒழுங்கான முறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பெறும். போலீஸாரும், மற்ற ராணுவ உத்தியோகஸ்தர்களும் செய்த அட்டூழியங்களைப் பற்றி விசாரிக்கப்படும்.

3. நிலவரி, குத்தகைத் தொகை முதலியவைகளைக் குறைத்தும், வேறு வகைகளிலும் விவசாயிகளுக்குச் சாதகம் செய்யப்பெறும்.

4. சில்லரைக் கைத்தொழில்கள், வியாபாரங்கள் முதலியவற்றிற்குப் பாதுகாப்பு அளிக்கப்பெறும்.

5. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பெறும்.

6. தேசத்தின் பொக்கிஷ நிலைமை சீர்திருத்தியமைக்கப்பெறும்.

7. தொழிலாளர் நன்மைகளுக்குரிய சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பெறும். மற்றும், தனிப்பட்டவர்களுடைய நிருவாகத்திலிருக்கும் தரும சொத்துக்களை ஒன்று சேர்த்து தேசத்தின் பொது நன்மைக்குபயோகமாகுமாறு செய்யப்பெறும்.

8. தேசத்தின் கல்வி முறை சீர் திருத்தியமைக்கப்பெறும்.

கடைசியாக, ஸ்பெயின் தேசத்து வெளிநாட்டுக் கொள்கையானது, சர்வதேச சங்கத்தின் கொள்கைகளையும் முறைகளையும் தழுவியதாகவே இருக்கும்.

தொழிற் கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கு, இந்த எட்டு திட்டங்களும் மிகச் சாதாரணமாகவும் மித

வாதத் தன்மையுடையனவாகவும் தோன்றிய போதி லும், ஒற்றுமையை முன்னிட்டும், தேச நன்மையைக் கருதியும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட எல்லாக் கட்சியினரையும் சேர்த்து, இனி, முன்னணிக் கட்சி யினர் என்றே அழைப்போம்.

மேற்படி ஒப்பந்தத்தை வாக்காளர்கள் முன்னிலை யில் கிளத்தி, இந்த முன்னணிக் கட்சியினர், பிப்ரவரி தேர்தலுக்குப் பல அபேட்சகர்களை நிறுத்தினார்கள். தீவிரமான பிரசாரம் செய்தார்கள்.

1936ம் வருஷம் பிப்ரவரி மாதம் 16ந் தேதி தேர் தல் நடைபெற்றது. பார்லிமெண்டில் மொத்தம் 437 ஸ்தானங்கள். இவற்றில் முன்னணிக் கட்சியினருக்கு 268 ஸ்தானங்கள் கிடைத்துவிட்டன. எதிர்க் கட்சி யினராகிய பாசிஸ்டுகளுக்கு 205 ஸ்தானங்கள்தான் கிடைத்தன. இதை, பாசிஸ்ட் கட்சியினர் எதிர் பார்க்க வேயில்லை.

ஸ்பெயின் ஜனங்கள், குடியரசா பாசிஸமா என்ற கேள்விக்குப் பதில் கூறிவிட்டார்கள்.

தேர்தலைப்பற்றிய புள்ளி விவரங்கள் தெரிவிக்கப் பட்டதும் ஜனங்கள், தலைகால் தெரியாமல் சந்தோஷங் கொண்டாட ஆரம்பித்தார்கள். இதனால், சில இடங் களில் வரம்பு கடந்த செயல்களும் நிகழ்ந்துவிட்டன. 1934ம் வருஷம் அக்டோபர் மாதப் புரட்சியில் கலந்து கொண்டதன் காரணமாக லெர்ரு-ரோப்ளெஸ் அரசாங் கத்தினரால் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களை, ஜனங் கள் பலவந்தமாக விடுதலை செய்வித்தார்கள். இவை

களையெல்லாம் கண்ட அரசாங்கத்தினர், தாமே முப் பதினாயிரம் கைதிகளை விடுதலை செய்துவிட்டனர். தவிர, முன்னர் வேலையினின்று விலக்கியவர்களை யெல்லாம் மீண்டும் அந்தந்த உத்தியோகங்களில் நியமித்தார்கள். ஆனால் மன வெறுப்புடன்தான்!

பார்லிமெண்ட் தேர்தலில் வெற்றி கண்டதோடு ஜனங்கள் திருப்தியடையவில்லை. குடியரசின் பிரசி டெண்டாயிருந்த ஜமோராவையும் விலக்கிவிடத் தீர் மானித்தார்கள். ஏனென்றால் இவன், லெர்ரு—ரோப் ளெஸ் அரசாங்கத்து அடக்குமுறைகளுக் கெல்லாம் துணைக் கருவியா யிருந்தா னல்லவா? முன்னணிக் கட்சியினர், இவனிடத்திலே அதிக ஆத்திரங் கொண் டிருந்தார்கள். கடைசியில், 1936ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஏழாந்தேதி பார்லிமெண்டில், இந்தப் பிரச்னை வாதத்திற்கு வந்தபோழ்து, ஜமோராவை, பிரசிடெண்ட் பதவியிலிருந்து விலக்குவதென்று 238 பேரும், கூடா தென்று 5 பேரும் வாக்குக் கொடுத்தார்கள்.

ஜமோரா, பிரசிடெண்ட் ஸ்தானத்தினின்று இறக் கப்பட்டு விட்டான்.

பின்னர், மே மாதம் பத்தாந்தேதி நடைபெற்ற தேர்தலில் மான்யுவல் அஜனா‡ பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். இவன் ஸ்பெயின் குடியர சின் இரண்டாவது பிரசிடெண்டு. முன்னணிக் கட்சி யினர் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்டனர். காஸரஸ் குவிரோகா† என்பவன் பிரதம மந்திரியா னான்.

‡ Manuel Azana.

† Casares Quiroga.

தேர்தலில் தங்களுக்குக் கிடைத்த வெற்றியைச் சிதறவிடக் கூடாதென்று, முன்னணிக் கட்சியினர் முன்னைவிட அதிகமாக ஒற்றுமைப் படலாயினர்.


இந்த முன்னணிக் கட்சியினருக்கு எதிராயிருந்த மற்ற பாசிஸ்ட் கட்சியினரோ, தாங்கள் அடைந்த தோல்வியை எப்படியாவது மாற்றிவிட வேண்டுமென்று, கங்கணங் கட்டிக்கொண்டார்கள். முதலாளிகள் பலரும் ஒன்று சேர்ந்துகொண்டு, தேசத்தின் பணப்புழக்கத்தில் ஒருவித சிக்கலை உண்டு பண்ணினார்கள். பணத்தையெல்லாம் வெளி நாடுகளுக்கு அனுப்பினார்கள். பாங்கிகளில் போட்டு வைத்திருந்த பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். வியாபாரத்தில் மந்தம் உண்டாகுமாறு செய்தார்கள். நிலச்சுவான்தார்கள், தங்கள் சுவாதீனத்திலிருந்த நிலங்களையெல்லாம் உழுது சாகுபடி செய்யாமல் காம்பாகப் போட்டுவிடத் தீர்மானித்தார்கள். ஏன் இப்படி என்று இவர்களை யாராவது கேட்டால், விவசாயிகளின் கூலி விகிதம் அதிகமாகி விட்டதென்றும், சாகுபடியில் தங்களுக்குப் பங்கு வேண்டுமென்று விவசாயிகள் கிளர்ச்சி செய்கிறார்களென்றும் காரணங்கள் கூறினார்கள்.

இப்படி முதலாளிவர்க்கத்தினர், ஒருபுறம் செய்து கொண்டிருக்க, ரோப்ளெஸ் முதலிய பாசிஸ்ட் கட்சியினர், அஜனா அரசாங்கத்தைப் பயமுறுத்திக்கொண்டிருந்தார்கள். தேசத்தில் 'அமைதியும் ஒழுங்கும்' நிலை பெறாவிட்டால், பொருளாதார வாழ்வில் ஒரு நிம்மதி காண முடியாதென்று கூறினார்கள். ரகசிய முறையில் தங்களுடைய ஆயுத பலத்தையும் பெருக்கிக்கொண்டு வந்தார்கள். செல்வமும், அதன் மூலமாக ஏற்பட்ட செல்வாக்கும் இவர்களிடத்திலே இருந்ததல்லவா? பயமுறுத்திக்கொண்டு வந்ததோடு இவர்கள் நிற்கவில்லை.



இன்டெலேஷ்
யோ ப்ரீடோ. இவ
ன், 1936ம் வரு
ஷ ம ஜுலை மாதம்
17 ந் தேதி
கலகம் கிளம்
பியவுடன், தொழி
லாளர் படையை
எறபடுத்தி அதறகு
ஒழுங்கையும் யுத்
தப பயிற்சியையும்
கொடுத்தவர். பெ
ரிய உருவினன் ;
உரத்த குரலினன்.

ஸோடெலோ.
இவனதுகொலையே
17-7-36ல் ஸபெயி
ன் முழுவதும்குழப்
பமாகிற தீயை மூ
ட்டி விட்டது. இவ
ன் வசீகாமானகண்
களை உடையவன்.
எதிர்க் கட்சியினர்
மனத்தில் சுறுக்கெ
ன்று தைக்குமாறு
பேசுவான். இவனு
டைய கண்களில்
குண்டு பாய்ம்படி
யாக இவன் கொலை
செய்யப் பட்டான்





கபல்லெரோ. ஸ்பெயின் தேசத் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய சக்தி இவனிடமே இருப்பதாக ஸ்பானிஷ் பொது ஜனங்கள் நம்புகிறார்கள். சிறைவாசமும், மனைவியை யிழந்த துயரமும் இவனுடைய மனோ உறுதியைச் சிறிது கூடக்குலைக்கவில்லை. இவனுக்கு வயது 64. ஆனாலும் பார்வைக்கு 50 வயதானவனைப் போலவே இருப்பான்.



தளபதி பிராங்கோ. இவன் எப்பொழுதும் சிரித்த முகத்துடனேயே இருப்பான். பாசிஸ்ட் கட்சியில் இவன் நிரம்பச் செல்வாக்குப் பெற்றவன். ஆனால் ஸ்பானிஷ் பொது ஜனங்கள் இவனை அதிகமாக வெறுக்கிறார்கள்.

பின்னடி ஏற்படப்போகிற பெரிய சண்டைக்கு வேறு பலவகைகளிலும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இக்கட்சியைச் சேர்ந்த ராணுவ உத்தியோகஸ்தர் பலர், மொராக்கோவுக்குச் சென்றார்கள். ரோப்ளேஸோ அடிக்கடி பிரான்ஸுக்குப்போய் வந்து கொண்டிருந்தான். 'உல்லாசப் பிரயாணம்' என்று இதற்குச் சமாதானம் சொல்லப்பட்டது.

முன்னணிக் கட்சிக்குட்பட்ட தொழிலாளர் முதலியோர், தற்காப்பு நிமித்தம், தனித்தனித் தொண்டர் படைகளை நிறுவினார்கள். பொதுஜன அமைதியைக் காப்பதற்காக, அரசாங்கப் படைகளுடன் ஒத்துழைப்பதே இந்தத் தொண்டர் படைகளை ஏற்படுத்தியதன் நோக்கம். இந்தத் தொண்டர் படைகளில், இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலிய ஏழை மக்களும், மத்திய வகுப்பினரும் அதிகமாகச் சேர்ந்தார்கள்.

1936ம் வருஷத்துப் பிப்ரவரி தேர்தலுக்குப் பிறகு, சுமார் நான்குமாத காலம் ஆங்காங்குச் சில்லரைக் குழப்பங்களும், பலாத்காரச் செயல்களும், கொலைகளும் நடைபெற்றுக்கொண்டு வந்தன. முன்னணிக் கட்சியினரைப் பாசிஸ்டுகள் கொலை செய்வதும், பின்னவர் முன்னவரைக் கொலை செய்வதும் சாதாரண சம்பவங்களாகி விட்டன.

இதனிடையே 1936ம் வருஷம் ஜூன் மாதம் ஒரு பெரிய தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இதில் இரண்டரை லட்சம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தார்கள். ஆனால், அரசாங்கத்தார் இதனை ஒருவாறு சமாஸப்படுத்தி விட்டனர். இந்த வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிட்டவர்கள் பாசிஸ்ட் கட்சியினரே என்று பின்னால் சொல்லப்பட்டது.

ஆனால் பாசிஸ்டுகளோ, தேசத்திலே ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு, முன்னணிக் கட்சியினரும், தற்போதைய அரசாங்கமுமே காரணமென்று பல புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டினார்கள். 1936ம் வருஷம் ஜூன் மாதம் பதினேழாந்தேதி, பார்லிமெண்டில் ரோப்ளெஸ் பேசியபோது, (முன்னணிக் கட்சியினரால்) 251 மாதா கோவில்கள் எரிக்கப்பட்டன வென்றும், 269 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்களென்றும், 1500 பேருக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறதென்றும், பத்து பத்திரிகாலயங்களில் சேதம் உண்டுபண்ணப் பட்டிருக்கின்றதென்றும், 340 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன வென்றும் கூச்சலிட்டான்.

இந்தக் குற்றச் சாட்டுக்கு முன்னணிக் கட்சியினரும், அவர்களுடைய பத்திரிகைகளும் பதில் கூறின. பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்டவர்கள், தாக்கப் பட்டவர்கள், பயமுறுத்தப்பட்டவர்கள் இத்தனை பேர் என்று புள்ளி விவரங்களோடு இவர்களும் எடுத்துக் காட்டினார்கள். மாதா கோயில்களைத் தாக்கியதும் எரித்ததும் உண்மைதான். ஆனால் கோயில்கள் மீதோ, கத்தோலிக்கர் மீதோ கொண்ட துவேஷத்தினாலன்று. பாசிஸ்டுகள், இந்த மாதா கோயில்களைத் தங்களுடைய ஆயுத சாலைகளாக உபயோகப்படுத்திக் கொண்டார்கள். இந்த மாதா கோயில்களே, பாசிஸ்டுகளின் சூழ்ச்சி ஸ்தாபனங்களாயிருந்தன. இதனாலேயே மாதா கோயில்கள் எரிக்கப்பட்டன. இப்படியெல்லாம் முன்னணிக் கட்சியினர் சமாதானம் கூறினார்கள். ஒரு தேசத்தில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டால், ஒரு கட்சியினர், மற்றொரு கட்சியினரைப் பற்றிக் குறை கூறுவதும், குற்றஞ் சாட்டுவதும் சகஜமே.

1936ம் வருஷம் ஜூலை மாதம் 12ந் தேதி. அன்று மாட்ரிட் நகரம் நாகக் காட்சியை யளித்தது.

முன்னணிக் கட்சியைச் சேர்ந்த தளபதி காஸ்டில்லோ$ என்பவன் கொலை செய்யப்பட்டான். யாரால்? தெரியாது. ஆனால், அவன் கொலை செய்யப்பட்ட ஆறு மணி நேரங் கழித்து, பாசிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவனான கால்வோ ஸோடெலோ¶ என்பவன் கொலை செய்யப்பட்டு விட்டான். இந்த ஸோடெலோவின் உத்திரவின் பேரிலேயே, மேற்படி காஸ்டில்லோ கொலை செய்யப்பட்டான் என்று, அன்று மாட்ரிட்டில் வதந்தி உலவியது.

ஸோடெலோவின் பிரேத ஊர்வலத்தை, பாசிஸ்டுகள் மிக ஆடம்பரமாக நடத்தினார்கள். அப்பொழுதே, இவர்கள் கலகஞ் செய்யத் தொடங்கினார்கள். ஆனால் போலீஸார் அடக்கிவிட்டார்கள். அரசாங்கத்தைத் தாக்கி எழுதிவந்த இரண்டு பாசிஸ்ட் கட்சிப் பத்திரிகைகள்மீது தடையுத்திரவு பிறப்பிக்கப்பட்டது. முன்னணிக் கட்சியில் சேர்ந்திருந்த எல்லாக் கட்சியினரும் ஜூலை மாதம் 13ந் தேதி ஒன்றுகூடி, எவ்வகையாலும் தாங்கள் ஒற்றுமைப் பட்டிருப்பதென்றும், தற்போதைய அரசாங்கத்திற்கு எல்லாவிதமான ஆதரவுகளையும் கொடுப்பதென்றும் பிரமாணம் செய்து கொண்டார்கள்.

பிறகு மூன்று நாட்கள் மாட்ரிட் நகரம் ஒரே அமைதியாயிருந்தது. ஆனால் இந்த அமைதியிலே ஒருவித பயங்கரம் காணப்பட்டது. புயற்காற்றுக்கு முன்னே உண்டாகிற அமைதிதானே!

---

$ Lt. Castillo.

¶ Calvo Sotelo.

# VIII

## ஜூலை குழப்பம்

1936ம் வருஷம் ஜூலை மாதம் பதினேழாந் தேதி பயங்கர அமைதி குலைந்தது. குழப்பம் ஆரம்பித்து விட்டது. இந்த நாளில் கலகத்திற்குக் கிளம்புவதென்று பாசிஸ்டுகள், ஏற்கனவே எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார்கள். இந்தக் கலகத்தைக்கண்டு ஸ்பானிஷ் பொதுஜனங்கள் ஆச்சரியப்படவில்லை. ஆனால் இதன் பயங்கரத் தன்மையையும், கலகக்காரர்கள் செய்து வைத்திருந்த முன்னேற்பாடுகளையும் பொது ஜனங்களோ அரசாங்கத்தாரோ பூரணமாகத் தெரிந்து கொள்ளவுமில்லை. 1932ம் வருஷம் செவில்லே என்ற ஊரில், தளபதி ஸான்ஜுர்ஜோ, கலகத்திற்குக் கிளம்பினானல்லவா, அதைப்போலவேதான், இந்தப் பதினேழாந் தேதிக் குழப்பத்தையும் ஒரு சிலர் தூண்டிவிட்டிருக்கின்றனர் என்று அரசாங்கத்தார் முதலில் கருதினார்கள். இதனை எளிதில் அடக்கி விடலாமென்று பொய் நம்பிக்கையும் கொண்டு விட்டார்கள்.

ஒரே நாளில் தேசத்தின் பல பாகங்களிலும் கலகத்திற்குக் கிளம்பி, ஆங்காங்குள்ள முக்கிய ஸ்தாபனங்களைக் கைப்பற்றுவதென்று பாசிஸ்டுகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். ராணுவத்தில் பெரும் பகுதி இந்தப் பாசிஸ்டுகள் பக்கம் சேர்ந்து விட்டது. இதில் ஆச்சரிய மொன்றுமில்லை. ஸ்பெயின் தேசத்து ராணுவம் எப்பொழுதுமே பாசிஸம் என்கிற முதலாளித்துவத்தை ஆதரித்து வந்திருக்கிறதல்லவா? மற்றும், கலகத் தலைவர்களில் பெரும்பான்மையோர், ஏற்கனவே ராணுவத்தில் உயர்தர உத்தியோகங்கள் வகித்தவர். தேசத்திலுள்ள முக்கியமான பாதைகள், ஆங்காங்குள்ள முக்

கிய ஸ்தானங்கள், அரசாங்கத்தின் ராணுவ பலம் முதலியவைகளைப் பற்றிய எல்லா விவரங்களும் இவர்களுக்கு நன்ருகத் தெரிந்திருந்தது. ஆனல் இந்தக் கலகத் தலைவர்களிடத்தில் ஒரு குறை இருந்தது. அதாவது இவர்கள் ராணுவத்தில் சேவை செய்துகொண்டிருந்த போது, யதேச்சாதிகாரிகளாகவே காரியங்கள் நடத்திக்கொண்டு வந்தார்கள். இதனல் நெருக்கடியான சமயங்களில் கூட ஒற்றுமைப்பட்டுக் காரியங்களை நடத்த முடியாத மனப்பான்மை யுடையவர்களா யிருந்தார்கள். எனவே, கலகம் ஆரம்பித்தபோழ்து, ஒரே மாதிரியான திட்டத்திற்குட்பட்டு, ஒரே சமயத்தில் கலகத்திற்குக் கிளம்ப முடியாதவர்களானர்கள். ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இவர்களின் புரட்சி ஏற்பாடுகள் இருந்தன. இதனல், முதலில் சிறிது அயர்ந்தாற் போலிருந்துவிட்ட அரசாங்கத்தார், எச்சரிக்கையுடனிருக்கவும், தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பாசிஸ்டுகள், தங்கள் ராணுவ பலத்தை, எட்டு முக்கிய தளகர்த்தர்களின் கீழ் பிரித்து வைத்திருந்தார்கள்.§ இவர்களில், பிராங்கோ என்பவன்தான், கலகப் படைகளின் சேனதிபதியாக இருந்தான்.

---

§ இவர்கள் முறையே:—

1. பிராங்கோ—Francisco Franco.
2. கோடெட்—Manuel Goded.
3. லானோ—Quieipo De Llano.
4. மோலா—Emilio Mola.
5. பஞ்சுல்—Joaquin Fanjul.
6. கபன்னெல்லாஸ்—Miguel Cabanellas.
7. பாடெட்—Domingo Batet.
8. ஸான் ஜுர்ஜோ—Jose Sanjurjo.

பாசிஸ்டுகள், கலகத்திற்குப் பின்வருமாறு திட்டம் போட்டிருந்தார்கள்:—

பிராங்கோ, கானரி தீவுகளிலிருந்து வந்து மொராக்கோ பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொண்டு அங்கிருந்து, மொராக்கோ துருப்புகளுடன் வடக்கேயுள்ள செவில்லேயை யடைவது;

கோடெட், பலாரிக் தீவுகளிலிருந்து வந்து பார்ஸிலோனுவில் ஏற்கெனவேயுள்ள பாடெட்டுடன் வந்து கலந்து கொள்வது;

மோலா, வடக்கே பர்கோஸ் நகரத்திலிருந்து தெற்கு நோக்கி வருவது;

கபன்னெல்லாஸ், வடகிழக்கிலிருந்து தென் மேற்காகப் புறப்பட்டு வருவது;

ஸான்ஜுர்ஜோ, மேற்கிலிருந்து கிழக்கே நோக்கி வருவது;

இங்ஙனம் நாலா பக்கங்களிலிருந்தும் படை திரட்டி வந்து ஸ்பெயினின் மத்திய பாகத்திலே யுள்ளதும் அரசாங்கத்தின் தலைமை ஸ்தானமா யிருப்பதுமான மாட்ரிட் நகரத்தைத் தாக்குவது. இதே தினத்தில் மாட்ரிட்டிலும் பார்ஸிலோனுவிலும் அங்குள்ள சிறு படைத் தலைவர்களைக்கொண்டு குழப்பத்தை உண்டு பண்ணுவது.

இதுவே கலகக்காரர்களின் திட்டம். இந்தத் திட்டப்படி 1936ம் வருஷம் ஜுலை மாதம் 17ந் தேதி, பிராங்கோ, க்யூடா துறை முகத்திலிருந்து

ரேடியோ மூலம், அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் கிளம்பி விட்டதென்றும், தேசக்கார் அனைவரும் இந்தப் புரட்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் ஒரு செய்தி விடுத்தான். பின்னர், க்யூடா துறைமுகத்திலிருந்து மொராக்கோ துருப்புகளை ஸ்பெயினுக்கு அனுப்புவிக்க கப்பற் படையின் துணையை நாடினான். ஆனால் கப்பற் படையினர் இதற்கு இணங்க மறுத்துவிட்டனர். ஆரம்பத்திலேயே, பாசிஸ்டுகளுக்கு இது முட்டுக்கட்டையாகப் போய்விட்டது. மற்றும், ஸ்பெயின் அரசாங்கத்து ஆகாய விமானப் படையும், பாசிஸ்டுகளுக்கு உதவி செய்யவில்லை. மற்றோர் அபசகுனமும் பாசிஸ்டுகளுக்கு ஏற்பட்டது. அதாவது ஸான்ஜுர்ஜோ, மேற்கிலிருந்து மாட்ரிட்டை நோக்கி வரவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததல்லவா? இவன் வரும்போது, வழியில் ஆகாய விமானத்திலிருந்து விழுந்து இறந்துவிட்டான். இவனையே, அஜனாவுக்குப் பதில், குடியரசின் பிரசிடெண்டாக நியமிக்க பாசிஸ்டுகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்படி இவர்கள் செய்த ஏற்பாடுகள் சில, ஆரம்பத்தில் சரிவர நிறைவேறவில்லை யானாலும், மனமுடையாமல் படை திரட்டி வந்தார்கள்.

கலகம் தொடங்கி விட்டதென்று பிராங்கோ அறிவித்த அதே தினத்தில் (17-7-36) வேறு பல இடங்களிலும், பாசிஸ்டுகள் கலகக்கொடி தூக்கி விட்டார்கள். லானோ என்பவன், செவில்லேயைக் கைப்பற்றிக் கொண்டான். மோலா முதலியோர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டு வந்துகொண்டிருந்தார்கள்.

ஆனால் மாட்ரிட் நகரத்தையும், பார்ஸிலோனா நகரத்தையும் கலகக்காரர்கள் எளிதில் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை. இங்கு அரசாங்கக் கட்சியினர்

பலமாக எதிர்த்து நின்றனர். இந்தக் கட்சியில் சேர்ந்திருந்தவர்கள் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் முதலியவர்களே. இவர்களுக்கு யுத்த அநுபவம் அதிகமாக இல்லை. ஆனால் இவர்களது உள்ளத்தில் தேசபக்தி கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அரசாங்கத்தார் இவர்களுக்கு, அரசாங்க ஆயுதசாலையிலிருந்த ஆயுதங்களை வழங்கினர். மற்றும் தொழிற்சாலைகளில் பழுது பார்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருந்த ஆயுதங்களை யெல்லாம் இவர்கள் வசம் ஒப்புவிக்கச் செய்தார்கள். இங்ஙனம் ஆண்கள் மட்டும் யுத்த சன்னத்தராகவில்லை. பெண்களும் யுத்த கோலம் பூண்டார்கள். இவர்கள், ஆண்களை யுத்தகளத்திற்கு அனுப்பிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக நகரங்களிலும் கிராமங்களிலும் அமைதிகுலையாமல் பாதுகாத்து வரலாயினர். இன்னும் பல மாதர்கள், ஆண்களோடு சேர்ந்துகொண்டு பாசிஸ்ட் படைகளை எதிர்த்துப் போராட முன் வந்தனர். ஐரோப்பிய சரித்திரத்திலேயே இது புதிய விஷயம் என்று சொல்லவேண்டும். எந்த யுத்தத்தின்போதும், இங்ஙனம் ஆயிரக்கணக்கான பெண்கள், படைக்கலந் தாங்கிப் போர்புரிந்ததாகத் தெரியவில்லை. அதிலும், ஸ்பானியப் பெண்கள், ஆண்களைப்போலவே உடையணிந்து, படை தாங்கி, முகத்திலே சிறிதுகூட அச்சத்தைக் காட்டிக் கொள்ளாமல் புன் சிரிப்புடன் போர் முகத்திற்கு நடந்துசெல்லத் துணிந்தது, சரித்திரத்தில் குறிப்பிடவேண்டிய ஒரு விஷயமாகும்.

இங்ஙனமே, தேசத்தின் பல பாகங்களிலும் தொழிலாளர்கள் முதலியோர், தனித்தனிப் படைகளாகத் திரண்டு பாசிஸ்டுகளை எதிர்க்கலானார்கள்.

பாசிஸ்டுகள், யுத்த முறையில், பழகின வீரர்களை அதிகமாக உடையவர்களா யிருந்தார்கள். ஆனால்

பொதுஜன நல்லெண்ணம் இவர்கள்பால் இல்லை. இத ஞல் இவர்கள் தங்கள் படைபலத்தைக் கொண்டு சில பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டபோதிலும் அங்கு ஜனங்களின் ஆதரவு இல்லாமலே இருந்து வந்திருக் கிறது. மற்றும், பாசிஸ்டுகள் முதலில் நினைத்தபடி எந்த ஊரையும் சுலபமாகக் கைப்பற்றிக் கொண்டுவிட முடியவில்லை. ஏனென்ருல், ஜனங்கள் நவீன ராணுவப் பயிற்சி பெற்றிராவிட்டாலும், சத்துருக்களுக்கு எளி தில் விட்டுக் கொடுக்கவில்லை.

தவிர, பாசிஸ்டுகளிடத்தில் ஜனங்களுக்கு மற் ெருரு விதத்திலும் துவேஷம் வளர்ந்து வரலாயிற்று. பரம்பரையாகவே, மொராக்கோ வாசிகளான மூர்களு க்கும் ஸ்பானியர்களுக்கும் விரோதம். 1920ம் வரு ஷத்திலிருந்து 1926ம் வருஷம் வரையில் ஸ்பானியர் களுக்கும் மூர்களுக்கும் போராட்டம் நடைபெற்றது. இதற்காக, ஸ்பெயின் அரசாங்கப் பொக்கிஷத்திலிரு ந்து ஏராளமான பணம் செலவழிக்கப்பட்டது இந்த மொராக்கோ யுத்தத்தின் காரணமாக, பொருள் நஷ் டம் மட்டும் உண்டாகவில்லை. ஆள் நஷ்டமும் ஏராள மாக உண்டாயிற்று. இந்த யுத்தத்தில் அதிகமாகப் பங் கெடுத்துக் கொண்டவன் பிராங்கோ. இவன் மூர் களைச் சிறிதுகூடக் கருணையின்றி நடத்தினுன். ஆனுல் இதே பிராங்கோ, மூர்களின் துவேஷத்தைப் பாசி ஸ்ட் கட்சிக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்தான். தனது நாட்டினரை அடக்க மொரா க்கோ துருப்புகளை உபயோகப்படுத்தலாயினுன். இது ஸ்பானியர்களுக்கு அதிகமான வெறுப்பை உண்டு பண்ணியது.

பாசிஸ்டுகளுக்கு மற்ெருரு பக்க பலமாயிருந்தது அந்நியக் கூலிப்படைகள். பல தேசத்துக் கீழ்மக்கள்

நிரப்பியது இந்தப் படை. இந்தப் படையைச் சேர்ந்தவர்களை, சாதாரண ஜனங்களோடு கூடப் பழக விடுவதில்லை. இழிவான, கொடுமையான காரியங்களைச் செய்வதற்குத்தான் இந்தப் படையை ஏவுவது வழக்கம். இத்தகைய படையை ஸ்பானிஷ் அரசாங்கத்தார் பல வருஷங்களாக மொராக்கோவில் வைத்துப் பாதுகாத்து வருகின்றனர். இந்தப் படையினரையும் பிராங்கோ, ஸ்பானியர்களுக்கு விரோதமாக உபயோகப் படுத்தி வரலாயினன். இதுவும், பாசிஸ்டுகளுக்கு விரோதமான உணர்ச்சியை ஜனங்களிடையே உண்டு பண்ணியது.

தவிர 1934ம் வருஷம் அக்டோபர் மாதம் அஸ்டூரியா மாகாணத்தில் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்ற போது, மிகக்கடுமையாக நடந்து கொண்டவன் பிராங்கோ. 'ஈவு இரக்கமில்லாதவன்' என்றுதான் அம்மாகாண வாசிகள் இவனை அழைப்பார்கள். அத்தகைய இவன், பாசிஸ்ட் படைகளின் பிரதம தலைவனாயிருந்தபடியால் ஜனங்களுக்கு இன்னும் அதிகமான ஆத்திரம் உண்டாயிற்று.

கலகம் ஆரம்பித்த ஒரு மாத காலத்திற்குள், தேசத்தின் ஒரு பாதிபாகம் பாசிஸ்டுகள் கையில் சிக்கிக் கொண்டுவிட்டதாகச் சொல்லப்பட்டது. இஃது ஒரு விதத்தில் உண்மையே. ஆனால், கலகக்காரர்கள் வசத்தில் சிக்கிக்கொண்ட பிரதேசங்கள் ஜனப்பழக்கம் அதிகமாக இல்லாதவை. அரசாங்கத்தார் வசமிருந்த பிரதேசங்கள் செழிப்புள்ளவை; ஜனநெருக்கமுள்ளவை. முக்கியமான துறைமுகங்கள், போக்குவரவுக்கு லாயக்கான இடங்கள் முதலியன இந்தப் பிரதேசங்களிலேயே இருக்கின்றன.

யுத்தம் வலுக்க வலுக்க, ஸ்பானியப் பொது ஜனங்களின் ஒற்றுமையும் வளர்ந்து வந்தது. பொது வுடமைக்கட்சி, அபேதவாதக்கட்சி முதலிய பல கட்சிகளிலிருந்துவந்த சில்லரை வேற்றுமைகள் யாவும் மறைந்து போயின. தேசத்தின் சக்திகளனைத்தையும் ஒருமுகப்படுத்தி, பாசிஸத்திற்கு விரோதமாக நிற்க வைப்பதுதான், எல்லாக் கட்சிகளின் லட்சியமா யமைந்துவிட்டது.

இந்தப் போராட்டம், குடியாசுக்கும் பாசிஸத் திற்கும் நடக்கிற போராட்டமென்று, தற்போதைய ஸ்பானிஷ் முன்னணி அரசாங்கத்தார் கூறுகின்றனர். ஆனால் பாசிஸ்ட் கட்சியினரோ, தற்போதைய அரசாங் கத்தார் தங்களுடைய அதிகாரபலத்தின் மூலம், தேசத் தில் பொதுவுடமை இயக்கத்தைப் பரப்பி வருகிறார்க ளென்றும், இதனின்று ஸ்பெயினைக் காப்பாற்றுவ தற்காகவே தாங்கள் படை தூக்கி யிருப்பதாகவும் பறைசாற்றி வருகிறார்கள். இதற்காதாரமாக, இவர் கள் ருஷ்யாவின் உதவி இந்தக்குடியரசு அரசாங்கத் திற்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். அரசாங்கத் தாரோ, பாசிஸ்டுகளுக்கு, ஜெர்மனியும் இத்தலியும் உதவி செய்கின்றனவென்று கூறுகின்றனர்.

ஜூலை மாதம் 17-ந்தேதி குழப்பம் ஆரம்பித்த தல்லவா? ஆரம்பித்த மூன்று நாட்களுக்குள், மூன்று முறை குடியரசு அரசாங்கத்தின் மந்திரிச்சபை மாற்றி யமைக்கப்பட்டது. குழப்பம் ஆரம்பிக்கிற காலத்தில், காஸரஸ் குவிரோகா பிரதம மந்திரியாயிருந்தான். குழப்பம் வலுக்க இவன் ராஜீநாமா செய்து விட்டான். பின்னர், பாரியோஸ்† என்பவன் பிரதம மந்திரியா னான். இவன் எட்டு மணி நேரந்தான் உத்தியோகம் பார்த்தான். பின்னர் இவனும் ராஜீநாமா செய்யவே,

---

† Diego Martinez Barrios.

கிரால் பெரீரா‡ என்பவன் பிரதம மந்திரியானுன். இவன் 1936ம் வருஷம் ஆகஸ்ட் மாதக் கடைசியில் குழப்பத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு கட்சிகளைப்பற்றியும் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டான்:—

"ராணுவத்தைச் சேர்ந்தவர்கள், பாதிரிமார்கள், பாசிஸ்டுகள் ஆகியோர் ஒன்று சேர்ந்து, ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நியாயமான குடியரசு அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகம் செய்யக் கிளம்பியிருப்பதினுலேயே, ஸ்பெயினில் தற்போதைய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது."

இந்த கிரால் மந்திரிச்சபையானது, 1936ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4ந் தேதி ராஜீநாமா செய்துவிட்டது. அன்று லார்கோ கபல்லெரோ$ என்பவனுடைய தலைமையில் புதிய மந்திரிச்சபை அமைந்தது. இந்த கபல்லெரோ என்பவன் ஸ்பெயின் தேசத்து அபேதவாதக் கட்சியின் தெய்வமாகப் போற்றப்படுகிறவன். இவன் கீழ் அமைந்த மந்திரிச்சபையானது, முன்னணிக்கட்சியின் உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்த மந்திரிச்சபை யென்று கூறலாம். ஏனென்ருல், இந்த மந்திரிச்சபையிலுள்ள பெரும்பான்மையோர் மத்திய வகுப்பினர். இன்னும் சிலர் பொதுவுடைமைக்கட்சியினர். 1936ம் வருஷம் பிப்ரவரி தேர்தலுக்குப் பிறகு அமைந்த மந்திரிச்சபைகள், முன்னணிக்கட்சியின் பிரதிநிதிச் சபைகளாயிருந்தன. கபல்லெரோவின் கீழ் அமைந்த மந்திரிச்சபையோ முன்னணி மந்திரிச்சபையென்றே கூறும்படியாயிருக்கிறது. இந்த முன்னணி மந்திரிச்சபையின் அமைப்பு வருமாறு:—

‡ Jose Giral Pereira.

$ Francisco Largo Caballero.

லார்கோ கபல்லெரோ—பிரதம மந்திரியும் யுத்த மந்திரியும். (அபேதவாதக் கட்சி.)

டெல் வாயோ—அந்நிய நாட்டு மந்திரி. (அபேத வாதக் கட்சி.)

இண்டலேஷியோ ப்ரீடோ—ஆகாயப்படை கப்பற் படை மந்திரி. (அபேத வாதக்கட்சி.)

ஜுவான் நெக்ரின்—பொக்கிஷ மந்திரி. (அபேத வாதக் கட்சி.

அனஸ்டேஷ்போக்ரேஷியா—வியாபாரக் கைத் தொழில் மந்திரி. (அபேதவாதக் கட்சி.)

ஏஞ்சல் காலர்ஸா—உள்நாட்டு மந்திரி. (அபேத வாதக் கட்சி.)

விஸிண்டே உரிபே—விவசாய மந்திரி. (அபேத வாதக் கட்சி.

ஜேஸஸ் ஹெர்ணண்டஸ்—கல்வி மந்திரி. (பொதுவுடைமைக்கட்சி.)

மரியானோ ப்யூனஸ்—நீதி மந்திரி. (குடியாசுத் தீவிரக்கட்சி.)

ஜோஸே கிரா—தொழில் மந்திரி. (காடலோனிய தீவிரக்கட்சி.)

பெர்ணர்டோ ரியோஸ்—போக்கு வரவு மந்திரி. (குடியாசு ஐக்கியக்கட்சி.)

ஜுலியோ ஜஸ்ட்—மராமத்திலாகா மந்திரி. (குடியாசுத் தீவிரக்கட்சி.)

ஜோஸே பெரீரா—பொது மந்திரி. (குடியாசுத் தீவிரக்கட்சி.)

குடியரசின் தலைவனாக முன்போலவே மான்யுவல் அஜனாயிருந்தான். இந்த மந்திரிச்சபையார், அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்டதும், தங்கள் கொள்கைகளை வரையறுத்துப் பின்வரும் அறிக்கை யொன்றை வெளியிட்டனர்:—

"ஆயுத பலம் பொருந்திய கலகக்காரர்களினின்று ஸ்பெயின் தேசத்து ஜனநாயகக் குடியரசைக் காப்பாற்றும் பொருட்டுப் பல முகப்புகளிலும் போர்புரிந்து கொண்டிருக்கும் அரசியல் சக்திகளின் நேர்முகமான பிரதிநிதியாக இந்த மந்திரிச்சபை அமைந்திருக்கிறது. விசாலமான பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு மந்திரிச்சபை தற்போது இருக்கவேண்டுவது அவசியமென்று குடியரசுத் தலைவர் மான்யுவல் அஜனா கருதுகிறார். இப்பொழுது நியமனம் செய்யப்பட்டுள்ள மந்திரிகள், எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்களோ, அந்தந்தக்கட்சியினரும் இந்த ஏற்பாட்டை உடனே அங்கீகரித்துக் கொண்டார்கள். இதனால் தற்போதைய அரசாங்கத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் அடங்கியிருக்கின்றன.

ஜனங்களுடைய முயற்சிகளை யெல்லாம் ஒன்றுபடுத்திச் செயல் முறையில் திருப்பித் தேச நன்மைக்கு உபயோகப்படுத்துவதன் மூலம், கலகத்தைஅடக்கி வெற்றி காணவேண்டு மென்ற உறுதியான நோக்கத்துடன் மந்திரிச் சபையின் வேலைத்திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற அரசியல் நோக்கங்களைக் காட்டிலும், இந்த லட்சியத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கலகத்தை அடக்குவதைத் தவிர வேறு எண்ணமே தற்போது இருக்கமுடியாதல்லவா?

ஸ்பெயினுக்கு எவ்வித ஏகாதிபத்திய எண்ணங்களும் இல்லை. எனவே, சமாதான நோக்கத்தையே அரசாங்கம் வலியுறுத்துகிறது. மந்திரிச் சபையின் ஏகமனதான

அபிப்பிராயமும் இதுவாகும். தேச நன்மைக்கும் இஃது உகந்ததாகும், ஏனெனில் உலக சமாதானத்தில்தானே நாம் வாழமுடியும்?

எல்லா நாடுகளிடத்திலும் ஸ்பெயின் நேசப் பான்மை கொண்டிருக்கிறதென்பதை இச்சமயம் அரசாங்கம் வற்புறுத்துகிறது. மற்ற நாடுகளிடம் ஸ்பெயின் எப்படி மரியாதை செலுத்துகிறதோ, அதேமாதிரி, ஸ்பெயினுக்கும் மற்ற நாடுகளிலிருந்து மரியாதை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறது.

என்ன விபரீதங்கள் நேர்ந்த போதிலும், ஸ்பெயின் தேசத்திற்குரிய பிரதேசங்களை. கலகக்காரர்கள் வெற்யடைவதனால் உண்டாகும் ஆபத்தினின்று காப்பாற்ற அரசாங்கம் உறுதியாகத் தீர்மானித்திருக்கிறது.

குடியரசின் நியாயத்தன்மையைக் காப்பாற்ற, தரைப் படை, கப்பற்படை, ஆகாயப்படை முதலியனவும், பொதுஜனப்படையும் செய்துவரும் முயற்சிகளுக்காக அப் படையைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கம் மிகுந்த உற்சாகத்துடன் வந்தனம் அளிக்கிறது. அந்த வீரர்களின் தியாகத்திற்குப் பாத்திரமாயிருக்கும் வண்ணம் அரசாங்கம் நடந்து கொள்ளும். தேசீய முன்னேற்றத்தில் அந்த வீரர்கள் கொண்டுள்ள நியாயமான ஆவலை அரசாங்கம் எப்பொழுதும் பாதுகாத்து நிற்கும்.''

எனவே, இந்த முன்னணி அரசாங்கத்தின் முக்கிய நோக்க மெல்லாம், பிற்போக்கான எண்ணங்களுக்கும், உரிமைகளுக்கும் பிரதிநிதியாகத் தோன்றிப் போராடும் பாசிஸத்தைத் தோற்கடிப்பதுதான். ஆனால் இந்த ஓர் அம்சத்தோடு கபல்லெரோ அரசாங்கம் திருப்தியடைந்து விடவில்லை. பாசிஸத்தைத் தோல்வியுறச் செய்வதென்பது அழிவு வேலைதானே. அதனைத் தொடர்ந்தாற்போல் ஆக்கவேலைகளும் நடை

பெற்றால்தானே குடியரசு நிலைபெறும். இதனைக் கபல் லெரோ அரசாங்கம் உணராமலில்லை. இதற்கான திட்டங்களையும் இது வகுத்திருக்கிறது. இவ்விஷயமாக அரசாங்கம் கொண்டுள்ள கொள்கைகளை ஒரு பிரபல ஸ்பானிஷ் பத்திரிகை பின் வருமாறு எடுத்துக் கூறுகிறது:—

"நாம் ஜனநாயகக் குடியரசுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். அப்படி போராடவேண்டு மென்பது ஜனங்களின் அபிப்பிராயமுமாகும். இது முற்றிலும் உண்மை. நாம் போராடுகிறோம். ஸ்பெயின் தேசத்து ஜனங்கள் அனைவரும் போராடுகிறார்கள். எதற்கு? ஜன நாயகக் குடியரசுக்காக. குடியரசு என்பது வெறும் வார்த்தை என்று நாம் கருதுகிறோமில்லை. ஜனங்களும் அங்ஙனம் கருதுகிறார்களில்லை. சமூக வாழ்விலும் பொருளாதார நிலையிலும் ஜனங்கள திருப்தியடைகிற விதமாகவே, இந்தக்குடியரசு உணர்ச்சியை நாம் பார்க்கிறோம். இதனைப் பொது ஜனங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கப்படைகளால் வெற்றிகொள்ளப்பெற்ற பிரதேசங்களில், சமூக, பொருளாதார சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வருவதுதான், வெற்றிகொண்டதன் அடையாளமாகும். இந்த வேலையை அரசாங்கமே செய்யவேண்டும். ஜன நாயகக்குடியரசு என்றால் என்ன? நிலச்சுவான்தார்கள், பணக்காரர்கள் முதலியோரிடமிருக்கும் நிலங்களை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுப்பது; விவசாயிகளுக்குப் பண வசதிகள் செய்து கொடுப்பது; வரிக்குறைவு; கடன்களை ரத்து செய்தல்; சமூக வாழ்வுக்குரிய சீர்திருத்தங்களை நடைமுறையில் கொணர்தல்; தொழிலாளர்களின் வாழ்க்கை அந்தஸ்தை உயர்த்துதல்; சில்லரை வியாபாரிகளுக்குப் பாதுகாப்பு அளித்தல்; பிற்போக்கான கட்சிகளைச் சட்ட ரீதியாகக் கலைத்து விடுதல் முதலியனவாம்."



அஜனா. ஸ்பானிஷ் குடியரசுத் தலைவன். தேசத்தார் அனைவருடைய நம்பிக்கையையும் பெற்றவன். இரண்டு முறை பிரதம மந்திரியாக வேலை பார்த்திருக்கிறான்.



ஸ்பெயின் தேசத்துக் குடியானவர்கள். உழைக்கிறபோது மனப்பூர்வமாக உழைப்பார்கள். அப்படியே சுகம் அநுபவிக்கிறபோதும் எவ்வித கவலையுமின்றிச் சுகத்தை அநுபவிப்பார்கள்.



மாட்ரிட் நகரவாசிகள் பாசிஸ்டுகளின் குண்டுகளுக்குப் பயந்து மூட்டைமுடிச்சுகளுடன் வெளி யேறும் கோலம். இவர்கள் முகத்திலே என்ன கவலை ! எவ்வளவு துன்பத்தை இவர்கள் சகிக்கிறார்கள் ! எல்லாம் தேசத்திற்காக !

குடியரசு அரசாங்கத்தினர், கலகம் தொடங்கிய சில மாதங்களுக்குள் அரசாங்கத் தலைமை ஸ்தானத்தை, மாட்ரிட்டிலிருந்து, வாலென்ஷியாவுக்கு மாற்றிக் கொண்டார்கள். இது, ஸ்பெயினின் கிழக்குப் பக்கத்திலுள்ள ஒரு துறைமுகம். இப்படி மாற்றிக்கொண்டது, அரசாங்கத்தின் பலஹீனத்தையே காட்டுகிறதென்று பாசிஸ்டுகள் கூறுகிறார்கள். போக்கு வரவு சௌகரியத்தை உத்தேசித்தும், கிழக்குப் பக்கத்து மாகாணங்களில் அதிகமான பொது ஜன ஆதரவு இருப்பதை முன்னிட்டும் வாலென்ஷியாவுக்குத் தங்கள் தலைமை ஸ்தானத்தை மாற்றிக் கொண்டதாக அரசாங்கத்தார் சொல்கிறார்கள்.

பாசிஸ்டுகள் படை திரட்டிப் போர் புரிவதோடு நிற்கவில்லை. இவர்கள் கலகம் தொடங்கிய ஆறுவது நாளன்றே-அதாவது 24-7-1936லேயே-யுத்த நெருக்கடியான காலங்களில் சாதாரணமாக ஏற்படுத்தப் பெறும் ராணுவ அரசாங்கத்தை ஏற்படுத்தி விட்டார்கள். எந்தெந்த பிரதேசங்களை இவர்கள் கைப்பற்றுகிறார்களோ, அந்தந்தப் பிரதேசங்களில் இவர்கள் இந்த ராணுவ அரசாங்க முறையையே அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். எனவே, கலகத்தின் விளைவாக ஸ்பெயினில் இரண்டு விதமான அரசாங்கங்கள் நடை பெற்று வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆச்சரியமான ஒரு விஷயத்தை அறிந்துகொள்ள அன்பர்கள் ஆசைப்படலாம். இதற்கு முன்னிருந்த அரசாங்கங்களையெல்லாம் ஆட்டிப் படைத்து வந்த ரோப்ளெஸ் என்பவன், கலகம் தொடங்கிய மறுவாரம், போர்த்துகலுக்கு ஓடிப் போய் விட்டான். இவனுடன் ஸ்பெயின் தேசத்து மிகப் பெரிய

பணக்காரனென்று சொல்லப்படுகிற ஜுவான் மார்ச்$ என்பவனும் சென்று விட்டான். ரோப்ளெஸுக்கு எப்பொழுதுமே பணக்காரர்களுடைய ஆதரவு உண்டு. கலகம் ஆரம்பித்த பிறகு, ரோப்ளெஸும், ஜுவான் மார்ச்சும் வெளி நாட்டிலிருந்துகொண்டு, பாசிஸ்டுகளுக்குப் பண உதவி செய்து கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

---

$ **Juan March.** ஸ்பெயின் தேசத்துப் புகையிலை வியாபாரத்தின் முழு உரிமையையும் பெற்றவன். இவன் ஒரு வேலைக்காரனாக வாழ்க்கையை ஆரம்பித்தவன். 21 வயது வரையில் இவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பிறகுதான் புகையிலை வியாபாரம் தொடங்கிப் பணம் சம்பாதிக்கலானான்.

# IX

## வல்லரசுகளின் கவலை

ஸ்பெயினில் கலகம் தொடங்கியது முதல், அஃது ஒரு சாதாரண உள் நாட்டுக் குழப்பம் என்று எந்த ஐரோப்பிய வல்லரசும் கருதவில்லை. சில நாடுகளில் அவ்வப்பொழுது ஏற்படும் கட்சிச் சண்டைகள் மாதிரி ஆரம்பித்து அப்படியே அடங்கி விடும் என்று எந்த ராஜ தந்திரியும் நினைக்கவில்லை. இதனை, உலகப் பிரச்னையாகவே எல்லாரும் கருதி வந்திருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன ?

மத்தியதரைக் கடலின் மேற்குப் பாதுகாவலன் போல் ஸ்பெயின் தேசம் அமைந்திருக்கிறது. அத்லாந்திக் மகா சமுத்திரத்தையும் மத்திய தரைக் கடலையும் ஒன்று சேர்த்து வைப்பது ஜிப்ரால்டர் ஜல சந்தி, இந்த ஜல சந்திக்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள பிரதேசங்கள் ஸ்பெயினைச் சேர்ந்தவை. கீழ் நாடுகளுடனும் ஆப்ரிக்கா கண்டத்துடனும் எந்த ஐரோப்பிய வல்லரசேனும் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமானால், அதற்கு மத்திய தரைக் கடலில் ஓரளவு ஆதிக்கம் சம்பாதித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

இதற்காக, ஸ்பெயின் தேசத்திலே யார் அதிகமான செல்வாக்கைப் பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் மத்திய தரைக்கடலிலே மட்டுமல்ல, ஐரோப்பா கண்டத்திலேயே செல்வாக்குடன் இருக்க முடியும் ? அதாவது, ஸ்பெயின் தேசம் எவ்வளவுக் கெவ்வளவு பலஹீனமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஐரோப்பிய வல்லரசுகளுக்கு நல்லது. இதனாலேயே, ஸ்பெ

யின் தேசத்துக் கலகம், ஐரோப்பிய வல்லரசுகளின் கவனத்தைப் பெரிதும் இழுத்திருக்கிறது.

மத்திய தரைக் கடலில் செல்வாக்குச் சம்பாதித்துக் கொள்ளும் விஷயத்தில், கிரேட் பிரிட்டனே, மிகவும் முன் யோசனையுடன் நடந்து கொண்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும். சுமார் 230 வருஷங்களுக்கு முன்னரேயே, அதாவது 1704ம் வருஷத்திலேயே, ஜிப்ரால்டரை கிரேட் பிரிட்டன் ஆக்ரமித்துக் கொண்டது. இப்படி ஆக்ரமித்துக் கொண்டதற்கு, வழக்கமாகச் சொல்லப்படும் காரணங்கள் கூட இல்லை. ஏனென்றால் அங்கே எவ்விதமான ஜனங்களும் வசிக்கவில்லை அவர்களை நாகரிகப்படுத்துவதற்கு. குரங்குகள் தான் அந்தப் பாறுங்கல்லிலே வசித்துக் கொண்டிருந்தன. அப்படியிருந்தும், அந்த ஜிப்ரால்டரைக் கைப்பற்றிக் கொள்வானேன்? இந்தியாவுக்குக் கடல் மார்க்கமாகச் செல்ல இது முக்கியமான பாதை. இந்த ஜிப்ரால்டர் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமாகவே மொராக்கோவின் வடக்கேயுள்ள க்யூடா துறைமுகமும் மத்திய தரைக்கடலிலேயுள்ள பெலாரிக் தீவுகளும். இவை யிரண்டும் ஸ்பெயின் ஆதிக்கத்திலிருக்கின்றன. பிரிட்டிஷார் ஜிப்ரால்டரை எப்படி சுவாதீனப் படுத்திக் கொண்டிருக்கின்றனரோ, அப்படியே க்யூடாவையும் பெலாரிக் தீவுகளையும் தத்தம் சுவாதீனத்தில் வைத்துக் கொள்ள முடியுமாவென்று ஜெர்மெனியும் இத்தலியும் முயற்சி செய்கின்றன.

ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லருக்கும், இத்தலியின் சர்வாதிகாரியான முஸோலினிக்கும் நாடு பெருக்கும் ஆசை இருக்கிறதென்பது வெளிப்படை. வார்சேல் ஒப்பந்தந்தான் இந்த ஆசைக்குக் காரணம் என்பதைப் பற்றி நாம் ஏன் இங்கு விஸ்தரித்துக்

கொண்டுபோக வேண்டும் ? முஸோலினியின் ஏகாதிபத்திய ஆசை, எதியோப்பியாவை ஆக்ரமித்துக் கொண்டதன் மூலமாக வெளியாகி விட்டது. ஆனால் இந்த ஆசை இதனோடு நிற்கும் என்பது என்ன நிச்சயம் ? மற்றும், எதியோப்பியா, எரீட்ரா, இத்தாலிய சோமாலிலாந்து முதலியவைகளுக்குச் செல்லும் வழியில் பெலாரிக் தீவுகளும் க்யூடா துறைமுகமும் இருக்கின்றன. இந்த இரண்டு பிரதேசங்களில் ஏதேனும் ஒன்றைக் கைப்பற்றிக் கொண்டால், பிரிட்டிஷார் இந்தியாவுக்குச் செல்லும் பாதை பாதிக்கப்படும். அப்பொழுது, மத்திய தரைக் கடலின் ஆதிக்கத்தில் ஓரளவு பங்கு பெறலாம் என்பது முஸோலினியின் கருத்து. ஸ்பெயினிலுள்ள பாசிஸ்ட் கட்சியினருக்கு இத்தலி உதவி செய்வதற்கு இதுவே காரணம்.

ரிவேரா, ஸ்பெயினில் சர்வாதிகாரியாக இருந்த காலத்திலேயே, முஸோலினி, பாசிஸக் கொள்கையைப் பரப்பச் செய்தது எவ்வளவோ முன் யோசனையுடன் தான். இது சம்பந்தமாக பிராங்கோவுக்கும் முஸோலினிக்கும ஒரு ரகசிய ஒப்பந்தம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதாவது, பிராங்கோ, இந்த ஸ்பெயின் குழப்பத்தில் வெற்றி பெற்று, நிரந்தரமான ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்துவானாகில், அப்பொழுது, ஸ்பெயின் தேசத்துக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக, இத்தலி, ஒரு பெருந்தொகை கடன் கொடுக்க வேண்டியது ; ஸ்பெயின் தேசத்திலுள்ள ரெயில்வே பாதைகளைப் பொறுப்பாக வைத்துக்கொண்டு இந்தக் கடன் தொகையைக் கொடுக்க வேண்டியது ; இரண்டு அரசாங்கங்களும் பின்னர் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியது ; வேறுவித மான தடைகள் குறுக்கிடாவிட்டால், க்யூடா துறைமுகத்தையும், பெலாரிக் தீவுகளில் ஒன்றையும் இத்தலி

க்குக் கொடுத்துவிட வேண்டியது; அப்படி கொடுக்க முடியாவிட்டால், அவ்விரண்டு இடங்களிலும் கப்பல் படைகளை வைத்துக்கொள்ள இத்தலிக்கு அநுமதி கொடுக்கவேண்டியது. இந்த ஒப்பந்தம் இருப்பதனாலேயே, பிராங்கோவுக்குப், மற்ற பாசிஸ்ட் தளபதிகளுக்கும், இத்தலியிலிருந்து ஏராளமான உதவிகள் கிடைக்கின்றன வென்று சொல்லப்படுகிறது.

ஜெர்மனியை எடுத்துக் கொள்வோம். ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர், ஆப்ரிக்கா கண்டத்தில் தனக்குச் சொந்தமாக இருந்த குடியேற்ற நாடுகளை மீண்டும் பெறுவதற்கு, கானரி தீவுகளிலோ, பெலாரிக் தீவுகளிலோ ஒரு பகுதி கிடைத்தால், அதையே வியாஜமாக வைத்துக்கொண்டு மற்றக்குடியேற்ற நாடுகளையும் திருப்பிக் கேட்கலாமல்லவா? இதற்காக, ஸ்பெயினில் பாசிஸ்டுகளின் ஆதிக்கம் நிலைபெற வேண்டுவது அவசியம். இதனாலேயே ஸ்பானிஷ் பாசிஸ்டுகளுக்கு ஜெர்மனி ஆதரவு கொடுக்கிறது.

மற்றொரு காரணமுமுண்டு. அதாவது, பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் பரம்பரைப் பகைமையல்லவா? இப்பொழுது, பிரான்சிலே அபேதவாத அரசாங்கம் நடைபெறுகிறது. இந்த அரசாங்கத்தார், சோவியத் ருஷ்யாவுடன் சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர். இது ஜெர்மனிக்குப் பிடிக்கவில்லை யென்பது உலகறிந்த விஷயம். இதனால், ஸ்பெயினிலே பாசிஸ்ட் ஆட்சியை நிலைக்கச் செய்தால் பிரான்ஸை ஒரு பந்தோபஸ்திற்குட் படுத்தினது போலாகுமல்லவா

ஸ்பெயினில், நாஜி கட்சி ஸ்தாபனங்கள் பல வருஷங்களாக இருந்து வருவதாகவும், இதற்காதாரமான பல தஸ்தவேஜுகள் கிடைத்திருக்கின்றன வென்றும்

சொல்லப்படுகின்றன. மற்றும் ஸ்பெயினிலேயுள்ள அந்நிய நாட்டார்களில், ஜெர்மானியர்கள்தான் மிக அதிகமாயிருக்கிறார்கள். இவர்கள் குடியேறுவதையும், நாஜீயத்தைப் பற்றிப் பிரசாரம் செய்வதையும் கில் ரோப் ஜெஸ் ஆதரித்து வந்தான். ஜெர்மனியிலிருந்து ஏராளமான யுத்த தளவாடங்கள், கலக ஆரம்பத்திலிருந்து ஸ்பெயினுக்குள் வந்து இறங்கிக் கொண்டு வந்தன. இங்ஙனமே, ஜெர்மானியர்கள் பலர், ஸ்பானிஷ் பாசிஸ்ட் படையில் சேர்ந்து போர் புரிகிறார்கள்.

இஃது இப்படியிருக்க, ஸ்பெயினின் முன்னணி அரசாங்கத்திற்கு, ருஷ்யாவின் உதவி அதிகமாகக் கிடைக்கிறதென்று பாசிஸ்டுகள் கூறுகிறார்கள். இப்பொழுது, ஸ்பெயினில் குடியரசின் சார்பாக, அபேக வாதக் கட்சியினரும் பொதுவுடமைக் கட்சியினரும் நடத்திவரும் போராட்டமானது, ஸ்பெயினை மட்டும் பொறுத்த ஓர் உள் நாட்டுக் குழப்பமாகாதென்றும், முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் நடைபெறுகிற உலகப் போராட்டமாகவே இதனைக்கொள்ள வேண்டுமென்றும், எனவே, தற்போதைய ஸ்பெயின் அரசாங்கத்தை, தான் ஆதரியாவிட்டால் அது பின்னடி, தன்னையே பாதிக்குமென்றும் ருஷ்யா கருதுவதாகத் தெரிகிறது.

"ஸ்பெயின் தேசத்துக் குடியரசைக் காப்பாற்றி அதன் மூலமாக உலக சமாதானத்தைக் காப்பாற்ற வேண்டும். அப்படியில்லாமல், இந்தக் குடியரசை அழிக்க விட்டு விட்டோமானால், கடுமையான உலக யுத்தம் ஏற்படுவது நிச்சயம்" என்று ஒரு ருஷ்ய அறிஞன் கூறுகிறான்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை, எவ்வித உறுதிப்பாடுடையதாகவும் இல்லை. 'மதில்மேல் பூனை'யின்

நிலையில் ப்ரிட்டின் அரசாங்கம் இருக்கிறதென்று கூற லாம். மத்திய தரைக்கடலின் வழியாக இந்தியாவுக்குச் செல்லும் பாதை பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமென் பதுதான் இதன் ஒரு நோக்கம். மற்றபடி ஸ்பெயினில், யார் வெற்றி கொண்டாலும் அல்லது தோல்வி யடைந் தாலும் அதைப்பற்றி அவ்வளவு கவலையில்லை. ஆனால் ஸ்பெயினில் யார் வெற்றி யடைகிறார்களோ, அவர் கள், தங்கள் நோக்கத்திற்கு இணங்கினவர்களா யிருந் தால் போதும். தற்போதைய அபேதவாத அரசாங் கம் நிலைத்துவிட்டால், அதனையும் இது மனப் பூர்வ மாக விரும்பாது. அதற்கு மாறாக பாசிஸ்டுகள் வெற்றி கொண்டால், மத்திய தரைக் கடலில், தான் அநுபவித்து வரும் உரிமைகள் பாதிக்கப் படலாமோவென்ற சந் தேகமும் பிரிட்டனுக்கு இருக்கிறது. அல்பான்ஸோ மன்னன், ஸ்பெயின் சிங்காதனத்தில் இருந்த வரை யில் அவன், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கைகளி னால் ஆட்டி வைக்கப்பெற்ற ஒரு பொம்மையாகவே இருந்து வந்திருக்கிறான். அவன் சென்று, குடியரசு ஏற்பட்டது முதற்கொண்டே, பிரிட்டிஷ் ஏகாதிபத் திய வாதிகளின் உள்ளத்தில் ஒருவித சஞ்சலம் ஏற் பட்டிருக்கிறதென்று சொல்லவேண்டும். இந்த மாதிரி யான சங்கடமான நிலைமைகளிலிருந்தும் தன்னை விடு வித்துக்கொள்ளவே, ஸ்பெயின் குழப்பத்தில் எந்த நாடும் தலையிடக் கூடாதென்று பிரான்ஸ் கொண்டு வந்த ஒரு திட்டத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் உடனே ஏற்றுக்கொண்டது.

இனி, இந்தத் 'தலையிடாத திட்டம்' என்னவென் பதைப்பற்றிச் சிறிது கவனிப்போம். ஸ்பெயினில் கல கம் தொடங்கிய தினத்தன்றே பிரான்சின் நிலைமை தர்ம சங்கடமாகி விட்டது. ஸ்பெயினிலுள்ள அபேத வாத அரசாங்கத்திற்கு பிரான்ஸ் உதவி செய்தால், அத

னையே காரணமாக எடுத்துக்காட்டி, ஜெர்மனியும் இத்தலியும் ஸ்பானிஷ் பாசிஸ்டுகளுக்கு அதிகமான உதவிகளைச் செய்யத் தொடங்கிவிடும். அதனைப் பார்த்து, ருஷ்யா, ஸ்பானிஷ் அபேதவாதிகளுக்குத் துணைவனாக முன்வரும். இது பிறகு பெரிய யுத்தமாகவன்றோ முடியும்? இவற்றையெல்லாம் உத்தேசித்தும், இத்தலியும், ஜெர்மனியும் ஸ்பானிஷ் பாசிஸ்டுகளுக்கு உதவி செய்யாமலிருக்க ராஜ தந்திர முறையில் தடுப்பதற்கும், ஸ்பெயின் குழப்பத்தில் எந்த நாடுமே தலையிடக் கூடாதென்றும், அப்படி தலையிடாமலிருந்தால்தான் அதனை ஓர் உள்நாட்டுக் குழப்பமாக அடக்கி விடலாமென்றும் சொல்லி, பிரான்ஸ் ஒரு திட்டத்தை வெளியிட்டது.

1936ம் வருஷம் ஜூலை மாதம் 17ந் தேதி, ஸ்பெயினில் குழப்பம் தொடங்கியதல்லவா? அது தொடங்கிய இரண்டாவது வாரத்தில், அதாவது 1936ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் முதல் தேதி மேற்படி திட்டத்தை பிரான்ஸ் வெளியிட்டு, மற்ற தேசங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டது. பிரிட்டன் உடனே ஆதரவு அளித்தது. இப்படியே, ஜெர்மனி, இத்தலி முதலிய இருபத்தாறு நாடுகள் அங்கீகாரம் கொடுத்தன. காகித அளவில் எல்லாத் திட்டங்களையும் அங்கீகரித்துவிடலாம். ஆனால் செயல் முறையில்? இந்தத் திட்டத்தைக் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, போர்த்துகல், ருஷ்யா ஆகிய ஐந்து நாடுகளும் ஏற்றுக்கொள்வதாயிருந்தால் தானும் உடன்படுவதாக இத்தலி கூறியது. ஜெர்மனியின் பதிலும் இதே தொனியில்தான் அமைந்திருந்தது. ஆனால் இந்த இரண்டு நாடுகளும், ஸ்பானிஷ் பாசிஸ்டுகளுக்கு யுத்த சாமான்களை அனுப்பிக்கொண்டுதானிருந்தன!

இருபத்தாறு நாடுகளின் ஆசிபெற்ற இந்தத் தலையிடாத திட்டத்தைப்பற்றி ஆலோசிக்க, 1936ம் வரு

ஷம் செப்டம்பர் மாதம் 10ந் தேதி லண்டனில் சர்வ தேசப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மகாநாடு கூடியது. ஒரு விஷயத்தை எவ்வளவு தூரம் மழுப்பி வைக்கலாமோ அல்லது செயலில் கொணராமல் தள்ளிப் போடலாமோ அவ்வளவுக்கும் இந்த மகாநாடுகள் உதவிக் கருவிகளாயிருக்கின்றன! இந்த மகாநாட்டுக்குப் போர்த்துகல்§ தேசத்துப் பிரதிநிதி வரவேயில்லை. ஸ்பெயினின் உள்நாட்டுக் குழப்பத்தில் மற்ற நாடுகள் தலையிடாமலிருக்க என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்பதைப்பற்றித் திட்டம் வகுக்க ஒரு சிறு கமிட்டியை நியமித்துவிட்டு, இந்த மகாநாடு கலைந்துவிட்டது. இந்தக் கமிட்டி, பல தடவைகள் கூடிக்கூடிக் கலைந்தது. கடைசியில், ஸ்பெயினுக்கு எந்த நாடும், எந்த விதமான ஆள்பலத்தையோ ஆயுத பலத்தையோ உதவக்கூடாதென்றும், இந்தத் தடைத் திட்டமானது சரியானபடி நடைமுறையில் கொணரப் படுவதற்காக, ஸ்பெயினைச் சுற்றியுள்ள கடற் பிரதேசங்களில் ஒரு விதப்பாதுகாவல் ஏற்படுத்த வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தை இந்தக் கமிட்டி நிறைவேற்றியது. இந்தத் திட்டம் 1937ம் வருஷம் பிப்ரவரி மாதம் 20ந் தேதியிலிருந்து அமுலுக்குக்கொண்டுவரப் படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

---

§ போர்த்துகலில், தற்போது குடியரசு ஆட்சி முறையே நடைபெறுகிறதானாலும், அது பாசிஸ்ட் கொள்கையைத் தழுவியதாகவே இருக்கிறது. ஸ்பானிஷ் பாசிஸ்டுகளுக்கு, போர்த்துகலிலிருந்து அதிகமான உதவிகள் கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது. கில் ரோப்ளேஸும், ஜுவான்மார்ச்சும் கலகம் தொடங்கியவுடன் போர்த்துகலுக்குச் சென்றுவிட்டதன் காரணமும் இதுதான்.

கலகம் தொடங்கி எட்டு மாதங்கள் கழித்து, அதில் மற்ற நாடுகள் தலையிடாதிருப்பதற்குரிய வழிகள் என்னவென்பதைப் பற்றித் திட்டம் போடப்பட்டது! அதுவும் திட்டந்தான்! சமாதான வாத்தியம், எவ்வளவு ஈனஸ்வரத்துடன், அபஸ்வரத்துடன் கூட வாசிக்கப்படுகிறது!

# X

## சர்வாதிகாரமா? ஜன ஆதிக்கமா?

தற்போது உலகத்திலே இரண்டு விதமான சக்திகள் மோதிக்கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியம், பாசிஸம் என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிற சர்வாதிகார சக்தி ஒரு புறத்தில் தனது ஆயுத பலம், பொருள் வலிமை என்பனவற்றைத் துணையாகக் கொண்டு வீறிட்டு நிற்கிறது. அதற்கு எதிரில் நூற்றாண்டுகள் கணக்கில், தனது உரிமைக்காகப் போராடிப் போராடி வீழ்ந்தும் எழுந்தும் வந்திருக்கின்ற ஜன ஆதிக்க சக்தி, உண்மை, உழைப்பு, தியாகம் இவற்றைப் பக்கபலமாகக்கொண்டு மார் தட்டி நிற்கிறது. இந்த இரண்டு சக்திகளின் பகிரங்கமான மோதுதல்தான் 1936ம் வருஷம் ஜுலை மாதம் ஸ்பெயினில் தோன்றிய குழப்பம்.

இந்தக் குழப்பத்தில் எந்தச் சக்தி வெற்றி பெற்றாலும், அஃது உலகத்தையே பாதிக்கும் என்பது நிச்சயம். இதனாலேயே, ஏகாதிபத்திய சக்திகளெல்லாம் ஒன்றாகிரண்டு, தளபதி பிராங்கோவின் கலகத்திற்கு ஆசியளிக்கின்றன. அப்படியே, ஜன ஆதிக்க சக்திகளெல்லாம் கபல்லெரோவின் குடியரசு அரசாங்கத்திற்கு அநுதாபங் காட்டுகின்றன.$

---

$ "இன்று நமது போராட்டங்கள் ஸ்பெயினிலேநடைபெறுகின்றன. இந்தப் போராட்டத்தை, வெளியார் என்ற முறையில் அநுதாபத்துடன் மட்டும் நாம் கவனிக்கிறோமில்லை. இதில் கலந்துள்ளவர்களுக்கு இருக்கிற கவலையுடனும் இதனை நாம் கவனிக்கிறோம். ஸ்பெயின் தேசத்து ஆண்மையும் பெண்மையும் இங்ஙனம் அழிக்கப்படுவதைக் கண்டு, நமது நம்பிக்கைகளெல்லாம் சரிந்து விட்டனவே யென்று வருந்துகிறோம். சில சமயங்களில்

ஸ்பெயினில் தற்போது நிருவாகத்தை நடத்தி வரும் முன்னணி அரசாங்கமானது, ஏதோ ஒரு சில கட்சிகளின் பிணைப்பு என்றோ, அல்லது தற்காலிகமாக இவை ஒன்று கூடியிருக்கின்றனவென்றோ எவரும் கருதிவிடுவதற்கில்லை. தவிர, ஜன சமூகத்தின் தாழ்ந்த படியில் உள்ளவர்கள் மட்டுந்தான் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டுகிறார்கள் என்பதற்குமில்லை. ஜன சமூகத்தின் மேற்படியிலுள்ளவர்கள் என்று கருதப்படுகிற பணக்காரர்கள், பேரறிஞர்கள் முதலிய பலரும், போராட்டம் தீவிரமாகப் பரவப் பரவ அரசாங்கத்திற்கு அதிகமான ஆதரவு காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் முன்னணி அரசாங்கம், இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுமானால், அது தேசத்தின் பூரணப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாகவே இருக்கும்.§

தவிர, அரசாங்கத்தின் சார்பில், தேசத்தின் ஜீவ சக்திகளெல்லாம் திரண்டு, ஆண், பெண் என்ற வேற்று

---

ஒருவித ஏக்கமும் நம்மை ஆட்கொண்டு விடுகிறது. ஆனால் இந்த ஏக்கத்திலேகூட, ஸ்பானிஷ் சுதந்திர விளக்கு பிரகாசமாக எரிந்து, அதன் வெற்றியை உலகிற்கு நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஸ்பானிஷ் குடியரசு வாழவேண்டும், சுதந்திரம் நிலைக்கவேண்டும் என்பதற்காக அநேக ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் இறந்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் நாம் காண்பது போலவே, ஸ்பெயினிலும் இப்பொழுது சுதந்திரக்கோட்டையின் சுவர்கள் தகர்க்கப்படுவதைக் காண்கிறோம். இவை எத்தனை தடவை வீழ்ந்திருக்கின்றன! எத்தனை தடவை மீண்டும் கைப்பற்றப் பட்டிருக்கின்றன! எத்தனை தரம் அழிக்கப்பட்டிருக்கின்றன! மறுபடியும் கட்டப்பட்டிருக்கின்றன!"

—பெய்ஸ்பூர் காங்கிரஸில் ராஷ்ட்ரபதி ஜவஹர்லால்.

§ World Review—September 1936.

மையின்றிப் போர் புரிகின்றனர். பெண்கள், படைதாங்கிப் போர் புரிவதோடு மட்டும் நிற்கவில்லை. சிலர், தேசப் பாதுகாப்புக்கான காரியங்களைச் செய்கிறார்கள். இன்னும் சிலர், தாதிமார்களாக இருந்து காயமடைந்தவர்களுக்கு உபசாரஞ் செய்கிறார்கள். இன்னும் சிலர் ஆண்களுக்கு உற்சாக மூட்டும் பொருட்டுப் பிரசங்கங்கள் செய்தும், பாட்டுக்கள் பாடியும், உணவு அளித்தும் தொண்டு செய்கிறார்கள். சிறப்பாக, டோலொரெஸ் இபொர்ரி† என்ற நாரீமணி, ஆங்காங்குச் சென்று தனது பேச்சுத் திறமையினால், ஜனங்களை ஊக்கப்படுத்திவரும் காட்சியை எங்ஙனம் குறிப்பிடாமலிருக்க முடியும்?

பாசிஸ்டுகளுக்கு இத்தகைய பொதுஜன ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு கால் அவர்கள் இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்றால், அது பொதுஜன துவேஷத்தின் மத்தியில் நீடித்து வாழ முடியுமா வென்பது கேள்வி. அப்படி பாசிஸ்டுகள் வெற்றி பெற்றால் எந்த விதமான ஆட்சியைப் புகுத்துவார்கள் என்பது அநேகருடைய கேள்வியாயிருக்கிறது. மீண்டும் அவர்கள் முடியரசை நிலைக்கச் செய்வார்களா? அல்லது, ரோப்ளெஸோம் லெர்ருவும் ஒரு சமயம் கருதியபடி சர்வாதிகார ஆட்சியைப் புகுத்துவார்களா? இதைப்பற்றி ஒன்றும் இப்பொழுது சொல்வதற்கில்லை. ஆனால், மாஜி ஸ்பெயின் மன்னனாகிய அல்பான்ஸோ, பாசிஸ்டுகள் அடைந்து வரும் வெற்றிகளில் அதிக சந்தோஷங் காட்டுகிறான். 1937ம் வருஷம் பிப்ரவரி மாதம் மூன்றாவது வாரத்தில், இவன் பிராங்கோவின்

† La Passionaria என்று இவளை அழைப்பர். இவள் ஒரு சுரங்கத் தொழிலாளியின் மகள். தனது 17வது வயதிலேயே அபேதவாதக் கட்சியில் சேர்ந்துவிட்டாள்.

வெற்றிகளைப் பாராட்டி ஒரு செய்தியும் அனுப்பியிருக்கிறான். இவன், என்னவிதமான கனவு கண்டு கொண்டிருக்கிறானோ?

1937ம் வருஷம் பிப்ரவரி மாதத் தொடக்கத்தில், கபல்லெரோ அரசாங்கத்தார், கட்டாய ராணுவச் சேவக முறையை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்றனர். இதன் மூலமாக, தேசத்திலுள்ள வயது வந்த எல்லாரும் படை முகத்துக்குச் செல்லும் காட்சியைக் கவிகளே வருணிக்கவேண்டும்.

இந்தக் குழப்பத்திலே ஜனங்கள்படும் அவஸ்தை சொல்லி முடியாது. ஆனால் எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவற்றை எதிர்த்துப் போராடுவதில் ஸ்பானியர்கள் காட்டும் உணர்ச்சி போற்றத்தக்கது. அது மட்டுமல்ல. இந்தத் துன்பத்திலே அவர்கள் இன்பத்தையும் காண்கிறார்கள். கலகம் ஆரம்பித்து எட்டு மாதங்களுக்குள் சுமார் இரண்டு லட்சம் பேர் இறந்திருக்கிறார்கள். ஆனாலும் ஜனங்கள் சிறிது கூட மனத்தளர்ச்சி யடையவில்லை. 'மரண தேவதையிடத்தில் எங்கள் ஆயுதங்களை ஒப்புவிப்போமே தவிர, சத்துருக்கள் வசம் சிக்கவிடமாட்டோம்' என்ற ஒரே உறுதிதான் இவர்களிடத்தில் காணப்படுகிறது. 1937ம் வருஷம் பிப்ரவரி மாதம் மத்தியில், பாசிஸ்டுகள் வசம் மலாகா என்ற துறைமுகம் சிக்கிக்கொண்டது. இந்த ஊரிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள், சத்துருக்கள் வசம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாதென்று ஓடினார்கள். இந்தக் காட்சியை, கபல்லெரோ அரசாங்க மந்திரி யொருவன் பின் வருமாறு வருணிக்கிறான்:—

"மலாகாவிலிருந்த ஜனங்கள், கலகக்காரர்களுடைய கையில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாதென்று தப்பி ஓடி

னர்களே, அஃது ஒரு ஜன சமுத்திரம் திரண்டு செல்வதைப் போலவே இருந்தது. எதிர்பாராத இந்த ஆபத்து ஐரோப்பிய சரித்திரத்தில், எந்தச் சமூகத்தாருக்கும் ஏற்பட்டதில்லை. இந்த ஜனங்கள் மீது ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் விழுந்தன. யந்திர பீரங்கிகள் நெருப்பை வாரி இறைத்தன. பாதைகளெல்லாம் பிணங்கள் தான். குழந்தைகுட்டிகளுடன் சென்றவர்கள் நடக்க முடியாத நிலையில், குழந்தைகளின் கழுத்தை முறித்துக் கீழே போட்டு விட்டுப் போனார்கள். பாசிஸ்டுகள் கையில் தங்கள் குழந்தைகள் அகப்படக்கூடாதென்பது இவர்களுடைய நோக்கம். அப்படி குழந்தைகளைக் கொன்று விட்டபிறகு தாங்களும் தங்கள் தலைமீது பாறாங்கற்களை வேகமாகப்போட்டுக் கொண்டு இறந்தார்கள். அல்லது மோட்டார் லாரிகளின் சக்கரத்தின் கீழ் அகப்பட்டுக்கொண்டு மாண்டார்கள். இந்த ஜனத்திரளில் பல குழந்தைகள் காலில் மிதிபட்டு இறந்தன. நடக்கச் சக்தியற்ற வயோதிகர்கள், ஸ்திரீகள் முதலியோர் ஊர்ந்து சென்றார்கள். அப்படிச் சென்ற விடமெல்லாம் ரத்தக்கறை. இவர்களுக்கெல்லாம் குடிக்கத்தண்ணீரேது? சாப்பிட ஆகாரம் ஏது? படுக்க இடமேது?

ஸ்பெயினிலே இப்பொழுது நாம் என்ன காண்கிறோம்? வீடுகள் எரிகின்றன. ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் பொழிகின்றன. தாய்மார்கள், குழந்தைகளை மடியிலே வைத்துத் தாலாட்டிக் கொண்டிருக்கும்போது, அப்படியே துடிக்கத் துடிக்க உயிர் விடுகிறார்கள். புருஷன், துப்பாக்கி முனையிலே இறந்துபட, அவன் மனைவி வீரா வேசங் கொண்டு பழிதீர்க்கச் செல்கிறாள். நிரபராதிகளான வயோதிகர்கள், கர்ப்ப ஸ்திரீகள் முதலியோர் நிர்த்தாட்சண்யமாக, ஈவு இரக்கமின்றி பீரங்கிகளுக்கு இரையாக்கப்படுகிறார்கள்.

ஸ்பெயின் குழப்பமானது உலக யுத்தம் என்ற தீயை மூட்டிவிட்டு அதிலே தானும் ஐக்கியப்பட்டு விடுமா?



ஸ்பானிஷ் பெண்களின் யுத்த கோலம். இவர்கள் முகத்திலே புன் சிரிப்பும் உறுதியும் கலந்து கிடப்பதைக் காணலாம். குடியரசு அரசாங்கத்திற்காக இவர்கள் எல்லாத் தியாகங்களையும் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இளமையின்பம், இன்னுயிர் யாவும் தேசத்திற்கே என்பது இவர்கள் கொண்ட லட்சியம்.



ஸ்பெயின் தேசத்துக் கிராம வாழ்க்கை. ஸ்பெயின் தேசத்திற்குள் சுற்றுப் பிரயாணம் செய்யும் யாரும், அடியும் நுனியும் சிறுத்து, இடை பருத்த இந்த மண் ஜாடிகளைப் பார்க்காமலிருக்க முடியாது. இவைகளில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு வெகு தூரம் மிக அலட்சியமாக நடப்பார்கள் ஸ்பானிஷ் பெண்கள்.

உலகத்திலே இனி சர்வாதிகாரமா, அல்லது ஜன ஆதிக்கமா என்ற பிரச்னை ஸ்பெயினில் தீர்க்கப் படுமா?

இத்தகைய கேள்விகளை, உலக ராஜதந்திரிகள் ஆவலோடு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஸ்பெயினே! உன்னுடைய பதில் என்ன?

# ஸ்பெயின் குழப்பத்தில் சம்பந்தப்பட்டவர்கள் வரலாறு

*Largo Cab :llero*—லார்கோ கபல்லெரோ. இவனே, 1936ம் வருஷம் செப்டம்பர் மாதம் நான்காந் தேதி ஏற்பட்ட முன்னணி அரசாங்கத்தின் தலைவன். இவன், ஸ்பானிஷ் அபேதவாதக் கட்சியின் சிறந்த தலைவனாகவு மிருக்கிறான். ஐரோப்பிய அபேதவாத இயக்கத்தில் லெனின் எப்படி ஒரு காலத்தில் முக்கிய ஸ்தானத்தை வகித்தானோ அதே ஸ்தானத்தை இப்பொழுது கபல்லெரோ வகிக்கிறான் என்று சொல்லவேண்டும். இவன் 1869ம் வருஷம் அக்டோபர் மாதம் 18ந் தேதி ஓர் ஏழைக் குடியானவன் குடும்பத்தில் பிறந்தவன். இளமையில் இவன் கல்வி கற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை. ஏழு வயது முதற் கொண்டே சம்பாதிக்கத் தொடங்கிவிட்டான். ஆரம்பத்தில் கடற் படையில் கூலியாளாக அமர்ந்தும், பின்னர் சுண்ணும்பு பூசும் தொழிலில் ஈடுபட்டும் பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டு வந்தான். இருபது வயதுக்குப் பிறகுதான் இவன் எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டான். இவன் அபேதவாதக் கட்சியில் சேர்ந்து பல பொறுப்பான பதவிகளை வகித்தான். 1917ம் வருஷம் இவன், அரசாங்கத்தினால் ஆயுள் பரியந்தம் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பெற்றான். பின்னர் விடுதலை யடைந்து, 1931ம் வருஷ குடியரசு அரசாங்கத்தில் தொழில் மந்திரியாக நியமனம் பெற்றான். 1934ம் வருஷம் அக்டோபர் மாதம் ஏற்பட்ட புரட்சிக்கு இ வ ன் தூண்டுகோலா யிருந்தானென்று சொல்லி, லெர்ரு—ரோப்ளெஸ் அரசாங்கம், இவனைக் கைது செய்து விசாரணையின்றிப் பதின்மூன்று மாத காலம் சிறையில் வைத்திருந்தது. இவன் மனைவியை

யும் இழந்து விட்டான். இவனை 'ஸ்பானிஷ் லெனின்' என்று அனைவரும் அழைப்பர். இவன் பேச்சுக்களும் லெனின் பேச்சுக்களைப் போலவே உணர்ச்சியற்று, வெறும் உண்மையை மட்டும் எவ்விதச் சொல்லடுக்கும் இன்றிக் கூறுவதாக இருக்கும். உருவத்தில்கூட, லெனினும் இவனும் ஏறக்குறைய ஒரு மாதிரியாகவே இருப்பார்கள். இவனுக்கு, ஸ்பெயினில் சென்ற விடமெல்லாம் சிறப்பு உண்டு.

*Alvarez Vayo*—அல்வரேஸ் வயோ. அபேதவாதக் கட்சியில் தீவிரமானவன். ஸ்பெயினிலுள்ள சிறந்த அறிஞர்களுள் ஒருவன். பத்திரிகா நிபுணன். பெரிய ராஜ தந்திரி. குடியரசு அரசாங்கத்தின் கீழ், மெக்ஸிகோவுக்கு ஸ்பெயின் ஸ்தானீகனாகச் சென்றிருந்தான்.

*Indelecio Prieto*—இண்டெலேஷியோ ப்ரீடோ. மிகப் பெரிய உருவினன். உருவத்திற்குத் தகுந்த குரல். குரலுக்கேற்ற நாவன்மை. கட்சிச் சண்டையில் கெட்டிக்காரன். எதிர்க் கட்சியினர் எப்பொழுதுமே இவனைக் கண்டு பயப்படுவதுண்டு.

*Hernandez* — ஹெர்னண்டேஸ். பொதுவுடமைக் கட்சியில் தீவிர வாதி. ஆனால் நிதான புத்தியுடையவன். முன்னணிக் கட்சி அரசாங்கத்தில் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டான். அப்பொழுது இவனுக்கு வயது 28. இள வயதிலே பொறுப்புள்ள பதவியை வகித்த அறிஞர் குழுவைச் சேர்ந்தவன்.

*Gil Robles*—கில் ரோப்ளேஸ். 27-11-1898ல் ஸாலமங்கா என்ற ஊரில் ஒரு கல்லூரி ஆசிரியனின் மகனாகப் பிறந்தவன். சட்டக் கல்லூரியில் பயின்

சட்ட போதகாசிரியனாகவும் உத்தியோகம் பார்த்தான். 1923ம் வருஷம் இவன் இந்த உத்தியோகத்தை விடுத்து அரசியலில் புகுந்தான். பத்திரிகாசிரியனாக வேலை பார்த்தான். நிலச்சுவான்தார்கள், பாதிரிமார்கள் ஆகிய இவர்களுடைய கட்சியை ஆதரித்தான். அவர்களுக்காக பார்லிமெண்டில் போராடினான். இவன், குடியரசாங்கத்திற்கு விரோதமாகவே எப்பொழுதும் நடந்து கொண்டு வந்தான். பணக்காரர்களுடைய ஆதரவு இவனுக்கு மிகவும் அதிகம். 1936ம் வருஷம் ஜுலை மாதம் கலகம் தொடங்கியதும் இவன் போர்த்துகலுக்குச் சென்று விட்டான்.

*Alejandro Lerroux*—அலெஜாந்த்ரோ லெர்ரு. இவன் 1864ம் வருஷம் பிறந்தவன். பிற்போக்கான கொள்கைகளை யுடையவன். குடியரசு அரசாங்கத்தை வாழவிடக் கூடாதென்ற நோக்கத்துடன், 1931ம் வருஷம் ஏற்பட்ட தற்காலிகக் குடியரசு அரசாங்கத்தில் அந்நிய நாட்டு மந்திரிப் பதவியை ஏற்றுக் கொண்டான். 1933ம் வருஷத்திலிருந்து 1936ம் வருஷத்திற்குள் நான்கு முறை பிரதம மந்திரிப்பதவியை வகித்திருக்கிறான். 1934ம் வருஷத்திலிருந்து 1936ம் வருஷம் வரை ஸ்பெயினில் நடைபெற்ற அடக்கு முறைகளுக்கெல்லாம் இவனும் ரோப்ளெஸூம் பொறுப்பாளிகளாவார்கள்.

*Francisco Franco*—பிரான்சிஸ்கோ பிராங்கோ. இவன் பாசிஸ்ட் படைகளின் பிரதம சேனாதிபதி. இவனுக்கு இது போழ்து 46 வயதுதான் ஆகிறது. 32 வது வயதிலேயே ராணுவத்தில் இவனுக்கு ஒரு படைத் தலைவன் பதவி கொடுக்கப்பட்டது. மொராக்கோவிலுள்ள அந்நியப் படைகளின் தலைவனாக இவன் 1921ம் வருஷத்திலிருந்து 1926ம் வருஷம்

வரை உத்தியோகம் பார்த்தான். 1934ம் வருஷம், அஸ்டூரியா மாகாணத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த போழ்து அவர்களை மன மிரக்கமின்றி அடக்கினன். 1936ம் வருஷம் பிப்ரவரி மாதம் முன்னணி அரசாங்கத்தினர் பதவி ஏற்றுக்கொண்ட பிறகு இவன், கானரி தீவுகளின் நிருவாகஸ்தனுக அனுப்பப் பெற்றான். அங்கிருந்துதான் இவன் கலகத்திற்குக் கிளம்பியது.

*Emilio Mola*—எமிலியோ மோலா. இவன் ஸ்பானிஷ் தொழிலாளர்களின் துவேஷத்தைப் பெற்றுள்ளவர்களில் ஒருவன். 1931ம் வருஷம் குடியரசு அரசாங்கம் ஏற்பட்டபோது அதற்குள் புகுந்து அரித்தவர்களுள் சிறந்தவன். இவன் போலீஸ் படைத் தலைவனுக இருந்து வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களையும், விவசாயிகளையும் நிர்த்தாட்சண்யமாக நடத்தியிருக்கிறான்.

*Queipo de Llano*—குவிபோ டி லானே. குடியரசுக்கு முடியரசினால் அளிக்கப்பட்ட ஒரு நன்கொடை என்று இவனைச் சொல்லலாம். ஆனால் இவன் ஒரு காலத்தில், முடியரசுக்கு விரோதமாகக் கலகம் செய்தவன். இவன் பின்னர், போர்த்துகலுக்கு அனுப்பப்பட்டான். பிராங்கோவின் முயற்சியால் இவன் மீண்டும் வரவழைக்கப்பட்டு, செவில்லேயிலிருந்த பாசிஸ்ட் படைத் தலைவனுக நியமனம் பெற்றான்.

*Domingo Batet*—டாமிங்கோ பாடேட். 1934ம் வருஷம் காடலோனியாவில் எழுந்த கலகத்தை அடக்கியவன். கலகத்திற்குக் காரணமாயிருந்த லூயி கொம்பனிஸ் என்பவனை முப்பது வருஷ சிறைவாசத்திற்கு அனுப்பிய பெருமை இவனுடையதே.

*Jose Sanjurjo*—ஜோஸே ஸான்ஜுர்ஜோ. பாசிஸ்ட் படைத் தலைவன். 1932ம் வருஷம் புரட்சிக்குக் கிளம்பித் தோல்வி யடைந்தவன். இவன் 1936ம் வருஷம் ஜுலை மாதம் 20ந் தேதி ஆகாய விமானத்திலிருந்து விழுந்து இறந்த போது இவனுக்கு வயது 65. இவன் நிரம்ப அநுபவமுடையவன் என்றும், பாசிஸ்ட் கட்சி வெற்றியடைந்தால் ஸ்பெயின் அரசாங்கத்தின் தலைவனாக நியமிக்கப்படலாமென்றும் சொல்லப்பட்டு வந்தது.

*Jose Rivera*—ஜோஸே ரிவேரா. இவன் ப்ரிமோ டி ரிவேராவின் மகன். ஜெர்மனியில் 'சூறாவளிப் படை' ஏற்படுத்தப்பெற்ற மாதிரி, ஸ்பானிஷ் படை (*Spanish Phalanx*) யொன்றை ஏற்படுத்தினான். இவன் 1934ம் வருஷம் ஹிட்லரைக் கண்டு பேசியதாகவும் சொல்லப்படுகிறது.

*Zamora*—ஜமோரா. அல்பான்ஸோ மன்னன், 1931ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14ந் தேதி, தனது அரசுரிமையை விடுத்துச் சென்ற பிறகு, ஸ்பெயினில் ஏற்பட்ட தற்காலிகக் குடியரசு அரசாங்கத்தின் தலைவனாயிருந்தவன். பிறகு சட்ட பூர்வமாக ஸ்திரப்படுத்தப்பட்ட குடியரசின் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். இந்தப்பதவியை 10-12-1931 முதல் 6-4-1936 வரையில் வகித்தான். பிறகு, இவன் பார்லிமெண்டின் பெரும் பான்மையான வாக்குகளால் விலக்கப்பட்டான். (பக்கம்55) இவன் அரசியலில் பிற்போக்கான கொள்கை கொண்டவன். இவன் வெளிக்குக் குடியரசு வேஷம் போட்டுக் கொண்டிருந்தானாயினும் உண்மையில் அதன் முற்போக்குக்குத் தடையாயிருந்தவன்.

***Azana***—அஜனு. குடியரசுக் கட்சியில் தீவிரவாதி. 1931ம் வருஷம் அக்டோபர் மாதத்திலிருந்து 1933ம்

வருஷம் செப்டம்பர் மாதம் வரையிலும், 19-2-36 முதல் 10-5-36 வரையிலும் குடியரசு அரசாங்கத்தில் பிரதம மந்திரியாயிருந்தவன். 10-5-36ல் குடியரசின் இரண்டாவது தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான்.

*Aznar*—அஸ்நர். சிறந்த கப்பற் படைத்தலைவன். அல்பான்ஸோ மன்னனின் கீழ் 18-2-31 முதல் 13-4-31 வரை பிரதம மந்திரியாயிருந்தான்.

*Berenguer*—பெரேங்குயர். முடியரசைத் தாங்கி நின்ற ஒரு சேனா வீரன். 30–1–30 முதல் 18-2-31 வரை முடியரசாங்கத்தில் பிரதம மந்திரியாயிருந்தவன்.

*Calvo Sotelo*—கால்வோ ஸோடேலோ. பாசிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன். ரிவேராவின் சர்வாதிகார அரசாங்கத்தில் பொக்கிஷ மந்திரியாயிருந்தவன். 13-7-36ல் கொலை செய்யப்பட்டான். இதுவே, 1936ம் வருஷம் ஜூலை 17ந் தேதி ஏற்பட்ட குழப்பத்திற்குக் காரணமாயிருந்தது.

*Quiroga*—குவிரோகா. குடியரசுக் கட்சியில் தீவிரவாதி. கலீஷியா மாகாணத்தில் நிரம்பச் செல்வாக்குடையவன். 13-5-36 முதல் 18-7-36 வரை உள்நாட்டு மந்திரியாயிருந்தான்.

# முக்கிய சம்பவங்கள்

1898. ஸ்பெயின், குடியேற்ற நாடுகளை இழந்தது.
1909. பார்ஸிலோனுவில் குழப்பம் ஏற்பட்டது.
1923. பிரிமோ டி ரிவேரா, ஸ்பெயினின் சர்வாதிகாரியானது.
1930. பிரிமோ டி ரிவேரா சர்வாதிகாரப் பதவியினின்று விலகியது.
1931. குடியரசு ஸ்தாபிதம். அல்பான்ஸோ அரசன் ஸ்பெயினை விட்டுச் சென்றது. ஜமோரா, குடியரசுத் தலைவனுனது.
1932. காடலோனியாவுக்கு மாகாண சுதந்திரம் ஓரளவு அளிக்கப்பட்டது.
1933. பாசிஸ்டுகளின் பிரசாரம். லெர்ரு பிரதம மந்திரியானது.
1934. தொழிலாளர்களின் வேலை நிறுத்தம். அடக்குமுறை ஆர்ப்பாட்டம்.
1935. லெர்ரு—ரோப்ளெஸ் கூட்டுறவின் ஆதிக்கம்.
1936. பார்லிமெண்ட் தேர்தல். பொதுஜன முன்னணிக் கட்சியின் வெற்றி. ஜமோரா, குடியரசுத் தலைமைப் பதவியினின்று இறக்கப்பட்டது. அஜனு குடியரசுத் தலைவனுனது. கால்வோ ஸோடெலோவின் கொலை. ஜுலை மாதம் 17ந் தேதி பாசிஸ்டுகளின் குழப்பம்.
1937. ஸ்பெயின் குழப்பத்தில் வல்லரசுகள் தலையிடக் கூடாதென்று போட்ட திட்டம் ஓரளவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. குடியரசு அரசாங்கத்தார் கட்டாய ராணுவச் சேவகத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது.

# பொதுக் குறிப்புகள்

பழக்க வழக்கங்கள்:

ஸ்பெயின் பல சமூகத்தவர்கள் அடங்கிய ஒரு நாடாக இருப்பதனால், ஸ்பானியர்களின் பொதுவான பழக்க வழக்கங்கள் இன்னவையென்று நிர்ணயித்துக் கூறிவிடுவதற்கில்லை. ஆனால் பொதுவாக, இவர்கள் எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அவற்றைப் பொருட் படுத்தாமல் சந்தோஷமாக இருப்பார்கள். இவர்களுக் குத் தங்கள் பழமையிலே ஒரு பெருமையும், எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கையும் உண்டு. குரூரமான விளை யாட்டுகளில் நிரம்பப் பிரியமுடையவர்கள். காளை மாடு களைக் கொழுமையாக வளர்த்து அவற்றோடு சண்டை யிடுவது இவர்களுடைய முக்கியமான விளையாட்டுகளில் ஒன்று. இத்தகைய மாட்டுச் சண்டைகள், திருவிழாக் கள் போல் நடைபெறும். ஆயிரக்கணக்கான ஜனங் கள் வேடிக்கை பார்க்கக் கூடுவார்கள். எப்படி சிலர் குதிரைப் பந்தயத்திற்காகக் குதிரைகளைக் கருத்துடன் வளர்க்கிறார்களோ அப்படியே, ஸ்பெயினில் காளை மாடு களை வளர்ப்பார்கள். இதற்காகப் பணக்காரர்கள் ஆயி ரக்கணக்கான பணத்தைச் செலவழிப்பார்கள். காளை மாடுகளைப் போலவே குதிரைகளையும் வளர்ப்பார்கள். இந்தமாதிரியான விளையாட்டுகளுக்காக, வருஷத்தில் சுமார் மூவாயிரம் பிராணிகள் பலியாகின்றன. ஆனால் சென்ற சில வருஷங்களாக, இந்த ரத்தவெறி பிடித்த விளையாட்டுகள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்பானியர்கள் சிக்கனமாக வாழ்க்கையை நடத்து வார்கள். எதிலும் மிதத்தன்மை யுடையவர்கள். ஆகார த்தில் அதிகமான வெள்ளைப்பூண்டைச் சேர்த்துக்கொள் வார்கள். ஆகாரம் முதலியவற்றில் மிதமாக இருந்தா

லும், ஸ்பானியர்கள் பொதுவாக தேக பலமும் மனே உறுதியும் கொண்டவர்கள். எதனையும் எளிதில் விட்டுக் கொடுத்துவிட மாட்டார்கள். ஆனல் அடிக்கடி மாறுதல்களை விரும்புவார்கள். அரசியல், இலக்கியம், சமூக வாழ்க்கை முதலிய ஏதேனுமொன்றில் அடிக்கடி இவர்கள் மாற்றங்களைக் காணவே ஆசை கொள்வார்கள்.

ஆண்களும் பெண்களும் நிரம்பப் பொறுமையுடையவர்கள். குடி தண்ணீர் அகப்படாத கிராமங்களில் பெண்கள் தலைமேல் பெரிய மண் ஜாடிகளை வைத்துக் கொண்டு மைல் கணக்கான தூரம் சென்று தண்ணீர் கொண்டு வருவார்கள். இங்ஙனமே ஆண்களும் ஜீவனேபாயத்திற்காக மைல் கணக்காக நடந்து செல்லப் பின் வாங்கமாட்டார்கள்.

முக்கிய நகரங்கள்:

| | | | |
|---|---|---|---|
| மாட்ரிட் | — ஜனத்தொகை சுமார் | 10 | லட்சம் |
| பார்ஸிலோனு | — ,, | 11 | ,, |
| வாலென்ஷியா | — ,, | 3½ | ,, |
| செவில்லே | — ,, | 2½ | ,, |
| மலாகா | — ,, | 2 | ,, |
| ஸர்கோஸா | — ,, | 1¼ | ,, |
| மூர்ஷியா | — ,, | 1¾ | ,, |
| பில்போ | — ,, | 2 | , |

ஐம்பதினயிரம் பேருக்கு அதிகமான ஜனத் தொகையுடைய நகரங்கள் மொத்தம் 18 உண்டு.

தேசீயக்கொடி: சிவப்பு, மஞ்சள், ஊதா ஆகிய மூவர்ணங்களும் வரிசையாகக் கிழக்கு மேற்கில் தீட்டப்பெற்றிருக்கும்.

குடியேற்ற நாடுகள்: ஆப்ரிக்கா கண்டத்தின் சமுத்திரக் கரை யோரமாகவுள்ள சில சிறிய தீவுகள் ஸ்பெயினுக்குச் சொந்தம். இவையனைத்தையும் சேர்த்த மொத்த விஸ்தீரணம் 82,400 சதுர மைல். மொத்த ஜனத்தொகை 275,000. இவற்றுள் முக்கியமானது, ஆப்ரிக்காவின் வடக்கேயுள்ள மொராக்கோ. இங்கே ஸ்பானியர்களும், பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறார்கள். மொராக்கோ வாசிகள், ஸ்பெயினுக்கு விரோதமாகப் படை தூக்கி 1920ம் வருஷம் முதல் 1926ம் வருஷம் வரை போர் புரிந்தார்கள். இவர்களின் தலைவனான அப்துல் கரீம், கடைசியில் பிரெஞ்சுக்காரருடைய ஆயுதபலத்திற்கு முன்னர் சரணடைந்து விட்டான். இதன் பிறகு, ஒரு பாகத்தில் ஸ்பானியரும், மற்றொரு பாகத்தில் பிரெஞ்சுக்காரரும், பெயரளவில் ஒரு சுல்தானை வைத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

நாணயம்: பெஸேடா, ஸெண்டிஸ்மோ முதலியன நாணய வகைகள். நூறு ஸெண்டிஸ்மோக்கள் கொண்டது ஒரு பெஸேடா.

பெயர்கள்:

ஸெஞோர்-Senor—ஸ்ரீமான் என்பதுபோல.

கோர்டெஸ்—Cortes—Courts என்பதன் திரிபு. ஸ்பெயினின் பார்லிமெண்டுக்குப் பெயர்.

கட்சிகள் :

அபேதவாதக்கட்சி—Socialist Party
குடியரசுக்கட்சி—Republican Party
பொதுவுடைமைக்கட்சி—Communist Party


இந்தக் கட்சிகளிலேயே தீவிர வாதிகளென்றும் மிதவாதிகளென்றும் பல பிரிவினர், தனித்தனிக் கிளைக் கட்சிகளாக வகுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தொழிலாளர்கள் தனித்தனிக்கட்சிகள் வகுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தீவிர நோக்குடைய எல்லாக் கட்சிகளும் சேர்ந்ததே 'முன்னணிக்கட்சி'—People's Front.

இவை தவிர கன்ஸர்வேடிவ் கட்சி, ஜனநாயகக் கட்சி, தேசியக்கட்சி முதலியன இருக்கின்றன. இவை முதலாளிகள், பாதிரி மார்கள், நிலச்சுவான்தார் கள் முதலியோருடைய கொள்கைகளை ஆதரிக்குங் கட்சிகள்.

# ஸ்பெயின் குழப்பம்




MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41

எழுதியது

வெ. சாமிநாத சர்மா